Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 8-12-2006 Issued 8-12-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 26, 2006—தொகுதி 5—எண் 1

**Wednesday the 26th July, 2006—Volume 5—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 3, 1006.
Pob. 5. 1
227380

[Price Rs. 3.00

7/16
29.3.2007

**26-7-2006**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii -viii |
| Governor and Council of Ministers | ix - xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| 1. **திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்**—தொடர்ச்சி | 1,3-69. 71-74, 79-125 |
| *மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி | 3-11 |
| *திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி | 12-21 |
| *திரு. எச். வசந்தகுமார் | 21-23, 25-27 |
| *திரு. கோ. எதிரொலி மணியன் | 28-40 |
| *திரு. கே. மகேந்திரன் | 40-50 |
| திரு. கே. உலகநாதன் | 50-57 |
| *திரு. ஆர். ஞானதாஸ் | 57-62 |
| *திரு. செ.ம. வேலுசாமி | 62 - 67 |
| திரு. பொங்கலூர் நா. பழனிசாமி | 71 - 74, 79 - 87 |

பக்கங்கள்

1. **திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்**—தொடர்ச்சி

*திரு. என்.ஆர். ரங்கராஜன் 87 - 94

*திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் 94 - 101

திரு. க. சுந்தர் 101 - 116

திரு. சி. ஞானசேகரன் 116 - 125

2. **தகவல் கோரல்**—

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 2 - 3

3. **விதி 110–ன்கீழ் அறிக்கை**—

சிறுதாவூர் தலித் மக்களின் நிலங்கள் அபகரிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக் கமிஷன் அமைத்தல்-மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 70 - 71

4. **சிறுதாவூர் தலித் மக்களின் நிலங்கள் அபகரிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை கமிஷன் அமைத்ததற்குப் பாராட்டுரைகள்**— 74 - 79

திரு. சி. கோவிந்தசாமி 74 - 79

திரு. டி. சுதர்சனம் 74, 75

திரு. ஜி.கே. மணி 75 - 76

திரு. வை. சிவபுண்ணியம் 76 - 77

5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 125



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி–தமிழ்ப் பண்பாடு மற்றும் சட்டவுச் சீட்டுகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்: @**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ... காப்பகம்
22738
சென்னை-600 008

---

@ [illegible] மித்தம் அவரது பொறுப்பிலிருந்த பொருள்கள் தற்காலிகமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டன.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

*தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

19. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்*

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்*

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

*வணிக வரிகள்*

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)*

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

*வனம் மற்றும் சின்கோனா*

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

*நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்*

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Union, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan: @**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

@ Due to illness subjects allocated temporarily to Hon. Minister for Higher Education



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 19. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 20. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 21. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 22. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 25. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home. |
| 26. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 *அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>எம்.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - | குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு,<br>எம்.ஏ., பி.எல்., பி.எட். | - | துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செய்லாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன்,<br>எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - | சார்புச் செயலாளர் |
| திரு. த.ரா. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - | தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - | பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி,<br>எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - | தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராயநகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. | கோபாலன், திரு. போ. | - உதகமண்டலம் |
| 66. | கோபிநாத், திரு. கே. | - ஓசூர் |
| 67. | கோவிந்தசாமி, திரு. சி. | - திருப்பூர் |
| 68. | கோவை தங்கம், திரு. | - வால்பாறை (செ.வ.) |
| 69. | சக்கரபாணி, திரு. அர. | - ஒட்டன்சத்திரம் |
| 70. | சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 71. | சண்முகம், திரு. எஸ்.வி. | - மதுரை மேற்கு |
| 72. | சண்முகம், திரு. சி.வி. | - திண்டிவனம் |
| 73. | சண்முகவேலு, திரு. சி. | - உடுமலைப்பேட்டை |
| 74. | சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. | - வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 75. | சந்திரகாசி, திரு. மா. | - வரகூர் (செ.வ.) |
| 76. | சந்திரா, திருமதி மு. | - ராஜபாளையம் (செ.வ.) |
| 77. | சாமி, திரு. ஆர். | - மேலூர் |
| 78. | சாமி, திரு. கே.பி.பி. | - திருவொற்றியூர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | - வெள்ளக்கோவில் |
| 80. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | - ஆண்டிமடம் |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | - மன்னார்குடி |
| 82. | சிவராஜ், திரு. சு. | - ரிஷிவந்தியம் |
| 83. | சிவானந்தம், திரு. ஆர். | - ஆரணி |
| 84. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | - திருவள்ளூர் |
| 85. | சின்னசாமி, திரு. அ. | - பேரணாம்பட்டு (செ.வ.) |
| 86. | சின்னசாமி, திரு. ஆர். | - சிங்காநல்லூர் |



| | | |
|---|---|---|
| 87. | சின்னச்சாமி, திரு. செ. | .. மருங்காபுரி |
| 88. | சின்னதுரை, திரு. கு. | .. தலைவாசல் (செ.வ.) |
| 89. | சின்னப்பன், திரு. பொ. | .. விளாத்திகுளம் |
| 90. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 91. | சீனிவாசன், திரு. கு. | .. பூங்கா நகர் |
| 92. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 93. | சுந்தரம், திரு. எம்.ஆர். | .. ஆத்தூர் |
| 94. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 95. | சுந்தர், திரு. க. | .. உத்திரமேரூர் |
| 96. | சுப்பிரமணியம், திரு. ஓ. | .. பவானிசாகர் |
| 97. | சுப்புராம், திரு. ராம. | .. திருமயம் |
| 98. | சுப்ரமணியன், திரு. ந. | .. குளத்தூர் (செ.வ.) |
| 99. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 100. | சூரியகுமார், திரு. என்.கே.ஆர். | .. நாட்றாம்பள்ளி |
| 101. | செங்குட்டுவன், திரு. டி. | .. கிருஷ்ணகிரி |
| 102. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 103. | செந்தமிழன், திரு. ஞா. | .. சைதாப்பேட்டை |
| 104. | செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. | .. மேல்மலையனூர் |
| 105. | செந்தில் பாலாஜி, திரு. வே. | .. கரூர் |
| 106. | செல்வம், திரு. கு. | .. மங்களூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. என். | .. முசிறி |
| 108. | செல்வராஜ், திரு. து. | .. ஸ்ரீவைகுண்டம் |
| 109. | செல்வி ராமஜெயம், திருமதி | .. புவனகிரி |

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரா. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

| | | |
|---|---|---|
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் திருமதி | .. ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | .. பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | .. பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி<br>வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | .. சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | .. பெருந்துறை |
| 168. | போளூர் வரதன், திரு. ம. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | .. உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | .. திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | .. பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | .. மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |



| | | |
|---|---|---|
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்-1 |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமசந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |

| | | |
|---|---|---|
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 205. | லீமா ரோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. டெ.சு. | .. போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. | ஜான் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜான் ஜோசப், திரு. ஜா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. பூ. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆல்காட் இ. நிக்ஸி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 10, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 26, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்"*

*நீதி வழுவாமல் ஓர் அரசு நடைபெற்றால் அந்த அரசை அந்த நீதியே காப்பாற்றும்.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி. (குறுக்கீடு)*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் பிரச்சினை குறித்து தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதைப்பற்றிப் பேசுவதற்குத் தாங்கள் அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள், பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். அதற்குப் பிறகு பேசலாம். திரு. வீ.பெ. துரைசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—*

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, எளிமையான வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, ஏழையெளிய மக்களுக்காக (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள், ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆய்விலே இருக்கிறது, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி எண் 221—ஐப் பற்றி நீங்கள் எல்லோரும் தெரிந்தவர்கள். நிறைய தடவை சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கிறீர்கள், அமைச்சர்களாக இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) விதி எண் 221—ல் (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தெரியும். (குறுக்கீடுகள்) நான் பேசிக் கொண்டிருக்கும்போது யாரும் குறுக்கிடக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*விதி எண் 221—ல், "உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப பேரவைத் தலைவர் அனுமதி அளித்தபின், அவ்வுரிமைப் பிரச்சினையை வினாக்களுக்குப் பின்னரும், அந்நாள் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்*





*பெற்றுள்ள அலுவல்களுக்கு முன்னரும், எழுப்பப் பெறவேண்டும். எனினும், பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழும் 'உரிமைப் பிரச்சினை' ஒன்று உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறும்." அதாவது இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? (குறுக்கீடுகள்) ஆய்விலே இருக்கிறது, பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வீ.பெ. துரைசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

## 1. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, எளிமையான வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, ஏழையெளிய மக்களுடைய வளர்ச்சிக்காக, மேம்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத் திட்டம்தான், 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, இந்திய நாட்டினுடைய மூத்த அரசியல் தலைவர் என்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழகத்தில் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் முதலமைச்சர் என்பதும், வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த (மேசையைத் தட்டும் ஒலி) முதல் முதலமைச்சர் என்ற பெருமையையும் கொண்டவர் நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அரசியல் முதிர்ச்சி கொண்ட நமது பேராசிரியர் பெருந்தகை அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையினை சர்வ சாதாரண மக்களுக்கும் பயன் கிடைக்கின்ற வகையிலே தாக்கல் செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*தேர்தலிலே எப்படியாவது வெற்றி பெறவேண்டுமென்று சில அரசியல் கட்சித் தலைவர்கள் வாக்குறுதிகளை மக்களுக்காக வழங்குகின்றார்கள்.*

ஆனால், நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற, 122 மக்கள் நலஞ்சார்ந்த திட்டங்களைத் தேர்தல் அறிக்கையிலே அறிவிக்கச் செய்து, அதனைத் தமிழக மக்கள் 100 சதவிகிதம் ஏற்றுக்கொண்டு, தலைவர் தலைமையிலே அமைந்த அந்தக் கூட்டணிக்கு, மூன்றில் இரண்டு மடங்கு வாக்குகளை அளித்து, ஆதரவு அளித்து, நமது ஒப்பற்ற தலைவர்மீது நூறு சதவிகித நம்பிக்கை கொண்டு, ஐந்தாவது முறையாக அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு மக்கள் வாக்குகளை வழங்கியிருக்கின்றார்கள். அதேநேரத்தில் எங்களைப்போன்ற உறுப்பினர்களையும் இந்த அவைக்கு அனுப்பியிருக்கின்றார்கள். தமிழர்களுடைய நலனுக்காக, 1996–2001 சட்டப்பேரவையில், 86 மணி நேரம், 17 நிமிடங்கள் உரையாற்றிய ஒரே தலைவர் நமது ஒப்பற்ற தலைவர், ஐந்தாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-35

தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளைப் பிரகடனம் செய்தபொழுது, சில எதிர்க்கட்சித் தலைவர்கள், இது சாமானிய மக்களுக்காக வகுக்கப்பட்ட, பிரகடனப்படுத்தப்பட்ட வாக்குறுதிகள் என்று ஏற்றுக்கொள்ளாமல், not feasible என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய அந்த வாக்குறுதிகள் சாத்தியப்படக்கூடியவை அல்ல, நிறைவேற்றத் தக்கதல்ல, பொருளாதாரம் இடங்கொடுக்காது என்ற குறுகிய எண்ணத்தில், அவர்கள் அந்தக் கருத்தினை மக்களிடத்திலே எடுத்து வைத்தார்கள்.

இந்திய நாட்டினுடைய நிதியமைச்சர் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ள வாக்குறுதிகள் அத்தனையும் நிறைவேற்றக்கூடியவை, சாத்தியமானவை என்று சொன்னார்கள். பிறகு தலைவர் கலைஞர் அவர்கள், பத்திரிகையாளர்களை அழைத்து, "சாத்தியமில்லை என்ற கருத்தைச் சொல்லி வருகின்றார்கள். நான் வழங்கிய வாக்குறுதிகள் அத்தனையும், தமிழர்களுடைய மேம்பாட்டிற்காக, வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இது சாத்தியப்படக்கூடியதுதான். அதை நான், நிதிநிலை அறிக்கையாகத் தயாரிப்பேன்" என்று பத்திரிகையாளர்களிடம் சொன்னார்கள். தேர்தல் வெற்றிக்குப் பிறகு, பதவியேற்ற சில மணி நேரத்தில், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கும், விவசாயிகள் பட்ட கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்கு



சற்றொப்ப 7,000 கோடி ரூபாயும், சத்துணவுடன் முட்டைகளையும் வழங்கி உத்தரவிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், அந்த 'சாத்தியமற்ற' என்ற வார்த்தையை தகர்த்தெறிந்து, not feasible என்பதை மாற்றி, it is feasible, it is possible, it is viable என்ற தத்துவத்தை இந்த நாட்டிற்கு வழங்கியிருக்கின்றார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி மட்டுமல்லாமல், 1,000 கோடி ரூபாயை விவசாயிகளுக்குப் பயிர்க்காலக் கடனாக நிதியொதுக்கீடு செய்து, 435 கோடி ரூபாயை நபார்டு வங்கிக் கடனைக் கட்டுவதற்கும் நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். நேற்றையதினம் நபார்டு வங்கி அதிகாரிகளெல்லாம், அதிகாரிகளுடைய கூட்டத்தைக் கூட்டி, 435 கோடி ரூபாயைத் தமிழக அரசு கடனுக்காக ஒதுக்கியிருப்பதை வரவேற்றுப் பேசி, அந்த வங்கியினுடைய அலுவலர்கள் அத்தனை பேரும் re-financing திட்டத்தைக்கூட ஆதரித்து, நபார்டு வங்கியின்மூலமாக அதிகபடசக் கடனை ஒதுக்குவதற்கு முன்வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது, நமக்கு மகிழ்ச்சியை வழங்குகிறது. மீதமுள்ள 5,431 கோடி ரூபாயையும், அதற்குண்டான வட்டியையும் செலுத்துவதற்கு நமது நிதிநிலை அறிக்கையிலே உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு நலஞ்சார்ந்த அரசு எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாக இருப்பது, நமது ஒப்பற்ற தலைவர் கலைஞர் தலைமையிலே அமைந்துள்ள இந்த அரசு. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இந்த மூன்றும் வழங்கக்கூடிய ஒரு அரசுதான் நலஞ்சார்ந்த அரசு. உடுக்க உடை, சலுகை விலையிலே அரிசி, இலவச வேட்டி சேலைகள் வழங்குவதற்கு ஆதாரமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்த நாட்டினுடைய முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற நமது தலைவர் கலைஞர் அவர்கள், தேர்தலை மையமாக வைத்தோ, வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்காகவோ, வாக்குறுதிகளை வழங்கக்கூடியவர்கள் அல்ல.

தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே, அடுத்த தலைமுறையை, இளைஞர்களை எண்ணிப் பார்த்து, தமிழர்களுடைய விழிப்புணர்வுக்காக, வளர்ச்சிக்காக, சமூக நீதிக்காக ஆட்சியையும், கட்சியையும் நடத்துகின்ற ஒரே காரணத்திற்காகத்தான் சமூக நீதி காத்த தலைவர், 65 ஆண்டு காலம் தொடர்ந்து அரசியலில் தலைவராக, தமிழர்களுடைய தலைவராக இன்றைக்கும் இருந்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 9-40*

அடுத்தது, காவல் துறை. 1969 ஆம் ஆண்டிலே போலீஸ் கமிஷனை நமது ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். இந்தத் துறையினை நவீனமயமாக்குவதற்கு 86 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதேபோல தீயணைப்புத் துறைக்கு ரூ.23 கோடி நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். 1972 ஆம் ஆண்டு, பெண் காவலர்களை நியமித்ததும் தலைவர் கலைஞர் காலத்தில்தான்.

இந்த நேரத்தில் ஒன்றே ஒன்றைச் சொல்லவேண்டும். 2001 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர்மீது எந்தவித குற்றச்சாட்டுக்கும் ஆதாரமில்லாமல் ஜூன் 30 ஆம் தேதி இரவு ஒரு சாதாரண மனிதனை நடத்துவதுபோல முந்தைய அரசாங்கத்தினுடைய காவலர்கள் கைது செய்து தலைவர் அவர்களை மிகவும் சித்திரவதைக்கு ஆளாக்கினார்கள்.

அன்றைக்கு எங்களைப்போன்ற தொண்டர்களை எல்லாம், பரிதி இளம்வழுதி அவர்களையும், என்னையும் காவல் துறையினர் கடுமையாகத் தாக்கியதை, தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாங்கள் செய்த மரியாதையாகக் கருதி அந்த விழுப்புண்ணை இன்றைக்கும் தாங்கிக்கொண்டிருக்கின்றோம்.

வேறு ஒரு முதல்வராக இருந்தால் arrest செய்த காவலர்களை எப்படியெல்லாம் பந்தாடியிருப்பார்கள், பழிவாங்கியிருப்பார்கள்? நமது அன்புத் தலைவர் அவர்கள், தன்னை arrest செய்ததாகவோ, கொடுமைக்கு ஆளாக்கினதாகவோ, சித்ரவதை செய்ததாகவோ எதையும் காட்டிக்கொள்ளாமல், எல்லோரையும் மன்னிக்கின்ற ஒரு இயேசுநாதரைப்போல அமர்ந்திருக்கின்ற அந்த ஒப்பற்றத் தலைவருடைய மனப்பக்குவத்தை இந்த நாடு பாராட்டுகின்றது. அதேபோல சமூகநீதி காத்த தலைவர் அவர்கள் கல்வியினுடைய...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, நானாக இருந்தால் என்னைக் கைது செய்தவர்களைப் பந்தாடியிருப்பேன் என்று மாண்புமிகு துரைசாமி அவர்கள் சொல்லுகிறார். நான் அதைச் செய்யவில்லை. இருந்தாலும் செய்திருக்கமாட்டேன். ஆனால், கைது செய்யச் சொன்னவர்களே அவர்களையெல்லாம் பந்தாடிவிட்டார்கள் அப்பொழுதே என்பது நாட்டுக்குத் தெரிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மனித ஆற்றலை வெளிக்கொணர்வதற்கு, மனித ஆற்றலை மேம்படுத்துவதற்கு, கல்வித் துறையை இரண்டாகப் பிரித்து, பள்ளிக் கல்வி அமைச்சர் என்றும், உயர் கல்வி அமைச்சர் என்றும் இரண்டு அமைச்சர்களை நியமனம் செய்து, பள்ளிக் கல்விக்கு 5,438.88 கோடி ரூபாய் ஒதுக்கி கல்வி வளர்ச்சிக்காகத் தலைவர் கலைஞர் தலைமையிலான அரசு இன்றைக்கு மிகப் பெரிய ஒரு புரட்சியைச் செய்து கொண்டிருக்கின்றது.

தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் மாணவர்கள் சேர்க்கையிலே பல பிரச்சினைகள் இருந்ததையெல்லாம் கருதி, நமது ஒப்பற்ற முதல்வர் அவர்கள் உயர் கல்வி அமைச்சருக்கு அறிவுரைகள் வழங்கி, தனியார் கல்லூரி உரிமையாளர்களிடம் பேசி, 13,000 இடங்களை அதிகமாக மாணவர்கள் சேர்க்கைக்கு, ஏழையெளிய மாணவர்கள், பொறியியல் பட்டங்கள் பெறுவதற்கு வழிவகை செய்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், உயர் கல்வி அமைச்சர் அவர்களையும் நாம் பாராட்டவேண்டும்.

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கவிதை எழுதினாலும் சரி, திரைப்படத்திற்கு வசனம் எழுதினாலும் சரி, பொதுக் கூட்டங்களில் பேசினாலும் சரி, திருமண விழாக்களில் பேசினாலும் சரி, அது தமிழனுடைய ஒற்றுமை, எழுச்சி, விழிப்புணர்வு என்று பேசுவார். தன்னுடைய வாழ்க்கையையே தமிழர்களுக்காக அர்ப்பணித்துக் கொண்ட தலைவர் அவர்கள் இன்றைக்குத் தமிழர்கள் எழுச்சி, விழிப்புணர்வு பெறுவதற்காகத் திராவிட இயக்க ஆய்வு மையம் Centre for Research on Dravidian Movement என்ற ஒன்றை திராவிட இயக்கக் கொள்கைகள், இலட்சியங்கள் பட்டுப்போகாமல் இருப்பதற்காக அத்தகைய ஒரு மையத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற தொழில்நுட்பச் சூழ்நிலையை, திருச்சியிலும், கோவையிலும், வசிக்கின்ற ஏழை எளிய மாணவர்கள் தரமான கல்வியைப் பெறுவதற்கு இரண்டு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்திட நிதி ஆதாரத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** பெருந்தலைவர் காமராஜர் பல்கலைக்கழகத்தில் Centre for Educational Research என்ற கல்வியியல் ஆய்வு மையத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கிராமப்புறத்திலே Professional கல்லூரியிலே தொழில் கல்வி பயின்றால்தான் வேலைவாய்ப்பு கிடைக்க வசதியாக இருக்கும். ஏழையெளிய மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றால்தான் வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள் என்ற தத்துவத்திலே கிராமப்புறத்திலே Colleges of Physiotherapy செவிலியர் கல்லூரிகள், Dental Colleges போன்ற கல்லூரிகளையும் ஆரம்பிப்பதற்கும் இந்த நிதிநிலை அறிக்கை நமக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

மகளிர் உரிமைகளைப் பற்றி பேசுகின்றபோது, மகளிருக்கு சொத்துரிமை, மகளிருக்கு வேலைவாய்ப்பு, ஆரம்பப் பள்ளிகளிலே ஆசிரியர் வேலை, உள்ளாட்சித் தேர்தலிலே 33 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து மகளிர் எல்லாம் உள்ளாட்சி, ஊராட்சி, நகராட்சி உறுப்பினர்களாக, தலைவர்களாக, வணக்கத்திற்குரிய மேயராக மகளிரை நியமனம் செய்தது ஒப்பற்ற தலைவர் கலைஞர் ஆட்சியில் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நல்ல ஆரம்பம் நேற்றைக்கு. நம்முடைய உள்ளாட்சித் துறை மாண்புமிகு அமைச்சர் தளபதி அவர்கள் 110–வது அறிக்கையில்— பொதுமக்களுடைய நன்மைக்காக அவசர அவசியமாக தெரிவிக்கப்பட வேண்டிய விஷயம் குறித்து விதி எண் 110–ல் அறிக்கை அளிக்கலாம். கடந்த காலங்களில் விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்கப்பட்டது பற்றி இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். நமது ஒப்பற்ற தளபதி அவர்கள் Emergency–ல் emerge–ஆகி வந்த தலைவர், Emergency–ல் emerge–ஆகி, இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்ற அந்தத் தலைவர் மாவட்டந்தோறும் ஆய்வு நடத்தி மக்களுடைய பிரச்சினைகளை அறிந்து, மக்கள் பிரதிநிதிகளுடைய உணர்வுகளை எதிரொலிக்கின்ற வகையில் நேற்றைக்கு விதி 110 அறிக்கையின் மூலமாக, அனுமதி பெறாத 90 ஆயிரம் வீடுகளுக்கு நகரப் பேரூராட்சிகளில் அனுமதி வழங்கி, ஒரு இலட்சம் ஏழையெளிய மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியினை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதைப்போல சில அரசியல் கட்சித் தலைவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எந்தக் கருத்தைச் சொல்வது, என்ன குறை சொல்வது என்று தெரியாமலேயே, திணறிப் போய்விட்டார்கள். இன்னும் இந்திய



நாட்டினுடைய Fourth Estate என்று சொல்லுகின்ற, நான்காவது தூணாக விளங்குகின்ற பத்திரிகைகள்கூட தலைவர் கலைஞர் தலைமையிலே இந்த அரசு வழங்கிய நிதிநிலை அறிக்கையை எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு இருந்து கொண்டிருக்கின்றன. Expenditure side-ல் மக்களுக்கு, நலஞ்சார்ந்த திட்டங்களுக்கு அதிகமான நிதியாதாரத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தினை ஒருசில அரசியல் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். அதேபோல Planning side-ல் திட்டமிடுதலுக்காக நிறைய நிதியை இந்த நிதிநிலை அறிக்கையிலே தலைவர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், வேளாண்மைத் துறைக்கு 977.08 கோடி ரூபாய். பள்ளிக் கல்விக்காக 5,438.88 கோடி ரூபாய். மக்கள் நல்வாழ்விற்காக முகாம்கள் நடத்த 11.13 கோடி ரூபாய். மருத்துவமனைகளைப் பழுதுபார்க்க 70 கோடி ரூபாய். சுகாதார நிலையங்களுக்குக் கருவிகள் வாங்க 17 கோடி ரூபாய். மொத்த மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்க 174.28 கோடி ரூபாய். MRI scan வாங்க 23.95 கோடி ரூபாய். CT Scanner வாங்க 5.50 கோடி ரூபாய். ஊரகக் குடிநீர் வழங்குவதற்காக 111 கோடி ரூபாய். சாலை மேம்பாடுகளுக்காக 1,260 கோடி ரூபாய். Planning side-ல் இந்த நிதிநிலை அறிக்கையில் அதிக கவனம் செலுத்தவில்லை என்று சொல்லுகின்ற அந்தத் தலைவர்களைப் பார்த்து கேட்கிறேன். இப்போது நான் படித்த இந்த அம்சங்கள் எல்லாம் Planning side-ல் இல்லையா? இதில் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படக்கூடிய அம்சங்கள் இல்லையா? ஆகவே, ஏதாகிலும் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசினைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காகவே அவர்கள் சொல்கின்றார்கள்.

அடுத்தபடியாக ஆதிதிராவிடர் நலம். தலைவர் கலைஞர் இந்தச் சமுதாயத்தின்மீது கொண்டுள்ள அக்கறை, பற்று, பரிவு என்பது, அவர்கள் இந்த ஆண்டு, மத்திய அரசாங்கம்தான் இந்தச் சமுதாயத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து கொண்டிருந்த நிலையை மாற்றி, முதல்முறையாக, தமிழக அரசு இந்தியாவிலேயே தலைவர் கலைஞர் முதல்வராக இருக்கின்ற இந்தத் தமிழகத்தில்தான் Special State Assistance என்று 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, இந்த மக்கள் மீது, தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டிருக்கின்ற பற்று, பாசம், அக்கறையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. தலைவர் அவர்களே, விடுதிகள் பராமரிப்பிற்காக 10 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இந்த 10 கோடி ரூபாயை ஆண்டிற்கு ஒரு

5 கோடி ரூபாய் விடுதிகளைப் பராமரிப்பதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், உணவிற்காக ஒதுக்கியிருக்கிற பணத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்றும் நான் தங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 9-50

எதிர்க்கட்சியினர் ஆதங்கப்படுவதெல்லாம், தேர்தல் அறிக்கை என்பது 5 ஆண்டு காலத்திற்கு, அதனுடைய limitation. ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாகச் செய்கின்றார்கள். தலைவர் பொறுப்பேற்று 75 நாட்களிலே, 5 ஆண்டு காலத்திற்குச் செய்ய வேண்டிய அத்தனை காரியங்களையும் செய்து விட்டார்கள் என்கிற ஆதங்கத்தைத் தவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** வேறு ஒரு குறையும் நாம் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** VAT மதிப்புக் கூட்டு வரி. மதிப்புக் கூட்டு வரி இந்தியாவிலே 28 மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களிலே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த மதிப்புக் கூட்டு வரியை அவர்கள் அறிமுகம் செய்யாமல் இருந்தார்கள். இதனால் 10 இலட்சத்திற்கும் கீழே வணிகம் செய்கின்ற சிறு வணிகர்களுக்குப் பலன் கிடைக்கிறது. அதேபோல Sales Tax - விற்பனை வரி அதிகமாக வருவாயாக தமிழக அரசுக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சமாதானத் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 8 ஆயிரம் கோடி ரூபாய் நிலுவையில் இருப்பது வருவாயாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த VAT என்று சொல்லப்படுகின்ற மதிப்புக் கூட்டு வரியின் மூலமாக சிறு வணிகர்களுக்கோ, யாருக்கும் தொந்தரவு இல்லை.

அதேபோல, உற்பத்தி செய்கின்ற ஆலை முதலாளிகளுக்கு மூலப் பொருட்கள் வாங்குகின்றபொழுதே, அந்த வரியைக் கட்டுகின்றபொழுது விற்பனை செய்கின்ற அந்தப் பொருட்களுக்கு விற்பனை வரியிலும் விலக்களிக்கப்படுவதால், இந்த மதிப்புக் கூட்டு வரியை நாம் அத்தனை பேரும் ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



இறுதியாக நான் சொல்ல விரும்புவது, expenditure side-ல் செலவினங்கள் அதிகமாக இருக்கிறது. மக்கள் நலஞ்சார்ந்த திட்டங்களுக்கு அதிக அக்கறை செலுத்தவில்லை என்ற ஒரு கருத்தை நான் மறுக்கின்றேன். சாலை மேம்பாடு, நகர்ப்புற மேம்பாடு, கல்விக் கூடங்கள், வேலைவாய்ப்பு, பொருளாதாரம், பல்வேறு தொழிற்சாலைகள் WIPRO, Motorola -- அதேபோல சேலத்திலே உருட்டாலைக்கு 1,553 கோடிக்கு மத்திய அரசாங்கம் இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது அந்த ஆலையை சர்வதேச அளவிற்கு உயர்த்துவதற்காக. இவையெல்லாம் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற திட்டங்கள்.

ஒன்றன்பின் ஒன்றாக இருப்பதனால் திட்டமிடுதலுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் பெருத்த அக்கறை செலுத்தியிருப்பதற்குக் காரணம், தமிழகத்திலே தனி மனித வருமானம் per capita income-ஐ அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக, வாங்கும் சக்தி purchasing power-ஐ அதிகப்படுத்துவதற்காக இருக்கின்ற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை. ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக சிலர் சொல்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கை என்பது, it is a good budget for a common man. மிகச் சர்வ சாதாரண மனிதனை எண்ணி, அவனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை. எல்லோராலும் வரவேற்கப்படக் கூடியது.

எனக்குத் தெரிந்தவரை சமுதாயத்தில் O.C., B.C. சில பேர் O.C.-ஐப் பிடிக்காது என்று சொன்னார்கள். தலைவர் அவர்களுக்குப் பிடிக்காத சமுதாயமே கிடையாது. ஆகவேதான், தமிழர்களுடைய தலைவர். ஒரே தலைவர் கலைஞர் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெயருடன் விளங்குகின்றார். அவர்கள் இன்றைக்கு வழங்கி இருக்கின்ற நிதிநிலை அறிக்கை எல்லாத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்படுகிறது. தலைவர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் நீடுழி வாழ்க என்று வாழ்த்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**திரு. சி.வி. சண்முகம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு) திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள். அனுமதி இல்லை. உட்காருங்கள். திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசுங்கள்.*

**திரு. சி.வி. சண்முகம்: ****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசுங்கள்.*

**திரு. சி.வி. சண்முகம்: ****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சி.வி. சண்முகம், நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசுங்கள். அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி நீங்கள் பேசுகிறீர்களா, இல்லை அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா? நீங்கள் சீக்கிரம் பேசுங்கள்.*

***திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுப் புகழ் திரு அண்ணாமலையார் வாழ்கின்ற திருவண்ணாமலை மாவட்டத்தில், திராவிட இயக்கத்தினுடைய அடிப்படை இலட்சியங்களை அங்கீகரித்த கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியினுடைய தேர்தல் களத்திலே நின்று, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஒரு வசந்த வாய்ப்பினை வழங்கிய,

'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை'

என்கின்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு இலக்கணமாக, எதிரியின் பாய்ந்து வருகின்ற ஈட்டி முனைக்குக்கூட மார்பு காட்டுகின்ற தீரர் கூட்டம் இங்கே. அதுதான் எங்கள் அம்மாவின் சிங்க நிகர் கூட்டம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக சட்டமன்றப் பேரவை அத்தாணி மண்டபத்தில் சங்க நாதம் செய்யும் தகுதியினைத் தந்திருக்கிற, மரண பயம் சூழ்ந்து வந்தாலும் மலைத்து நிற்காத ஆன்மீகத்தின் ஆதார சுருதி, கருணையின் கருவூலம், தந்தை பெரியாரின் தன்மான விதைகளை தமிழ் மண்ணிலே விதைக்கச் செய்த மனிதகுல மாட்சி... (மணியடிக்கப்பெற்றது)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவர்களுடைய தலைவர்களைப்பற்றிப் புகழ்ந்து பேசுவது மரபாக இருந்துகொண்டிருக்கின்றது. அது எல்லாத் தரப்பிலும் பேசுகின்றார்கள். ஆனால், எங்கள் தரப்பில் பேசுகின்றபோது, சில பேர் நையாண்டி, நக்கலைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். இது எங்களுக்கும் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை அனுமதித்தால், எங்களையும் அனுமதிக்க வேண்டி வரும் என்பதை நான் பேரவைத் தலைவர்மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** *தாழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தமிழகத்திற்குத் தந்த தமிழகத்தினுடைய தலைமகன், ஏழையினுடைய இதய வேந்தன், தென்னாட்டு காந்தி, காஞ்சியினுடைய தலைமகன், எங்களின் அண்ணன், வாழ்ந்தபோதே வரலாறாக வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றலாக, தஞ்சைத் தரணியிலே தமிழுக்குப் பல்கலைக்கழகம் கண்ட தமிழ்த் தாயின் தலைமகன், 6 கோடி ஏழை இதயங்களிலே அலைமோதிக் கொண்டிருக்கிற உயிரோவியம், கல்லறைக்குள்ளே இருந்தாலும் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த என் தலைவன் (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்தும் மறையாமல் மக்கள் உள்ளங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள் தலைவன், மாணிக்கத் தலைவன், மாசற்ற தலைவன் புரட்சித் தலைவன் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, (மேசையைத் தட்டும் ஒலி) உதயசூரியனால் உருக்க முடியாத பனி மலைக்குள் நிமிர்ந்து நிற்கும் இமயமலை, தலைகளை மட்டுமே எண்ணும் தலைவர்கள் வாழும் தமிழ் மண்ணில் ஏழை இதயங்களை எண்ணிப் பார்க்கும் அகிலம் புகழும் என் அரசியல் கீதை இதய தெய்வம் தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதச் சுவடுகள் பதிந்த திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் subject-க்குள்ளே வாருங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-க்குள்ளே வாருங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** எனக்குத் தெரியும். உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-க்கே இன்னும் வரவில்லையே நீங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** தெரியும். தெரியும், பேசுகிறோம். வெற்றி வாய்ப்பினை வஞ்சகம் இல்லாமல் வழங்கிய கலசப்பாக்கம் தொகுதி மக்களையும் இந்த நேரத்திலே நான் நன்றியோடு வணங்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி மக்களினுடைய உரிமைக்குக் குரல் கொடுத்து கடமையாற்றுவதற்கான ஒரு வாய்ப்பினை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் நிதிநிலை அறிக்கை தங்க முலாம் பூசிய போலி. கனவில் பெய்த மழை. கண் இமையின் ஓரத்தைக்கூட நனைக்காது. நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்குச் செய்த திட்டமிட்ட துரோகம். தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாசித்தாரேயொழிய அரசினுடைய திட்டங்களை அல்ல என்பதுதான் யதார்த்தமான நிலை. அடிப்படை ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு, உயிர் மூச்சுப் பிரச்சினைகளுக்கு எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. இந்த நிதிநிலை அறிக்கை முரண்பாடுகளின் மொத்தத் தொகுப்பாக உள்ளது என்பதுதான் யதார்த்தமான நிலை, நிதர்சனமான உண்மை என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டம். ஏழ்மையும், இல்லாமையும், கல்லாமையும், தமிழக மக்களின் தலைவிதி என்றால், அதை மாற்றி அமைத்தவர் வாழும் பிரம்மா எங்களின் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி).

'வயிற்றுக்குச் சோறிட-வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்'



என்ற கவியின் கனவை வாழ்க்கை நெறியாக்கிய வள்ளல் அம்மாவின் அற்புதத் திட்டம் அன்னதானத் திட்டம். தேசாந்திரியாகத் திரிந்தவன். சொந்த வீடு இல்லாதவன். முகவரியே இல்லாதவன். சொந்த ஊர் எது என்று கேட்டால் சொல்லத் தெரியாதவன். மேலே பார்த்தால் வானம். கீழே பார்த்தால் பூமி, காலங்களாலும், காயங்களாலும் சபிக்கப்பட்டவன். நாலா திக்குகளிலும் பிச்சை எடுக்கின்றவன் இவர்களுக்காக ஒரு துளி மை சிந்தி, சப்தம் இல்லாத ஒரு சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலே இருக்கின்ற திருக்கோவில்களிலே அன்னதானத் திட்டம், இஸ்லாமியர்களின் தர்காக்களிலே அன்னதானத் திட்டம், கிறித்துவப் பேராலயங்களிலே அன்னதானத் திட்டம். இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை அறிவித்ததன்மூலமாக எல்லோருக்கும் இன்றைக்குச் சாப்பாடு கிடைக்கிறது. இந்தியாவிலே இருக்கின்ற 30 மாநிலங்களிலே ஒரு வேளை உணவுக்கு உத்தரவாதம் தந்த ஒரே ஆட்சி தமிழ்நாட்டிலே நடைபெற்ற எங்களுடைய மாண்புமிகு அம்மாவினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி என்பதை நாடும், நாட்டு மக்களும் நன்றாக அறிவார்கள். வீணை வாசிக்கின்றவனுக்கும், விறகு வெட்டுகிறவனுக்கும் வயிறு ஒன்றுதான். வயிற்றுக்காக திட்டம் தீட்டி தீர்வு கண்டால்தான் ஜாதிகள் இல்லாத சமரசம் கண் விழிக்கும், உண்மையான மதச் சார்பின்மை நிலவும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட உன்னதமான அன்னதானத் திட்டம்பற்றி நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறுமா, இல்லை, கைவிடப்படுமா என்பதை நாட்டு மக்களின் நலனுக்காக அறிய விரும்புகிறேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டம். ஓய்வில்லாத உழைப்பால் வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும்வண்ணம் உலகத்தின் சுவாசப் பைகளான உழைக்கும் உழவர்களின் வாழ்விலே நடுங்காத நம்பிக்கை விளக்குகளை ஏற்றிய–

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டம் கடந்த ஆட்சியிலே வந்தாலும்கூட, அந்தத் திட்டத்தை தற்போது கலைஞர் அவர்கள்

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2006 ஜுலை 26

தலைமையிலே அமையப் பெற்றிருக்கிற இந்த ஆட்சி தொடர்ந்து நடத்தும் என்று பல்வேறு காலக்கட்டங்களில் வலியுறுத்தியும்கூட, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்ற கேள்வியை எதிர்க்கட்சியினர் தொடர்ந்து எழுப்புவதை இதோடு நிறுத்த வேண்டும். அன்னதானத் திட்டம் அனைத்து ஆலயங்களிலும் தொடர்ந்து நடைபெறும். 360 ஆலயங்களில் அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடக்கும் என்று உறுதி கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** அம்மாவின் பட்டை தீட்டப்பட்ட சிந்தனையிலே உதித்த திட்டம் உழவர் பாதுகாப்புத் திட்டம். விவசாயத் தொழிலாளர்களுக்கென 2001 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தி.மு.க. அரசால் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய ஒவ்வொருவரும் ஒரு முறை 100 ரூபாய் செலுத்த வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், அதன்மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பலன் அளித்திட தேவையான நிதியாதார வழிவகை செய்யப்படவில்லை. அத்திட்டத்தில் பங்குபெற 7.32 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமே பதிவு செய்திருந்தனர் என்பதிலிருந்து இந்தத் திட்டம் பரவலாக விவசாயத் தொழிலாளர்களுக்குப் பலனளிக்கக்கூடிய திட்டமாக அமையவில்லை என்பதும், அந்தத் திட்டம் விவசாயத் தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு உரியதாக இல்லை என்பதும் தெளிவாகிறது. எனவேதான், தமிழகத்திலேயுள்ள விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் அனைவரும் பயனடையும் வகையிலே, ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் முடிவு செய்தார்கள். 86 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், 51 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் சிறப்பு ஊராட்சிகளிலேயும், நகராட்சிகளிலேயும் வசித்து, விவசாய வேலைகளுக்குச் செல்லும் 62 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவர் என்று அம்மா அவர்கள் அறிவித்து, இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுடைய மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 99 இலட்சம் பேர் என்று ஆயிற்று.

2005 ஆம் ஆண்டு சுதந்திரத் திருநாளன்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்து தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தின்கீழ்



2006 ஜுலை 26] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

தேர்தலுக்கு முன்பு வரை வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 66,19,895 ஆகும். மீதமுள்ள விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட இருந்தன. இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 99 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் சேர்க்கப்பட்டு, இந்தத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் முதல் 600 கோடி ரூபாய் வரை ஒதுக்க முடிவு செய்யப்பட்டு, 2006-2007 ஆம் ஆண்டு இடைக்கால பட்ஜெட்டில் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ. 201.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அம்மா அவர்களை எதிர்க்க வேண்டுமென்பதற்காக ஏழையெளிய விவசாயிகளுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிற அரிய பலன்களை நிறுத்தி, பழி வாங்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்று எண்ணுகிறேன். இதனால் ஒரு கோடியே 99 இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகளை முதுகில் குத்தி அவர்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகும். திட்டம் ரத்து என்று சொல்வதற்குத் தைரியம் இல்லாமல், பதிலாக அடையாள அட்டை ரத்து என்று இந்த அரசு அறிவித்துள்ளது. வார்த்தை ஜாலத்தால் உண்மையை மறைக்கப் பார்க்கிறது. இந்த அரசு வார்த்தைகளோடு விளையாடினால் பரவாயில்லை. விவசாயப் பெருமக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு புதிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையைச் சரியாகப் படித்தாரா என்று எனக்குத் தெரியாது. கடந்த கால ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட திட்டத்திலே சில குறைகள் இருந்த காரணத்தால், முழுமையாகப் பரிசீலித்து, விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புத் திட்டம் என்ற அந்தப் பெயரால் கடந்த கால ஆட்சியிலே என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டனவோ, அதைவிட அதிகமான சலுகைகள் இந்த ஆட்சியிலே வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) கிருஷ்ணமூர்த்தி, பேசுகிறீர்களா? இல்லையென்றால் அடுத்த உறுப்பினருக்கு மாற்றிக் கொடுக்கவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

[2006 ஜூலை 26

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையையும், இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையையும் நன்றாகப் படித்துதான் இங்கே நாங்கள் பேசுகிறோம். இந்த அரசு புதிய கணக்கெடுப்பை எப்போது தொடங்கப் போகிறது? எப்போது புதிய அட்டைகளைக் கொடுக்கப் போகிறது? உன்னதமான உழவர் பாதுகாப்புத் திட்டத்தை உருக்குலைக்க முடிவெடுத்ததின் உள்நோக்கம் என்ன?

11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்தை எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்க்கும் இலவசப் பாடநூல் திட்டத்தை எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு தொடரும் என்று சொல்லியிருக்கின்றபோது, உழவர் பெருமக்களின் மேன்மைக்காக அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதமான உழவர் பாதுகாப்புத் திட்டத்தையும் தொடர வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசு ஊழியர்களுக்கு முன்தேதியிட்டு ஊதியம் வழங்குவதைப்போல, தேர்தல் அறிவிப்புக்கு முன்பு வரை உழவர் பெருமக்களுக்காக உதவித் தொகை வழங்கி வந்த..

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** எங்களது அரசு வழங்கிய அந்த உதவித் தொகையை, தேர்தலுக்குப் பின்னாலே நிறுத்தப்பட்ட அந்த உதவித் தொகையை இந்த அரசு விடுபட்ட நாளிலிருந்து முன்தேதியிட்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அரசாங்கத்தினுடைய இந்த அறிவிப்பு, காட்டிலே காய்ந்த நிலவாக, கடலிலே பெய்த மழையாக, பாறையிலே விதைத்த விதையாக, பயனளிக்காத கானல் நீர் திட்டம். இந்தத் திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத திட்டம். தேர்தல் காலத்திலே வாக்காளர்களைக் கவருவதற்காக அவசரகதியிலே அள்ளித் தெளித்த கவர்ச்சித் திட்டம் என்பதை இந்த நேரத்தில் நான் இந்த



2006 ஜூலை 26] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இல்லாத நிலப் பரப்பை இருப்பதாகச் சித்தரித்து, மக்களை ஏமாற்றுகின்ற நவீன விஞ்ஞான மோசடித் திட்டம். துரியோதனனுடைய வீழ்ச்சி, அவனுடைய தொடையிலே இருந்தது, ஜராசந்தனுடைய வீழ்ச்சி, அவனை மாற்றிப் போடுவதிலே இருந்தது. ஹிட்லருடைய வீழ்ச்சி, இரஷ்யாவினுடைய கடுங்குளிரிலே இருந்தது, ஜப்பானுடைய வீழ்ச்சி, அமெரிக்காவினுடைய அணு ஆயுதத்திலே இருந்தது, இந்த ஆட்சியினுடைய வீழ்ச்சி, இரண்டு ஏக்கர் தரிசு நிலத் திட்டத்திலே இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார். (குறுக்கீடுகள்) இரண்டு நிமிடங்களில் சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** கரும்பு விவசாயி. கடந்த தி.மு.க. ஆட்சியிலே விரக்தியின் விளிம்பிற்கே போன கரும்பு விவசாயிகளுக்குப் பிழிதிறனைக் கணக்கில் கொண்டு, 10 சதவிகிதம் பிழிதிறன் இருந்தால் மட்டுமே ஆயிரம் ரூபாய் என்று தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால், எங்களுடைய அம்மா அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தாங்கள் விளைவிக்கும் கரும்புக்கு, விவசாயிகளுக்கு ஆதாயமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நீண்டகாலக் கனவை நனவாக்கும் வகையில், சர்க்கரை பிழிதிறனைக் கணக்கில்கொள்ளாமல், குறைந்தபட்சமாகக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் வழங்கப்பட்டது என்பதை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திமு.க.வினுடைய தேர்தல் அறிக்கையிலே, கரும்பு விவசாயிகளைப் பொறுத்தமட்டில், கரும்பு விவசாயிகள் இதுவரை செலுத்தி வந்த லாரி வாடகையை நிருவாகமே செலுத்த வழிவகை செய்வோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கான எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் முரண்பாட்டின் மொத்த உருவமாகவே திகழ்கிறது இந்த அரசு. சொல்லுக்கும், செயலுக்கும் ஏராளமான இடைவெளி இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிழிதிறனைக் கணக்கில் கொண்டு கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியதாகச் சொன்னார்கள். அப்படித்தான் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அதேநேரத்தில், மத்திய அரசாங்கம் கரும்புக்குப் பிழிதிறனைக் கணக்கில் கொண்டு, அவர்கள் ஒரு விலையை நிர்ணயிக்கிறார்கள். மாநில அரசாங்கம் ஒரு பரிந்துரை விலையை நிர்ணயம் செய்து, இரண்டையும் ஆலை அதிபர்கள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். ஆலை அதிபர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று மாநில அரசாங்கம் அப்படி பரிந்துரை விலையை நிர்ணயம் செய்யக் கூடாது என்று ஓர் இடைக்கால தடை உத்தரவை வாங்கினார்கள். நாங்கள் விலையை நிர்ணயம் செய்வதற்கு, எங்களுக்கு உரிமையுண்டு என்று அந்த வழக்கை நாங்கள் நடத்திக் கொண்டிருந்தோம். ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த வழக்கைத் திரும்பப் பெற்றார்களே, அதன் இரகசியம் என்ன என்பதை அவர் இங்கே சொல்லவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், கண் விழிக்காத கிராமங்கள் கணக்கில்லாமல் அடங்கிய தொகுதி. பேரூராட்சி தகுதி பெற்ற ஊர்கூட எனது தொகுதியிலே இல்லை. விவசாயத்தையே நம்பி காலம் தள்ளுகின்ற, வியர்வை மொழி பேசுகின்ற, உழைப்பால் உடல் ஒடுங்கிய, ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற தொகுதி. என் கன்னிப் பேச்சில் கலசப்பாக்கம் மக்களின் சார்பாகப் பணிவான வேண்டுகோள். ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் படிக்க ஏதுவாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம், மங்கலம், நார்த்தாம்பூண்டி ஆகிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நவீன வசதிகளைக் கொண்ட அரசு மருத்துவமனைகளாக நிர்மாணம் செய்யப்படவேண்டும்.





*முற்பகல் 10-10*

கலசப்பாக்கம் தொகுதி மக்கள் பயன்பெறத் தகுந்த வகையில், தொகுதியிலே உள்ள ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்திலே கொண்டு கலசப்பாக்கம், மல்லவாடி ஆகிய பகுதிகளில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் உருவாக்கித் தர வேண்டும்.

உலகம் எல்லாம் மணம் பரப்பும் ஜவ்வாது மலைப் பகுதியில், ஜமுனாமரத்தூர் பகுதியைக் கோடை வாசஸ்தலமாக அறிவித்து, சுற்றுலா மையம் மற்றும் சுற்றுலா விடுதி ஏற்படுத்தி, அப்பகுதி வாழ் மக்களின் வாழ்விற்கு வளம் சேர்க்க வேண்டும் என்றும், கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம் ஆகிய பகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கிறேன். காலம், காலமாக கைவிடப்பட்ட கலசப்பாக்கம் தொகுதி மக்களுடைய மனசாட்சியாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதிநிதி என்ற உணர்வோடும் எனது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லியாகிவிட்டது. எத்தனை தடவை time கொடுத்தாகிவிட்டது? உட்காருங்கள், உட்காருங்கள். திரு. வசந்தகுமார், பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். நாங்குனேரி தொகுதியில் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி என் கருத்துகளைச் சட்டமன்றத்தில் ஒலிக்க வாய்ப்பளித்த, பாரதப் பிரதமர் பதவியே வேண்டாம் என்று மறுத்து உலகப் புகழ்பெற்ற அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாவசைக்காமல்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** நாவசைக்காமல், இரு பிரதமர்களைத் தேர்ந்தெடுத்து, தாழ்ந்து கிடந்த மக்களைத் தலைநிமிரச் செய்த பெருந்தலைவர் காமராஜருக்கு விழா. (மேசையைத் தட்டும் ஒலி) நாவசைக்காமல், உடலசைக்காமல் தன் புருவத்தாலேயே நடிப்பை உணர்த்திய பெருந்தலைவர் காமராஜரின் உண்மைத் தொண்டன் நடிகர் திலகம், சிங்கத் தமிழன் சிவாஜிக்கு வங்கக் கடலோரம் சிலை திறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) பேனா முனையாலும், நயமிக்க நாவாலும் நானிலத்தை ஐந்தாவது முறையாக ஆளும் முத்தமிழ் அறிஞர் 'நான்' என்று சொல்லாமல், 'நாம்' என்று எங்களையும் சேர்த்து, நல்லாட்சி புரியும் வல்லவர், டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டின் முதுகெலும்பு கிராமத்தில் இருக்கிறது என்று காந்தியடிகள் சொன்னார்கள். ஆனால், இன்று ரேஷன் கடையிலே அரிசிக்கு காத்துக் கிடந்த மக்கள் படுகின்ற பாட்டைப் பார்த்தால் கண்ணீர் வருகிறது. அந்த அரிசியை வாங்குவதற்கு 2, 3 கிலோ மீட்டர்கள் நடந்து சென்று வாங்க வேண்டியிருக்கிறது. மூன்று கிராமங்களை இணைத்து ஒரு ரேஷன் கடையை வைத்திருக்கின்றீர்கள். இவர்கள் அந்தக் கிராமத்தை அடைகின்ற நேரத்தில் அங்கே உள்ள பகுதி மக்கள் முதலாவதாக வாங்கிவிட்டு இன்று வா, நாளை வா என்று அங்கே இருக்கின்ற ரேஷன் கடை ஊழியர்களுடன் இணைந்து இந்த ஏழை மக்களை, தினக்கூலிகளாக இருக்கின்ற மக்களை, அங்கே திருப்பி அனுப்புகின்றார்கள். அந்த நிலை மாற, சிறு கிராமங்களுக்கும் 100 ரேஷன் கார்டுகள் உள்ள கிராம மக்களுக்குச் சுழற்சி முறையில் ரேஷன் கடைகளை நீங்கள் வைத்துக் கொடுக்க வேண்டுமென்று உங்கள் முன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

வணிகப் பிரதிநிதிகளுக்கு Value Added Tax என்று சொன்ன அந்த VAT முறையை அமல்படுத்தியிருக்கின்றீர்கள். பாராட்டு. இந்தியா ஒரு குடையில் ஆளுகிறது என்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் நிரூபித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 10 இலட்சம் வரை வியாபாரம் செய்கின்ற மக்களுக்கு அந்தச் சலுகையைக் கொடுத்து அவர்கள் சுதந்திரமாக வியாபாரம் செய்வதற்கு வாய்ப்பினைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதற்கும் நன்றி. ஆனால், R.S.T. என்று சொல்கின்ற Resale Tax, 1 சதவிகிதத்தை வியாபாரிகள் மக்களிடம் வாங்க முடிவதில்லை. அவர்கள் தன் இலாபத்தில்தான் அதைச் செலுத்துகிறார்கள். எனவே, டாக்டர் கலைஞர் அவர்கள் 1–1–2007 வரை காத்திருக்காமல், அந்த R.S.T., அந்த மறு விற்பனை வரியை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மென்மையாக நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு மட்டும் அல்லாமல், ரேஷன் கடைகளிலே அளவுகள் குறைகின்றன என்ற புகார்கள் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மக்கள் மனதிலும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் ஏற்கெனவே தமிழக முதல்வர் அவர்களுக்கு விண்ணப்பமாக அனுப்பியுள்ளேன். அந்த அரிசியை 5 கிலோ, 10 கிலோ, 20 கிலோ என்று கைத்தறி பைகளிலே அடைத்துக் கொடுத்தால் அளவு குறைவதற்கு வாய்ப்பில்லை. அதோடு மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர் பெருமக்களுக்கும் நாம் ஒரு தொழில் செய்வதற்கு வாய்ப்பினைக் கொடுக்கின்றோம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுத்த நேரத்தில் தமிழக அரசு அதை வழங்குவதுபோல் அந்த விளம்பரத்தைச் செய்திருந்தார்கள். அதைப்போல, மறுபக்கத்தில் வியாபாரப் பெருமக்களிடம் விளம்பரத்தை வாங்கி, அந்தத் துணிப் பைக்குள்ள செலவை ஈடுகட்டிக்கொள்ளலாம். ரேஷன் கடையிலே வேலை செய்கின்ற ஊழியர்களைக் கேட்டால், ஒரு மூட்டையை ஏறத்தாழ 30 முறை ஊக்கு போட்டு தூக்கிக் கொண்டு வருகிறார்கள். ஒரு மூட்டையை 30 முறை ஊக்கு போட்டு தூக்கி வருவதால் அங்கே சேதாரம் வருகிறது. எனவே, அதையும் தவிர்ப்பதற்கு இந்தத் துணிப் பை உதவியாக இருக்கும்.

முற்பகல் 10-15

அதோடு மட்டுமல்ல, ஏழையெளிய மக்கள், மின்சாரம் இல்லாத மக்கள் பயன்படுத்துகின்ற மண்ணெண்ணெயை வாங்குகின்ற நேரத்திலும் அளவு குறைகிறது. அதை plastic can–களில் அடைத்து சுழற்சி முறையில் சிறு deposit வாங்கிக்கொண்டு கொடுத்தால் மண்ணெண்ணெய் குறைவதற்கும் வாய்ப்பு இருக்காது.

அதோடு மட்டுமல்ல, 10 ஆம் வகுப்பு படித்த- (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்துக்கு முன்னாலேயே இந்த மண்ணெண்ணெய் ஆங்காங்கு வழங்குகிறபொழுது சிந்துகிறது, எனவே, 5 லிட்டர் plastic can–னிலே கொடுக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதன்பேரிலே, அதைத் தயார் செய்யலாம் என்று, பரிட்சார்த்தமாக நுகர்வோர் வாணிபக் கழகத்தின்மூலமாக செய்யலாம் என்று முடிவு செய்து, அதற்கு வேண்டிய

ஏற்பாட்டை எல்லாம் செய்து கொண்டிருந்தோம். அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், plastic can-களிலே அதைப் பாதுகாப்பாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், தீயணைப்புத் துறையினுடைய இயக்குநருக்குக் கடிதம் எழுத வேண்டும். எனவே, மத்திய சர்க்காருக்குக் கடிதம் நாங்கள் எழுதினோம். நேற்றைக்கு முன்தினம் என்ன பதில் வந்திருக்கிறது என்று சொன்னால், plastic can-னிலே நீங்கள் பயன்படுத்தக் கூடாது. அதன்மூலமாக தீ பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, நீங்கள் tin-ல்தான் அடைத்துக் கொடுக்க வேண்டுமேயொழிய, அப்படிக் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கத்திடமிருந்து இரண்டு தினங்களுக்கு முன்பாக கடிதம் வந்திருக்கிறது. Plastic can என்று சொல்கிறபோது மாற்று செய்யலாம். தண்ணீரை எப்படி மாற்றுகிறோமோ, அதைப் போல plastic can-னிலே மண்ணெண்ணெய் அடைத்து மாற்ற முடியும். ஆனால், tin என்று சொல்லுகிறபோது அதனுடைய விலை ஏறுகிறது. ஒரு tin-ஐ இரண்டு முறை பயன்படுத்தினால் அது ஓடுக்காகிவிடும் அல்லது ஓட்டையாகிவிடும். நாம் ஏற்கெனவே யதார்த்தமாக பார்த்த ஒன்று இது. எனவே, பரிசீலனையில் இருக்கிறது. மீண்டும் முதலமைச்சரிடத்திலே கலந்தாலோசனை செய்து, அதற்கு வேண்டிய ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று.

இரண்டு, இந்த பிளாஸ்டிக் பையிலே 5 கிலோவை அடைத்துக் கொடுக்கலாம் என்ற ஒரு ஆலோசனையை 27 மாவட்டங்களிலும் நான் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே வைத்து ஆய்வு செய்கிறபோது பல சட்டமன்ற உறுப்பினர்கள் இதைக் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக சென்னையிலே இருக்கிற பெரும் வியாபாரிகளை அழைத்து நான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்களுடைய திட்டமே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற திட்டம்தான். ஏழைகள் பயன்படுத்துகிற திட்டம். நான்கு நாளைக்கு முன்னால்கூட ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசினார். ஒரு நாள் கூலியிலே ஒருமாதத்திற்கு வேண்டிய அரிசியை வாங்கிவிடலாம் என்று சொல்லுகிறபொழுது, அந்தப் பிளாஸ்டிக் பையையும் சேர்த்து நாங்கள் கணக்குப் பார்க்கிறபொழுது, அது 2¼ ரூபாயாகிறது. ஒரு கிலோ அரிசி 2¼ ரூபாய் ஆகிவிடுகிறது. எனவே, திட்டமே அதிலே குறைபட்டுவிடும். அதனால்தான் பல வியாபாரிகளைக் கூப்பிட்டுப் பேசிக்



கொண்டிருக்கிறோம். ஒரு பக்கத்திலே தமிழக அரசினுடைய அந்த விளம்பரத்தையும் அவர்கள் sponsor செய்தால், அதன்மூலமாக அந்த இரண்டு ரூபாய்க்கே கொடுக்க முடியும் என்பதைப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் உறுதுணையாக இருப்பார் என்று சொன்னால், அது முதலமைச்சருடைய கவனத்திற்குச் சென்று, தொடர்ந்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு பாடுபடும். (குறுக்கீடு) அதனால்தான் அவரையே நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி. மீண்டும் பெருந்தலைவர் காமராஜர் விழாவைக் கொண்டாடுகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வில் மூன்று இடங்களை மாநில அளவில் பெறுகின்ற மாணவர்களுக்கு நீங்கள் ஊக்கப் பரிசு அளிக்கின்றீர்கள். மாவட்டந்தோறும் அந்த மூன்று பரிசுகளை நீங்கள் விரிவுபடுத்திட வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.*

*தந்தை பெரியார் திரைப்படத் தயாரிப்பாளருக்கு ஊக்கத் தொகை அளிப்பதாக நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அதைப்போல் பெருந்தலைவர் காமராஜரின் திரைப்படம் எடுத்து இன்று நஷ்டத்தில் இருக்கின்ற அந்தத் தயாரிப்பாளருக்கும் உதவித் தொகையினைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தமிழக அரசே வாங்கிக்கொண்டு, தமிழகத்தில் இருக்கின்ற பள்ளிகளில் எல்லாம் அது திரையிடப்பட வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் வைத்துக் கொள்கின்றேன்.*

*(முற்பகல் 10-20)*

*எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், வடக்குப் பச்சையாறு நீர்ப்பாசனத் திட்டம், ஏறத்தாழ 16 குளங்களுக்குத் தண்ணீர் வருகின்ற ஒரு வாய்ப்பினைத் தரும். அதை உலக வங்கி நிதியினைப் பெற்று தமிழக அரசு உடனே நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல் கன்னடியன் கால்வாய்த் திட்டம், தாமிரபரணி ஆறு கன்னடியன் அணைக்கட்டிலிருந்து வறட்சியான சாத்தான்குளம், திசையன்விளைப் பகுதிக்கு, நாங்குனேரி தொகுதி வழியாக வெள்ள*

நீர்க் கால்வாய் தோண்டும் பணி 181.9 கோடி ரூபாய் மதிப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதை உடனே துவங்கிட வேண்டும். இதனால் என்னுடைய நாங்குனேரி தொகுதியில் மூலைக்கரப்பட்டி, முனிஞ்சிப்பட்டி, சிந்தாமணி, திருமலாபுரம், பருத்திப்பாடு, வெங்கட்ராமபுரம், காரியாண்டி, விஜயநாராயணம், ஏமன்குளம், இட்டமொழி, இளங்குளம், பாப்பான்குளம், சங்கனாங்குளம் என்ற ஊர்கள் பயன்பெறும்.

அடுத்து, முக்கியமான கோரிக்கை, நாங்குனேரி தொழில்நுட்பப் பூங்கா. டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே துவங்கப்பட்டு, ஏறத்தாழ 6 ஆண்டுகளாகச் சரியான முறையில் இயங்காமல் இன்னும் ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்ற அந்த Hi-Tech Industrial Park-ஐ உடனடியாக நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். காரணம் 6 ஆண்டுகளுக்கு முன்பாக அதற்கு ஒப்பந்தம் போட்டு, அந்தக் கம்பெனியார் இன்னும் அதிகமாகப் பணத்தை முதலீடு செய்யவில்லை. தமிழக அரசு, டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, அந்த முதலீட்டாளர் உடனடியாக அந்தப் பணத்தை இங்கே கொண்டு வந்து, பணிகளை முடித்து, அந்த Hi-Tech Industrial Park-ஐ நீங்கள், உங்கள் திருக்கரங்களால் ஆரம்பித்து வைக்க வேண்டும். காரணம், நாங்கள் தேர்தலில் நின்ற நேரத்திலே, எங்கள் தொகுதிக்கு உங்கள் வருகை இல்லை என்ற அந்த ஓர் ஏமாற்றத்தையும் நீங்கள் நாங்குனேரி Hi-Tech Industrial Park-ஐ ஆரம்பிப்பதன்மூலம் அங்கே அதைப் போக்கலாம் என்று கூறிக் கொள்கிறேன். வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி. டெல்லியிலே இருக்கின்றபோது நாங்குனேரியிலே தொழிற்சாலை அமைக்கப்படும் என்று சொன்னீர்கள். அதை உடனடியாக நாங்குனேரி தொகுதியில் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்புச் சாரா தொழிலாளர் நலன். அமைப்புச் சாரா தொழில் வாரியங்களுக்கு பல்வேறு நல வாரியங்களை ஏற்படுத்தியதற்குத் தமிழக அரசிற்கு நன்றி. அதேசமயத்தில், நெல்லை மாவட்டத்தில் அதிகமாக பீடி சுற்றும் தொழிலாளர் பெருமக்கள் இருக்கின்றார்கள். எனவே, பீடி சுற்றும் தொழிலாளர் மக்களுக்கும் ஒரு நல வாரியம் அமைத்திட வேண்டும் என்று இந்தத் தமிழக அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். அதைப்போல, மட்பாண்டம் செய்கின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கும் ஒரு வாரியத்தை அமைத்து அவர்கள்



வாழ்க்கையிலும் ஒளி ஏற்றவேண்டும் என்று நான் உங்களை மிகவும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** கிராமங்களில் இயங்கிவரும் மருத்துவமனைகள் அனைத்தும் 24 மணி நேரமும் இயங்க ஆவன செய்ய வேண்டும். ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற இடத்தில் உள்ள சுகாதார மையங்கள் 24 மணி நேரமும் இயங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் நாங்குனேரி தொகுதியில், ஏராளமான பாலங்கள் கட்டும் பணி இன்னும் கிடப்பிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆவாந்தலை சந்தோஷபுரம், மகிழ்இடை நெருஞ்சிபுரம், தளவாய்புரம் வன்னியங் குடியிருப்பு, எல்.என்.எஸ். புரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு, சிறுமலஞ்சிரோடு, பச்சையாறு கீழ்சடையமான்குளம், கீழ்காடுவெட்டி, பத்தைகுலசேகரன், நங்கைகோயில், உய்க்காட்டான்கோயில், களக்காடு மேலவடகரை, பண்டிதன்குறிச்சி, கீழ்வடகரை, வடமலையான் கால்வாயில் ஏர்வாடி, பொன்னாங்குறிச்சி, தாம்போகி பாலம், நாங்குனேரியான் கால்வாயில் கோயில்பத்து, கோட்டை ஒப்பாறு, களக்காடு சிங்கம்பத்து, விஜயநாராயணம் கால்வாயில் ராமகிருஷ்ணாபுரம், விஜய நாராயணபுரம். இவைதவிர, ஏராளமான பாலங்கள் கட்ட வேண்டி இருக்கின்றன. கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். களக்காடு ரோட்டில் கட்டி முடிக்கப்பட்டு திறக்காமல் இருக்கும் அரசு ஆஸ்பத்திரியை உடனடியாக திறக்கவேண்டும். அதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் நீங்கள் செய்யவேண்டும் என்று விரும்பி கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உறவுக்குக் கை கொடுப்போம், கை கொடுப்போம் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10-25

*__திரு. கோ. எதிரொலி மணியன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயிரண்டு திங்களாய் மெய் வருந்த எனை சுமந்து உய்வித்த தெய்வம், அது பேசும் தெய்வம். ஆம், என் அன்னைக்கு முதல் வணக்கம். (குறுக்கீடு) மரியாதைக்குரிய பாண்டுரங்கன் அவர்களே, தயவு செய்து என் கன்னிப் பேச்சிலே குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடு)*

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ *உறுப்பினர் திரு. பாண்டுரங்கன், நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கு அனுமதியில்லை. (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.*

__திரு. கோ. எதிரொலி மணியன்:__ *ஐயிரண்டு திங்களாய் மெய் வருந்த எனை சுமந்து உய்வித்த தெய்வம் அது பேசும் தெய்வம். ஆம் என் அன்னைக்கு முதல் வணக்கம். அன்னையால் அறிந்த மொழி, அனைவருக்கும் தெரிந்த மொழி. அது எந்த மொழி? என் தாய் மொழி, தமிழ் மொழி. அந்த அன்னைத் தமிழுக்கு அடுத்த வணக்கம். அரசியல் வாழ்க்கையிலே அப்பழுக்கற்றவராய் அனைவருக்கும் பகளி தந்து, அழகு பார்ப்பவராய் தந்தை பெரியார் வழியில்... (குறுக்கீடு)*

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ *மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள். இல்லையென்றால், உங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள்.*

__திரு. கோ. எதிரொலி மணியன்:__ *பதவி வேண்டாதவராய், வாழும் பெரியாராய் வாழும் எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுக்கும் (குறுக்கீடு)*

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள்.

__திரு. கோ. எதிரொலி மணியன்:__ இளைய வயதில் ஏற்றமிகு பணிகள் ஆற்றி இந்தியத் திருநாட்டின் பெருமைகளை உயர்த்திட்ட, அமெரிக்காவின் மிக உயர்ந்த விருதான, லூதர் எல். டெர்ரி விருதைப் பெற்று தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்த எங்கள் இளவல் பசுமைத் தென்றல் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும் மாசற்ற வணக்கம். திசைகாட்டும் மாலுமியாய் சட்டமன்றத்தில் வழிகாட்டும் தியாகச் செம்மல் அண்ணன் தலைவர் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் வணக்கம். சட்டமன்ற உறுப்பினராக நான் வெற்றி பெற அயராது உழைத்த தோழமைக் கட்சிகளின் தோழர்களுக்கும், 'என் தம்பி எதிரொலி மணியனை என்னோடு சட்டமன்றத்திற்கு அழைத்துக் கொண்டுதான்



*போவேன்' என்று அயராது பாடுபட்ட அண்ணன் மாண்புமிகு அமைச்சர் எ.வ. வேலு அவர்களுக்கும் வணக்கம்.*

*குறிப்பாக, தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாள் அன்று கடும் வெய்யிலிலும் காத்துக் கிடந்த மக்களிடையே 'கலைஞரின் மகனாக இருந்து கேட்கிறேன், எதிரொலி மணியன் வெற்றி பெற்றாக வேண்டும்' என்று எனக்காக வாக்கு சேகரித்தாரே அந்த இளைய தளபதி அவர்களுக்கும் எனது வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி நாட்களிலே, மாணவப் பருவத்திலே நான் திராவிட இயக்கத்திலே திளைத்திருந்த நேரம் அது! கலைஞரின் தமிழுக்காகக் காத்துக்கிடந்த காலம் அது! ஒரு முறை செய்யாறிலே பொதுக்கூட்டம். செய்யாற்றை அடுத்து பெரும்பள்ளம் என்ற மற்றொரு ஊரிலும் ஒரு பொதுக்கூட்டம். இரண்டிலும் கலந்துகொள்ள கலைஞர் வருகிறார். எல்லோரும் காத்திருக்கிறோம். திடீரென மழை கொட்டம் போட்டு விட்டது. திடலெங்கும் மழை நீர் தேக்கம் வந்து விட்டது. வந்தார் கலைஞர். சேற்றிலும், சகதியிலும் இறங்கிச் சேர்ந்தார் மேடையில். மழைக்கூட்டத்தை மக்கள் கூட்டம் தோற்கடித்தது அன்று. பேசினார் கலைஞர். பேசி விட்டு அடுத்து பெரும்பள்ளம் போய் பேசுவார் என்று பார்த்தேன். ஆனால் அவர், 'இந்த மழையில் செய்யாறிலேயே என்னால் இறங்க முடியவில்லை. இறங்கி விட்டேன். பெரும்பள்ளம் எப்படி இருக்கும் பாருங்கள். இன்னொரு நாள் வருகிறேன்' என்று போய் விட்டார். பசுமை மாறாமல் என் நெஞ்சில் பதிந்திருந்த வார்த்தைகள் அவை. எல்லோருக்கும் நன்றி சொன்னார். அன்றைக்கு எல்லோருக்கும் வருத்தம்தான். ஆனால், வார்த்தைக்கு அழகு தந்தார் அந்த வாலிபக் கலைஞர். வார்த்தைக்கு அழகு தந்த அந்த வாலிபக் கலைஞரின் வசீகரக் குரலுக்கு மட்டும் இன்று வரை வயதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் 16-ஆக எப்போதும் இருக்கும் அவருக்கும் என் இனிய வணக்கம்.*

*நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்திலே நீங்களும் பேசுங்கள் என்று ஆணையிட்ட அன்பிற்கினிய பேரவைத் தலைவருக்கும் எனது அன்பு வணக்கம். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற எவரும் பாராட்டாமல் பேசிவிட முடியாது. எதிர்க்கட்சியினர் கூட ஆளுங்கட்சியை எதிர்க்கட்சியாக, எதிரிக் கட்சியாக நினைக்காமல், எப்படி அதிமுக ஆட்சியிலே கலைஞர் கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு கைவிட்டார்களோ, அதைப்போல அல்லாமல், இன்றைக்குக் கட்சிக் கண்ணோட்டம் பாராமல், இந்த*

ஆட்சியிலே இலவச சைக்கிள் தொடருகிறது. அன்னதானத் திட்டம் தொடருகிறது என்றாரே கலைஞர், அதைப் பாராட்டி இருக்க வேண்டும். ஒருவேளை பாராட்டினால் இந்தப் பதவி பறிபோய் விடும் என்ற பயம்கூட இருக்கலாம் அவர்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பேசிவிட்டு போகிறபோதே பதவி காணாமல் போய் விடுகிற கட்சி அது. அவர்களும் பாராட்டுகின்ற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பாக தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

பள்ளிக் கல்வியில் குறிப்பாக ஆரம்பக் கல்விக்கு இந்த அரசு இன்னும் முக்கியத்துவம் தர வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். காரணம், ஒரு நாட்டின் வளர்ச்சியை அளக்கிற அளவுகோல் கல்விதான். அதிலும் ஆரம்பக் கல்வி முக்கியமானது. காரணம், ஒரு குழந்தை கருவில் வளருகிறபோது, அந்தக் குழந்தையினுடைய மூளை வளர்ச்சி என்பது 25 சதவிகிதம் உருவாகி விடுகிறது. பிறகு அந்தக் குழந்தை பிறந்து ஒரு வயதிலிருந்து ஆறு வயது ஆவதற்குள்ளாக அந்தக் குழந்தையினுடைய மூளை வளர்ச்சி என்பது 80 சதவிகிதம் உருவாகிவிடுகிறது. அப்போது 80 சதவிகிதம் மூளை வளர்ச்சி உருவாகியிருக்கிற குழந்தைக்குத்தான் நாம் அடிப்படைக் கல்வியை, ஆரம்பக் கல்வியை, தமிழ்க் கல்வியைக் கற்பித்தாக வேண்டும். அதுவும் தரமாக, ஒரே மாதிரியாக, கட்டாயக் கல்வியாக நாம் கற்பிக்க வேண்டும் என்று எங்கள் மருத்துவர் அய்யா குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாய் மொழியில் பயின்றால் பலன் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழிலே படித்தால் வேலை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

*முற்பகல் 10-30*

உலகிலே உயர்ந்திருக்கிற நாடுகள், தொழில்நுட்ப வளர்ச்சியிலே வளர்ந்திருக்கிற நாடுகள், குறிப்பாக ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்ளாத நாடுகள், ஜப்பான், சீனா, இரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகள் மிக உச்சத்திற்கு இன்றைக்குப் போயிருக்கின்றன என்று சொன்னால், அங்கே எல்லாம் ஆங்கிலம் கிடையாது. அந்தந்த தாய் மொழியில் மட்டுமே அடிப்படைக் கல்வியிலிருந்து ஆராய்ச்சிக் கல்வி வரை பயிற்றுவிக்கப்படுகிறது. இதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனவேதான், எங்கள் மருத்துவர் அய்யா சொல்கிறார்கள். தாய் மொழியில் கல்வியைக் கொடுங்கள், அதையும் தரமாகக் கொடுங்கள், கட்டாயமாகக் கொடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



இன்றைக்கு கல்வி இங்கே ஒரே சீராக இல்லை. அது இந்தியாவாக இருந்தாலும் சரி, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, கல்வி ஒரு சீராக வழங்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால்: வெளிநாட்டிலே பார்க்கிறபோது, அங்கே இருக்கிற அதிபருடைய மகனும், ஒரு சாதாரண தொழிலாளியுடைய மகனும் ஒன்றாகப் படிக்கிறார்கள். இங்கேயும் அதே நிலை வரவேண்டும் என்றுதான். கிராமத்தில் இருக்கின்ற குப்பனின் பேரனும், நம் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் பேரனும் ஒன்றாகப் படிக்கின்ற வாய்ப்பு என்றைக்கு வருகிறதோ, அன்றைக்குத்தான் உண்மையான கல்வி வந்துவிட்டதாக அர்த்தம் என்று மருத்துவர் அய்யா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளையில், தமிழ்நாட்டிலே தமிழ் மொழியின் பெருமையை நம்மைவிட இன்றைக்கு வேற்று நாட்டவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உலகின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி நயாகரா. அதன் தகவல் பலகையில் எழுதப்பட்ட மொழிகளிலே இந்தியாவின் எந்த மொழியும் இடம்பெறவில்லை. இடம்பெற்ற ஒரே மொழி தமிழ் மொழி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்மைப் போல் மனிதன் வேற்று கிரகத்திலே வசிக்கிறானா, அப்படி வசித்தால் அவனுக்கு என்ன மொழி தெரியுமோ என்பதற்கு 7,8 மொழிகளை விஞ்ஞானிகள் பதிவு செய்து ஓர் இராக்கெட்டை அனுப்பியிருக்கிறார்கள். அதிலேகூட தமிழும் இடம்பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படி தமிழைப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் நேற்றையதினம் முதல்வர் சொன்னார்கள்—ஆலயங்களிலே அன்னைத் தமிழ் அவமானப்படுத்தப்படுகிறது என்று என் சகோதரன் வேல்முருகன் குறிப்பிட்டுச் சொன்னபோது, அந்த அவமானத்தை உடனடியாக துடைத்து எறிந்தாரே, அந்த வேகம் எங்களுக்கு இன்னமும் வேண்டும். காரணம், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தமிழிலே படம் எடுத்தால் பாருங்கள்! தமிழ்நாட்டிலேயே தமிழில் படம் எடுப்போருக்கு, தமிழிலே பெயர் வைத்தால் சலுகை தருவோம் என்பது எங்களுக்கு எல்லாம் சற்று நெருடலாக இருக்கிறது. அதைவிட தமிழிலே பெயர் வைக்காவிட்டால் கேளிக்கை வரி இரண்டு மடங்கு உயர்த்தப்படும் என்று சொன்னால் அது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்குத் தூய தமிழில், ஆங்கில வார்த்தை கலப்பு

இல்லாத ஒரு படத்தை எங்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. போஜர் சண்முகம் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். படத்தின் பெயர் 'இலக்கணம்'. ஒரு வார்த்தைகூட ஆங்கிலம் கிடையாது அந்தப் படத்திலே! நான் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் படத்தைப் போய்ப் பாருங்கள். 'இலக்கணம்' படத்தின் பெயர், தூய தமிழில். அதற்கு வேண்டுமானால் அய்யா கலைஞர் அவர்கள் பரிசு கொடுத்தால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன் நான்.

எங்கள் அய்யா அவர்களுடைய தணியாத ஆசையை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே தமிழிசையை, தமிழ்ப் பண்ணிசையைக் கட்டாயப் பாடமாக ஒன்றாம் வகுப்பிலிருந்து இந்த அரசு கொண்டுவர வேண்டும். அதே நேரத்தில் மாவட்டத்திற்கு ஒரு இசைக் கல்லூரியைக் கொண்டுவந்து, ஆசிரியர்களைத் தயார் செய்து அப்படிப்பட்ட பள்ளிகளுக்குப் பாடம் நடத்த நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்தத் தமிழிசையை தமிழ்நாட்டிலே கொண்டுவந்து சிறப்பித்திருக்கிற தமிழிசை மூவருக்கு சிதம்பரத்திலே அரசு விழா எடுக்க வேண்டும் என்று நான் இங்கே அய்யாவின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது கலைஞர் ஆட்சி என்றால், இடையிலே பிடுங்க நினைத்தது ஜெயலலிதா ஆட்சி. இதற்கும் ஒரு தூக்குக் கயிறு போராட்டம் நடத்தி, மீட்டுக் கொடுத்தவர் மருத்துவர் அய்யா என்று சொன்னால், அது மிகையாகாது. இன்றைக்கு விவசாயிகளுக்கு 6,866 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிற கலைஞர்...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order. அவர் சொன்னதற்குச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of order? ஒரு வரியிலே சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு வரியிலே சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இலவச மின்சாரத்தை தி.மு.க. ஆட்சி தந்ததாகவும், அதை அண்ணா தி.மு.க. ஆட்சி பறித்ததாகவும் பேசுவது உண்மைக்குப் புறம்பானது. அனைத்திந்திய



அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசு அனைத்து மாநிலங்களிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வரியிலே சொல்லி முடியுங்கள் என்றால் எங்கோ சென்று கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு வரியில் என்றால் எப்படிச் சொல்வது? அவர் சொல்வதற்கு நான் பதில் சொல்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வரியிலே சொல்லி முடியுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடு) subject-ஐச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? உட்காருங்கள். உட்காருங்கள் நீங்கள். திரு. மணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதனால் என்று சொல்கிறேன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகளுக்கு 6866 கோடி ரூபாய் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார் கலைஞர். இதைப் பாராட்டாத விவசாயி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உலக வங்கி, அனைத்து மாநிலங்களும் இலவச மின்சாரத்தை அளிக்கக் கூடாது என்று சொன்ன நேரத்தில்கூட, விவசாயிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டுதான் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து விவசாயிகளுக்கும் இங்கேயிருந்து அரசின் சார்பாக மணியார்டரை அனுப்பி அவர்களின் நலன் காக்கின்ற அளவிற்கு உடனடியாக இந்தப் பணிகளை மேற்கொண்டார்கள் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இலவச மின்சாரம் அண்ணா தி.மு.க. ஆட்சியில் இரத்துச் செய்யப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர்

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2006 ஜூலை 26

அவர்கள், 12 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தக்கூடிய பம்ப் செட்டுக்கு இலவச மின்சாரம் அறிவித்தார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1991-லே, முன்பிருந்த அ.தி.மு.க. ஆட்சியில், 1992-93-லே இரத்து செய்தார்கள். தமிழ்நாடெங்கும் விவசாயப் பெருமக்கள், எல்லா அரசியல் கட்சிகளும் கடுமையான போராட்டத்திலே ஈடுபட்ட பிறகுதான் இரத்து நிறுத்தப்பட்டதே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாவிட்டால் அப்பொழுதே இரத்து செய்யப்பட்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, அதி.மு.க. ஆட்சிக் காலத்தில், 1991-லேயிருந்து 1996 வரையிலான ஆட்சிக் காலத்தில் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்தார்கள். அந்த நேரத்தில் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையிலே நடைபெற்றது. தஞ்சையிலே நடைபெற்ற மாநாட்டில், இலவச மின்சாரம் தொடரும் என்று அறிவிக்கவில்லை என்று சொன்னால், மாநாடு நடத்த அனுமதிக்க மாட்டோம், சாலை மறியல் போராட்டம், தூக்குக் கயிறு போராட்டம் நடத்துவோம் என்று மருத்துவர் அய்யா அவர்கள் அறிவித்தார்கள். அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் கட்டை வண்டி போராட்டத்தை அறிவித்து மறியல் செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சி, எல்லாக் கட்சிகளும் போராட்டம் செய்த காரணத்தினாலே மீண்டும் தொடர்ந்து வேறு வழியில்லாமல் அதி.மு.க. அரசால் இலவச மின்சாரம் கொண்டு வரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். அப்படி வழங்கப்பட்ட பிறகு, அடுத்து 2001-லிருந்து 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில் மீண்டும் அதி.மு.க. ஆட்சிக்கு வந்தபொழுது, அந்த இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டது. இரண்டாவது முறையாக, நாடாளுமன்ற தேர்தலிலே படுதோல்வி அடைந்த காரணத்தினால்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஒரு வார்த்தை பேசி முடித்துவிட்டும். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** வேறு வழியில்லாமல் மீண்டும் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, (குறுக்கீடு)



2006 ஜூலை 26]

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நான் சொல்லிவிடுகிறேன். ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்களே, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் கூடாது என்ற மனப்போக்கு உள்ள அரசு அ.தி.மு.க. அரசு. அ.தி.மு.க. தான் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் தவறான தகவலை இங்கே அவைக்குத் தந்துகொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) நக்கல், நையாண்டி எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள், பேசுங்கள், கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்களுக்கு மட்டும் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லக்கூடிய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எல்லோருக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும். நீங்கள் பேசும்போது நாங்களும் பேசுவோம். ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தைச் சொல்லுங்கள். ஒரு வரியிலே கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கொறடா அவர்களும் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்யவில்லை, மணியார்டர் அனுப்பினோம் என்று சொன்னார்கள். அதிலே இருவேறு கருத்துகளுக்கு

இடமில்லை. ஆனால், அந்த மணியார்டர் யாருக்கு அனுப்பப்பட்டது என்றால், 11 இலட்சத்து 60 ஆயிரம் மின் இணைப்புப் பெற்றவர்களுக்கு, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்று பிரித்து அவர்கள் பெயர்களுக்கு மணியார்டர் அனுப்பினார்கள். ஆனால், அந்த மணியார்டர் உரியவர்களுக்குப் போய் சேர்ந்ததா என்றால் இல்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். என்னுடைய தகப்பனார் பெயரிலே சர்வீஸ் இருக்கும். மணியார்டர் அனுப்பினார்கள். எனது தகப்பனார் இறந்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சர்வீசை என் பெயருக்கு மாற்றிக்கொள்ளவில்லை. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அப்படி பல விவசாயிகள், அந்த மின் இணைப்பை தங்கள் பெயரிலே மாற்றிக் கொள்ளாத காரணத்தினால், அனுப்பப்பட்ட அந்த மணியார்டர்களிலே பல அரசாங்கத்திற்கே திரும்பி வந்துவிட்டன. இருந்தாலும், சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோம் என்று சொல்லி, மணியார்டர் அனுப்பப்பட்டது உண்மை. ஆனால், அது நடைமுறையிலே சரியாக வரவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகுதான். மறுபடியும் அந்த மணியார்டர் அனுப்புகின்ற திட்டத்தை இரத்து செய்துவிட்டு, இலவச மின்சாரம் தொடரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எதிரொலி மணியன். (குறுக்கீடுகள்) கருத்தை அமைச்சர் சொல்லிவிட்டார்கள். விளக்கம் சொல்வதற்கு அப்புறம் என்ன இருக்கிறது? உட்காருங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இதைப் பாராட்டாத விவசாயிகள் கிடையாது. விவசாயிகளுடைய வாழ்விலே எப்போதும் போராட்டம்தான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். அதற்கு அப்புறம் அதிலே என்ன point of order இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** குறிப்பாக விவசாயிகள் உற்பத்தி செய்கிற எந்தப் பொருளுக்கும் விலை இல்லை. அதிக அளவில் அந்தப் பொருள்கள் உற்பத்தி செய்கிற நேரத்தில் எல்லாம் விற்கிற விலை வீழ்ச்சி அடைந்து விடுகிறது. குறிப்பாக சாதாரண...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்து, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் தவறான தகவலை தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற வார்த்தையைச் சொன்னவுடனேயே, ஆளுங்கட்சி தரப்பிலிருந்து நக்கலும் நையாண்டியும் வந்து கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலிலே சொல்ல வந்த கருத்தை சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதைத் தவற விட்டுவிட்டு, மற்றதை எல்லாம் சுற்றிச் சுற்றி ஏன் வருகிறீர்கள்? சொல்ல வேண்டிய கருத்தை முதலிலே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு வரியிலே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் தருகிறேன். சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2006-ல்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னது, 2001-2006 காலகட்டமான மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலும், இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அது தவறு. இரத்து செய்வதற்குண்டான காரணம், உலக வங்கி இலவச மின்சாரம் நீங்கள் கொடுப்பதை நிறுத்தினால்தான், நாங்கள் கடன் உதவி செய்ய முடியும் என்று அவர்கள் அதிகாரப்பூர்வமாக சொன்னதன் அடிப்படையில், விவசாயிகள் கட்ட வேண்டிய அந்த மின் கட்டணத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மணியார்டர் மூலமாக அனுப்பியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தந்தையார் பெயரில் மின் இணைப்பு இருக்கின்றது. இப்போது அந்த மின் இணைப்பு வேறு பெயருக்கு மாற்றாத சூழ்நிலையில், மின் இணைப்பு யார் பெயருக்கு இருக்கிறதோ அவர்கள் பெயருக்குத் தானே மணி ஆர்டர் அனுப்ப முடியும். மின் இணைப்பு இல்லாதவர்கள் பெயருக்கு மணி ஆர்டர் அனுப்ப முடியுமா? (குறுக்கீடுகள்) அது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். விவசாயிகளுக்குப் பயிரெடுப்புக் கணக்கு என்று

ஒன்று இருக்கிறது. யார் பயிர் வைத்திருக்கிறார்கள் என்று V.A.O.-கிட்டே இருக்கிறது. (குறுக்கீடு) அது தெரியும் இல்லையா? பயிரெடுப்புக் கணக்கு என்று ஒன்று இருக்கிறது. யார் பயிர் வைத்திருக்கிறார்கள் என்று அதிலே இருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு யார் பெயரில் இருக்கின்றதோ அவர்கள் பெயருக்குத்தானே மணியார்டர் அனுப்ப முடியும்? மின் இணைப்பு இல்லாதவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது உண்மை. யாருடைய பெயரிலே இணைப்பு இருக்கிறதோ, அவர்கள் பெயருக்குத்தான் மணியார்டர் அனுப்ப முடியும். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு விவரம் தெரியாது. பாட்டனார் இறந்து விட்டால், தகப்பனார் இறந்து விட்டால், அந்த மின்சார இணைப்பைத் தங்களுடைய பெயருக்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை. அந்தக் காரணத்தினாலே அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. அதனாலே அந்தப் பணம் திரும்பி வந்தது. இருந்தாலுங்கூட, அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அந்த மணியார்டரை அனுப்புவதையும் ரத்து செய்துவிட்டு இலவச மின்சாரம் கொடுத்தீர்களே. அது மட்டும் ஏன் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எதிரொலி மணியன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) நிறைய வாய்ப்பு கொடுத்திருக்கிறேன்.

முற்பகல் 10–45

**திரு. கோ. எதிரொலி மணியன்:** விவசாயி உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு, எப்போது உற்பத்தியாகிற பொருள்களுக்கு உண்மையான விலை கிடைக்கிறதோ அன்றைக்குத்தான் அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையிலே மலர்ச்சி ஏற்பட முடியும். அந்த அளவிலேதான் விவசாயி தான் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு என்றைக்கு அவனால் விலை நிர்ணயம் செய்ய முடிகிறதோ



அன்றைக்குத்தான், அந்த விவசாயி வாழ்க்கையில் நன்மை கிடைக்கும் என்று சொல்லி, என் தொகுதியின் சார்பிலே... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோ. எதிரொலி மணியன்:** என்னுடைய தொகுதியினுடைய சார்பிலே ஒரு சில கோரிக்கைகளை நான் முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோ. எதிரொலி மணியன்:** என்னுடைய பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதி என்பது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதி மிக மிகப் பின்தங்கிய தொகுதி. அந்த மிக மிகப் பின்தங்கிய தொகுதியிலே மையமான கிராமமாக இருக்கிற பெரணமல்லூர் கிராமத்திலே 1917 ஆம் ஆண்டு கட்டப்பட்ட காவல் நிலையக் கட்டடம் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. அந்தக் காவல் துறை அலுவலகக் கட்டடத்தை இந்த அரசு புதியதாகக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வருகின்ற சேத்துப்பட்டு என்னுடைய தொகுதியில் இருக்கிற பெரிய நகரம் என்று சொன்னால், சேத்துப்பட்டு பேரூராட்சிதான். பத்தாயிரம் பேர் வசிக்கின்ற அந்த நகரத்திலே ஒரு மருத்துவமனை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது, முடியுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** சேத்துப்பட்டு நகரத்திற்கு ஒரு மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தருமாறு தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய சேத்துப்பட்டு நகரத்திலே ஓர் உழவர் சந்தையை உருவாக்கித் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்திலே, செய்யாறில் ஒரு கல்லூரியும், திருவண்ணாமலையில் ஒரு கல்லூரியும் இருக்கிறது. இரண்டு கல்லூரிகளுக்கும் இடையிலே நூறு கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இடையில் மைய இடமாக இருக்கிற இந்த பெரணமல்லூர் தொகுதியிலே அரசு கல்லூரி ஒன்றைத் தொடங்கவேண்டும். தொடங்கினால் அது எல்லோருக்கும் ஏதுவாக இருக்கும். எனவே, அரசு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே வேளையில் மிக முக்கியமாக என்னுடைய தொகுதியிலே அதிகமாக பால் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யக்கூடிய பால் செய்யாறு பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கும் அதை ஏற்றுக்கொள்ளாமல், அதிகமாக உற்பத்தியாகிற பாலை செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். அங்கு போய் சேருவதற்குள் அந்தப் பால் கெட்டு, தயிராகி விடுகிறது. இதனால், பால் உற்பத்தியாளர்கள் மிகுந்த நஷ்டத்திற்குள்ளாகிறார்கள். எனவே, என்னுடைய தொகுதியிலே மினி பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றைத் தொடங்குமாறு நான் உங்களை அன்போடு கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு அரிய வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துகளைச் சொல்லுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையில் இரண்டாவது முறையாகச் சட்டப் பேரவை உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பெரம்பூர் சட்டமன்றத்



தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக தேர்தல் பிரச்சாரத்தினுடைய இறுதி நாளில் தள்ளாத வயதிலும், தளராத உற்சாகத்தோடு, தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டு என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தோழர்களுக்கும், ஊழியர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தேர்தல் காலத்தில் தமிழக மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையில், இந்த நிதிநிலை அறிக்கை என்பது சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் முதலிலே வரவேற்கிறேன். குறிப்பாக ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், மாநிலம் முன்னேற வேண்டுமென்றால், அந்த மாநிலத்தினுடைய கல்வி வளர்ச்சி என்பது அதிகரிக்க வேண்டும். கல்வி அடிப்படைத் தேவையாக இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பள்ளிக் கல்விக்காகவும், உயர் கல்விக்காகவும் இரண்டு அமைச்சகங்களை உருவாக்கி, தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டிருப்பதை நாங்கள் வரவேற்பதோடு, கடந்த காலத்தில் தொகுப்பூதிய ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட 46,000 தொகுப்பூதிய ஆசிரியர்களை காலமுறை ஆசிரியர்களாக மாற்றியதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

(முற்பகல் 10-50)

புதிதாக 7,235 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று சொல்லியிருப்பது ஆசிரியர் பயிற்சி படித்த இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வந்திருக்கிறது. அதையும் நாங்கள் வரவேற்கிறோம். தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் மற்றும் அலுவலர் காலிப் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டுமென்ற வேண்டுகோளையும் முன்வைக்கிறேன். கடந்த காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களிலே 82 tutor-கள் தொகுப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 82 ஆசிரியர்களை, ஆசிரியர்களாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களும் காலமுறை ஆசிரியர்களாக மாற்றப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம்.

கடந்த காலத்தில், அறநிலையத் துறையின் சார்பாக நடத்தப்படக்கூடிய 5 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்கள் 32 பேர் 40 வயதைக் கடந்தவர்களாக இருக்கிறார்கள். தொகுப்பூதிய அடிப்படையிலே நியமிக்கப்பட்ட அவர்களையும் காலமுறை ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான கட்டணம் என்பது, இன்றைக்குத் தனியார் பொறியியல் கல்லூரிகள் தங்களது இஷ்டத்திற்குக் கட்டணங்களை வசூலிப்பது, சாதாரண மக்களிடம் பணத்தைக் கொள்ளையடிப்பது என்ற நிலைமை என்பது பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் நீடித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டணங்கள் முறைப்படுத்தப்படுவதற்காக, ஏற்கெனவே அமைக்கப்பட்ட நீதிபதி இராமன் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் கட்டணங்கள் வசூலிக்கப்படுவது ஒன்று. மற்றொன்று, பொறியியல் கல்லூரிகளினுடைய கட்டணங்கள் என்பது கடந்த ஆட்சிக் காலத்தில் கடுமையான அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய பொறியியல் கல்லூரிக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்தில்கூட பொறியியல் கல்லூரிக் கட்டணம் என்பது 28,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலும் இதுபோன்று, பொறியியல் கல்லூரிகளின் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நிருவாக ஒதுக்கீடு. நிருவாக ஒதுக்கீட்டிலே ஒற்றைச் சாளர முறை என்பது முறையாக பல்வேறு கல்லூரிகளிலே அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. தனியார் பொறியியல் கல்லூரிகள், Deemed University போன்ற இந்த நிறுவனங்களில் நிருவாக ஒதுக்கீட்டிலே நிரப்பப்படக்கூடிய இடங்கள் ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரிகளில் கட்டணக் குறைப்பு என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதேபோன்று உயிரியல் தொழில்நுட்பம் போன்ற பாடப் பிரிவுகளை அரசுக் கல்லூரிகளில் தொடங்க வேண்டும். ஏனென்றால், கடந்த கால ஆட்சியில் அரசுக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட வேண்டுமென்றால், எங்களிடம் நிதி இல்லை, அவையெல்லாம் சுய நிதிப் பாடப் பிரிவுகளாகத் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள்; தொடங்கினார்கள். அந்தப் பாடப் பிரிவுகள் எல்லாம் அரசுக் கட்டணங்களிலே நடத்தப்படும் என்று தமிழக அரசு, டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பதை வரவேற்பதோடு, அரசுக் கல்லூரிகளில் குறைந்த கட்டணங்களில் சாதாரண வீட்டுப் பிள்ளைகள் படிப்பதற்குப் புதிய பாடப் பிரிவுகளை நீங்கள் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளில் சுய நிதி பாடப் பிரிவுகள் கூடுதலாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு உதவி பெறக்கூடிய Aided College-களிலும் அந்தப் பாடப் பிரிவுகள் என்பதனை அரசுக் கட்டணத்தில் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளில் இருக்கக்கூடிய பல்வேறு பாடப் பிரிவுகள் எல்லாம் மறைமுகமாக நிறுத்தப்பட்டு, சுய நிதி பாடப் பிரிவுகளை பல்வேறு கல்லூரிகள் துவங்கி, சாதாரண மக்களிடம் கொள்ளையடிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. அந்த முயற்சியை மாநில அரசாங்கம் தடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம்

இன்றைக்கு அரசுக் கல்லூரிகளிலே காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் என்பது நிரப்பப்படும் என்று அறிவித்திருப்பதோடு, அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலத்தில் ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்ட, ஆசிரியர் பணியிட மாறுதல் என்பது, கடந்த 2 ஆண்டு காலமாக கலந்தாய்வு முறையிலே நடைபெறவில்லை. கலந்தாய்வு முறையில் ஆசிரியர் பணியிட மாறுதலை மீண்டும் கொண்டு வந்ததற்காக இந்த அரசாங்கத்தை நாங்கள் பாராட்டுகிறோம்.

முற்பகல் 10-55

சென்னை உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள், சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களும், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள தலைமையாசிரியர் காலிப் பணியிடங்களும் கலந்தாய்வு முறையிலான பணியிட மாறுதலுக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அதேபோன்று, அந்தப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் கலந்தாய்வு முறையிலே பணியிட மாறுதல் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கல்வித் துறை என்று வரும்போது குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாய்மொழியில் அவர்கள் கல்வி கற்பதற்கு தற்போது இருக்கும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக நடத்தப்படக்கூடிய விடுதிகளைப் புதுப்பிப்பதற்கு அல்லது புதிதாகக் கட்டுவதற்கு 10 கோடி ரூபாய் நிதி என்பது ஒதுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. நான் பணிவோடு இந்த ஆட்சியாளர்களிடம் வேண்டுகோள் வைக்க விரும்புவது, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக நடைபெறக்கூடிய பள்ளிக்கூடங்கள் என்பது கவனிப்பாரற்ற நிலைமையிலே இருந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 50 ஆண்டு காலத்திற்கு மேலாக செயல்படக்கூடிய வெங்கடேசபுரம் ஆதி திராவிடர் நல துவக்கப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக அந்தக் கட்டடங்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டன. அந்தக் கட்டடங்களை வைத்து பள்ளியை நடத்த முடியாது என்று ஆதி திராவிடர் நலத் துறை சார்பாகச் சொல்லப்பட்டு, அந்தப் பள்ளிக்கூடம் என்பது அருகிலே இருக்கக்கூடிய ஆதி திராவிடர் நலத் துறை ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு வரை அந்த ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிக்கான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா என்றால், கட்டப்படவில்லை. அந்த வெங்கடேசபுரம் ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே நீங்கள் அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

குடிசை மாற்று மேம்பாட்டுக்காக 250 கோடி ரூபாய் நிதி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரம், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இடங்கள் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாக, ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான பணம் முழுவதையும் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம்



செலுத்தியதற்குப் பின்புங்கூட, இன்றுவரை சென்னை மாநகரத்திலுடைய பல்வேறு பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு அந்த விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், வழங்கப்படவில்லை. விற்பனைப் பத்திரம் வழங்கப்படாத காரணத்தால், அவர்களால் பட்டா பெற முடியவில்லை. பட்டா பெற முடியாத காரணத்தினால், அந்தக் குடிசைப் பகுதிகள் மேம்பாடு அடைய முடிகிறதா என்றால், அடைய முடியவில்லை. ஆகவே, 20 ஆண்டு காலமாக விற்பனைப் பத்திரம் மறுக்கப்பட்டிருக்கக்கூடிய குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு உடனடியாக விற்பனைப் பத்திரம் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் B.S. மூர்த்தி நகரில் மூன்று அடுக்குமாடிக் குடியிருப்புகள் என்னுடைய பகுதியிலே இடிக்கப்பட்டன. பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால் இடிக்கப்பட்டு, அங்கே வாழ்ந்த 102 குடும்பத்தினர் தெருவோரத்திலே குடியமர்த்தப்பட்டார்கள். 13 ஆண்டுகள் ஆகியும், கடந்த ஐந்தாண்டு காலமாக தொடர்ச்சியாக அந்தக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் வைக்கப்பட்டாலும்கூட, ஐந்தாண்டு காலத்தில் அந்தக் குடியிருப்புகள் கட்டப்படவில்லை. இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்த அரசு புதிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில், வேலையில்லாத இளைஞர்களுக்கு, வேலையில்லா கால நிவாரணம், 150 ரூபாய், 200 ரூபாய், 300 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையில்லா கால நிவாரணம் மூன்று ஆண்டுகள் மட்டுமே வழங்கப்படும் என்று இருப்பதை ஐந்தாண்டுகளுக்கோ அல்லது தொடர்ச்சியாகவோ வேலையில்லாத இளைஞர்களுக்கு, வேலை கிடைக்கும்வரை அந்த நிவாரணம் வழங்குவதை இந்த அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்திலே வேலைக்கு ஆட்களை எடுக்கக் கூடாது என்ற வேலை நியமனத் தடையாணை அ.தி.மு.க. ஆட்சியில் அமலாக்கப்பட்ட காரணத்தினால், தமிழகத்திலே இருக்கக்கூடிய இளைஞர்கள் தங்களுக்கு இனிமேல் வேலை என்பது அரசாங்கத்திலே கிடைக்காது என்ற அவநம்பிக்கையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருந்தவர்கள்கூட அந்தப் பதிவைப் புதுப்பிக்காமல் விட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு

கிடைக்கின்ற வகையில் ஐந்தாண்டு காலம் பதிவைப் புதுப்பிக்காத இளைஞர்களுக்கு மீண்டும் அந்தப் பதிவைப் புதுப்பிப்பதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*முற்பகல் 11-00*

ஒரு மாநிலம் வளர்வதற்கு இளைஞர்கள் நலம் என்பது தேவையாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இளைஞர் நலக் கொள்கை என்பது இந்த மாநிலத்திலே அமலாக்கப்பட்டதா என்றால் அமலாக்கப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை, இளைஞர் நலக் கொள்கை என்பது உருவாக்கப்பட்டு, தமிழகத்திலே இருக்கக்கூடிய இளைஞர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

நாங்கள் பாராட்ட விரும்புவது மாவீரன் பகத்சிங்கினுடைய நூற்றாண்டு விழா— இந்த நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (மேசையடிக்கப்பெற்றது) நாட்டு விடுதலைப் போராட்டத்தில், எழுச்சிமிகு வரலாற்றில், புரட்சிக்கனலாக புத்தொளி வீசிய பகத்சிங்கின் நூற்றாண்டு விழா— ஆண்டு முழுவதும், மாதந்தோறும் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய முக்கிய நகரங்களிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பை மனதார நாங்கள் வரவேற்பதோடு, பாராட்டுவதோடு, மாவீரன் பகத்சிங்கிற்கு சென்னை மாநகரத்தினுடைய கடற்கரையில் ஒரு சிலையை அமைப்பதற்கான முயற்சியை டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்கு 5,000 குடியிருப்புகள் இடிக்கப்படும் என்ற அச்சத்தோடு, அங்கே இருக்கக்கூடிய மக்களெல்லாம் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். விமான நிலைய விரிவாக்கம் என்று வரும்போது, மக்கள் குடியிருப்புகளை அப்புறப்படுத்தாமல், மாற்று இடங்களிலே அந்த விமான நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய பெருநகர வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டம் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது, உண்மையிலேயே நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஏனென்றால், இடைக்கால நிதிநிலை அறிக்கையைக் கடந்த ஆட்சியிலே சமர்ப்பிக்கும்போது, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.18,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு,



அதற்கான பணிகள் நடைபெறுவதாக இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில், சென்னைப் பெருநகர வளர்ச்சி என்றாலே, பூங்காக்கள் அமைப்பது, நடைபாதைகள் அமைப்பது என்று இருந்ததை மாற்றி, இந்த மாநகரத்தினுடைய வளர்ந்து வரக்கூடிய மக்கள் தொகையைக் கணக்கில்கொண்டு, இங்கே சிறப்பான சாலைகள் அமைப்பது, மின்சார வசதிகளைச் செய்து கொடுப்பது, அடிப்படைத் தேவைகளான குடிநீர் வழங்குவது, கழிவுநீர் அகற்றுவது போன்ற தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுப்பது என்று நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, வெள்ளம் வரவேண்டிய அவசியம் இல்லை. மழை பெய்தாலே போதும். பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய மூன்று இரயில்வே உட்கடவுகள், பெரம்பூர் இரயில்வே உட்கடவு, அதேபோன்று, கணேசபுரம் இரயில்வே உட்கடவு, வியாசர்பாடி இரயில்வே உட்கடவு என்று இந்த மூன்று sub-way-களிலும் கூடுதலான அளவிற்குத் தண்ணீர் தேங்கிவிடக்கூடிய காரணத்தினால் பெரம்பூரிலிருந்து சென்னை மாநகரத்தோடு எங்களது மக்களெல்லாம் தொடர்பு கொள்ளமுடியாத நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று கடந்த காலத்தில் நாங்கள் வலியுறுத்தியபோது, 2002 ஆம் ஆண்டு ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். 2002 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் அவர்கள் வியாசர்பாடிக்கு வருகை தந்து ரூ.25 கோடி செலவிலே இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்றார்கள். நாங்களும் நம்பினோம். 2005 ஆம் ஆண்டு வெள்ளம் வந்தபோது மீண்டும் வந்து ரூ.50 கோடியில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்று சொன்னார்கள். இரயில்வே மேம்பாலம் கட்டப்படுவதற்கான நிதியை ஒதுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை.... (மேசையடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** திட்ட மதிப்பீடு என்பதுகூட தயாரிக்காத சூழ்நிலையில், சென்னை மாநகரத்தினுடைய பெருவளர்ச்சியைக் கணக்கில்கொண்டு, வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் மேற்கொள்ள

வேண்டும். அதேபோன்று கணேசபுரம் இரயில்வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும். அதேபோன்று, கடந்த ஆட்சிக் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பெரம்பூர் தொகுதி மக்களின் சார்பாக...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள்.*

**திரு. கே. மகேந்திரன்:** *நான் வைக்க விரும்புகின்ற வேண்டுகோள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சேகர்பாபு அவர்களும், அண்ணன் திரு. ஜெயக்குமார் அவர்களும் (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். உட்காருங்கள். நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. கே. மகேந்திரன்:** *என்னைப் பேசவிடுங்கள். நீங்கள் எல்லாம் சீனியர் உறுப்பினர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள்.*

**திரு. கே. மகேந்திரன்:** *அதேபோன்று, பாலங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டதே தவிர, பாலங்கள் கட்டப்படவில்லை. அதற்கான ஆயத்தப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் அறிவித்தார்கள், திட்ட மதிப்பீடுகள்கூட தயார் செய்யப்படவில்லை என்று இங்கே குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். இரண்டு முறை அங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது மாண்புமிகு அம்மா அவர்களே அந்தப் பகுதிக்குச் சென்று நேரடியாகப் பார்த்தார்கள். அங்கே அந்த sub way-ல் நீர் சூழ்ந்து விடாதபடி, 75 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டு, முழுநேரமும் அந்த நீரை இறைக்கின்ற முன்னேற்பாடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த அரசு செய்தது என்பதை மாண்புமிகு உறுப்பினரும் நன்றாகவே அறிவார்கள். ரூ.50 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருந்த வேளையில்தான்,



ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*(முற்பகல் 11.05)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், சீக்கிரம் முடியுங்கள். ஒரு நிமிடம் தருகிறேன். ஒரு நிமிடம்... (குறுக்கீடுகள்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** Sir, Speaker sir. ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. மகேந்திரன், ஒரு நிமிடம் தருகிறேன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. கே. மகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், சென்னை மாநகரத்தினுடைய மேயராகப் பொறுப்பேற்றிருந்தபோது, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, சென்னை மாநகரத்தில் 10 மேம்பாலங்கள் கட்டுவதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருந்தபோது, (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) பெரம்பூர் தொகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த point-க்குப் போய் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள்.*

**திரு. கே. மகேந்திரன்:** ஆனால், சென்னை மாநகரத்தில் கட்ட வேண்டிய 10 மேம்பாலங்களுக்கு அடிக்கல் நாட்டியதில், பெரம்பூர் மேம்பாலம் மட்டும் கட்டப்படாமல் கடந்தகால ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டது. அந்தப் பெரம்பூர் மேம்பாலக் கட்டுமானப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டும்.

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker sir, Point of Order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order எல்லாம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. மகேந்திரன்:** என்னுடைய தொகுதியில், 1965 ஆம் ஆண்டு அகதிகளாக பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு அன்றைய ஆட்சியாளர்களால் இடம் என்பது ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், நீங்கள் சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. மகேந்திரன்:** 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி அகதிகளாகத் தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள் எல்லாம், பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர், இந்திரா நகர் என்ற மூன்று பகுதிகளில் அகதிகளாகக் குடியமர்த்தப்பட்டார்கள். குடியமர்த்தப்பட்டு 42 ஆண்டுகள் ஆகியும், இதுவரை அந்த மக்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள் வாழக்கூடிய சாஸ்திரி நகர், பக்தவத்சலம் காலனி, இந்திரா நகர் பகுதிகளுக்கு உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** என்னுடைய பகுதியில் இருக்கின்ற ஆடுதொட்டி என்பது நீண்டகாலமாக சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அந்த ஆடுதொட்டியைச் சீரமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழகத்தினுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கும், இடையிலே இடைமறித்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்திற்கு என்னை வேட்பாளராக



முன்மொழிந்து தேர்வு செய்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டக் குழுவிற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதேபோல, மாநிலக் குழுவிற்கும், கட்சிக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். இடையூறு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** எங்கள் திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, என்னுடைய வெற்றியை உறுதி செய்த தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவர், தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது வெற்றிக்காக என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து, "வெற்றி உறுதி செய்யப்பட்டது; சென்னையில் சந்திப்போம்" என்று வாழ்த்துக்கூறிய மரியாதைக்குரிய தமிழகத்தின் விடிவெள்ளி, தமிழகத்தின் எதிர்காலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை 22,706 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எனது திருத்துறைப்பூண்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பது அனைத்துப் பகுதி மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, குறை சொல்ல நினைப்பவர்கூட குறை கூறமுடியாத, குறை கண்டுபிடிக்கமுடியாத ஒரு நிதிநிலை அறிக்கையாகும். தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில், '122 நலத் திட்டங்களை நான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவேன்' என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையில், வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பேற்ற மே 13 ஆம் தேதி, 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்' என்ற சொல்லுக்கு இலக்கணமாக, முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில், 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்திற்கும், வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன் ரூ.6,866 கோடி ரூபாயைத்

தள்ளுபடி செய்து, உலக வரலாற்றுச் சாதனை படைத்தார்கள். மேலும், சத்துணவோடு வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்படும் என்பதற்கும் கையொப்பம் இட்டு, அனைவரும் ஏற்றத்தாழ்வற்ற முறையில் கல்வி கற்க ஏற்பாடு செய்த, கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, முட்டையையும் வழங்க உத்தரவிட்டார்கள்.

*முற்பகல் 11–10*

விவசாயத் தொழிலாளர் நல வாரியம். 1997 ஆம் ஆண்டு திருவாரூரில் விவசாயத் தொழிலாளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைச் சமூகப் பொருளாதார அடிப்படையில் ஆய்வு செய்ய, திரு. கோலப்பன், ஐ.ஏ.எஸ். தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தார்கள். 2000 ஆம் ஆண்டில் நல வாரியம் அமைக்கப்பட்டது. பின்னர், 2001 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வாரியத்தைக் கலைத்தார்கள். அன்றைய ஆட்சியாளர்களின் நிதிநிலை அறிக்கையில் நல வாரியம் குறித்து ஒன்றும் கூறவில்லையே என்று கேட்டபோது, "மேம்பட்ட முறையில் செய்வோம்" என்று அன்றைய முதல்வர் கூறி, ஆட்சி முடியும் நேரத்தில், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட நல வாரியத்திற்கு மாற்றாக, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். அதில் டாக்டர் கலைஞர் அவர்கள், நல வாரியத்தில் அறிவித்த சலுகைகள்தான் இருந்தனவே தவிர, வேறொன்றும் புதிய மாறுதல்கள் இல்லை. மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நல வாரியத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள். உங்களுக்கு தமிழகத்தில் உள்ள 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் சார்பிலும், என் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்தத் திட்டத்தில், சென்ற முறை, விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகளை இணைத்திருந்தீர்கள். இந்தமுறை குத்தகை விவசாயிகளையும் இணைத்து, நல வாரியத்தில் பயனடையச் செய்துள்ளீர்கள். இது பாராட்டிற்குரியது. நாங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் 86 இலட்சம் பேர் உள்ளார்கள். இவர்கள், பட்டியல் சாதியினர், பழங்குடியினர், மிகவும்



பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலான பெண்கள் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்தவர்கள். இவர்கள் தொழில் அடிப்படையில், பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனித் துறை ஒன்றை உருவாக்கி, அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டை வழங்குவதில் சென்ற ஆட்சியில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டன. அதனால் சென்ற ஆட்சியில் குடும்ப அட்டை கேட்டு மனுச் செய்தவர்களுக்கு இன்றுவரை கிடைக்காத போக்கு உள்ளது. நுகர்பொருள் வழங்கல் துறை இதன்மீது உரிய விசாரணை செய்து, தகுதி உள்ளவர்களுக்குக் குடும்ப அட்டை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குடிமனைப் பட்டா வழங்குதல். தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் குடிமனையும் பட்டாவும் இல்லாத மக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இவர்களில் பலர், சாலையோரங்களிலும், குளம், ஆறுகளின் கரையோரங்களிலும் உள்ளார்கள். இவர்கள் இருக்கும் இடங்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் வேண்டுகோளாக வைக்கிறேன்.

தமிழகத்தில் தரிசு நிலங்களைக் கண்டறிந்து, மேம்படுத்தி, குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவதற்கான திட்டம் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. நிலம் விநியோகம் செய்யும்போது, உள்ளூரில் உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

முதியோர் உதவித் தொகை. முதியோர் உதவித் தொகை, தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க, மாதந்தோறும் வழங்கி வந்த ரூ.200-க்குப் பதிலாக ரூ.400 என்று அறிவித்த டாக்டர் கலைஞர் அவர்களை மக்கள் மனம் நெகிழ்ந்து பாராட்டியதை நான் நேரில் கேட்டறிந்தேன். என் சிறிய வேண்டுகோள். ஆதரவற்ற என்பதற்குப் பதில், 60 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் வழங்குவதற்கான உதவியைச் செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் திருமண உதவித் தொகை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் சென்ற ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அத்திட்டத்தை, ஆட்சிப் பொறுப்பேற்ற

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், ரூ.10,000–லிருந்து ரூ.15,000 ஆக அறிவித்ததை வரவேற்கிறேன். சில இடங்களில் 8 ஆம் வகுப்பு வரை படித்தவர்களும் இத்திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு ஒரு மாறுதல் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், தொலைபேசி வசதி இருந்தால் இல்லை, ஓட்டு வீடு இருக்கக் கூடாது, பழைய இடிந்த மாடி வீடு இருந்தால்கூட இல்லை என்று சொல்கிறார்கள். இதில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர் நலனைப் பாதுகாக்க, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த இளைஞர்களுக்கு, வேலையில்லா காலங்களுக்கு உதவித் தொகை வழங்குவதை மனதாரப் பாராட்டுகிறேன். மேலும், மூன்றாண்டுகள் என்பதை ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்து நீட்டிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–15*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வித் தரம் உயர ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளுக்குச் சமமாகத் தேர்வு அடையச் செய்கின்றார்கள். அப்பள்ளிகளில் தேவையான ஆசிரியர்கள் இல்லாத நிலையுள்ளது. இந்த முறை புதிய அரசு காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதாகக் கூறியிருப்பது என்பது வரவேற்கத்தக்கது. ஆதி திராவிடர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான உதவியைச் செய்ய வேண்டுகிறேன்.

பகத்சிங் நூற்றாண்டு விழா. நாட்டு விடுதலை போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மாவீரன் பகத்சிங் நூற்றாண்டு விழா வரும் செப்டம்பர் திங்களில் தொடங்குவதை முன்னிட்டு இந்த ஆண்டு முழுவதும் மாதந்தோறும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் தியாக சீலனின் நினைவைப்போற்றும் நிகழ்ச்சிகள் அரசின் சார்பில் நடத்தப்படும் என்பதை வரவேற்கிறேன். அதேவேளையில், நூற்றாண்டின் நினைவாக மாவீரன் பகத்சிங் அவர்களுக்கு சிலை அல்லது மணிமண்டபம் ஒன்றை அமைத்து, இந்த ஆண்டை இளைஞர்களின் ஆண்டாக மத்திய அரசு அறிவிக்க தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்துள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், நமது மாநிலத்தில் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் பங்குபெறும் வேலைவாய்ப்பற்ற கிராம மக்கள், ஒருநாள் பணிக்கு ரூ.80/– ஊதியமாகப் பெறுவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை நீக்கும் வகையில், புதிதாக ஊரக விலைப்புள்ளி அட்டவணைக்கு ஏற்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் பயனாளிகள் அனைவருக்கும் நாளொன்றுக்கு ரூ.80/– கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதில் பணியாற்றிய கணினி உதவியாளர்களுக்கு வேலையில்லை என்ற நிலை உள்ளது. அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக விவசாயிகளைப் பாதுகாக்க கலைஞர் அரசு எடுத்த நடவடிக்கைகளை வரவேற்கின்றேன். அதேசமயம் விவசாயிகள் தங்கள் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், தங்களைப் பொருளாதார ரீதியாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கட்டுப்படியான விலை என்பது அவசியம். ஆண்டுக்காண்டு ஏற்படும் உற்பத்திச் செலவின் அடிப்படையில், அரசு விலை நிர்ணயித்து தமிழக விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் நிலையங்கள். தமிழகத்தில் நெல் உற்பத்தி 95 இலட்சம் மெட்ரிக் டன்னாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. அதேசமயம் முழு விளைச்சல் ஏற்படும்போது, வெளி மார்க்கெட்டில் நெல் விலை வீழ்ச்சி என்பது, உற்பத்திச் செலவைவிட குறைவதால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, தமிழகம் முழுவதும் அரசே கொள்முதல் செய்வதை உத்தரவாதப்படுத்த வேண்டும். மேலும், நெல்லுக்கு ஊக்கத் தொகை சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுத்ததைப்போல, மீண்டும் நெல்லுக்கு ஊக்கத் தொகை வழங்குவதை அறிவிக்க வேண்டும்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு, வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க மீண்டும் கொண்டுவந்த உழவர் சந்தைத் திட்டம், அனைவரும் வரவேற்கும் உன்னதத் திட்டம். விவசாயிகளின்

உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில்: உலகத் தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், தரம் பிரிப்பு, பதப்படுத்துதல் வசதிகளுடன், மூன்று வணிக முனையங்கள் சென்னை, கோவை, மதுரையில் அமைக்கப்படுவது மற்றும் கோவை மாவட்டம் பல்லடத்தில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைப் பழத்திற்கும் ஏற்றுமதிக்கேற்றவகையில், குளிர்பதன வசதிகளுடன்கூடிய விற்பனைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்றது.

விவசாய உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான விதைகளை, தமிழகத்தில்,பழங்காலங்களில், பாரம்பரியமான விவசாயிகளே பாதுகாத்து வந்தார்கள். ஆனால், உற்பத்தி அதிகரிப்பு என்ற நிலையில் புதிய வீரிய விதைகள், தமிழகத்தில் இந்தியாவில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** இந்திய, தமிழகச் சூழலுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், உலக வர்த்தக கொள்கை அமலாக்கப்பட்டபின், வெளிநாட்டு விதை கம்பெனிகள், மறுமுளைப்பு திறனற்ற விதைகள் மற்றும் தரமற்ற, இந்தியச் சூழலுக்கு ஏற்ற விதைகளை விநியோகிக்காததால், விவசாயிகளுக்கு உற்பத்தித் திறனில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இந்நிலையைப் போக்க தமிழகத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளை அதிகப்படுத்தி, தரமான விதைகளை உற்பத்தி செய்யும் நிலையை உருவாக்கவேண்டும். அனைத்து விதைகளையும் அரசே விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்கிற சூழலை உருவாக்க வேண்டும்.

*முற்பகல் 11–20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி திருத்துறைப்பூண்டி, மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இது விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு வர்த்தகர்கள் உள்ளடக்கிய தொகுதியாகும். எங்கள் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை அங்கே ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்பது. முந்தைய சட்டமன்ற உறுப்பினர் தோழர் பழனிசாமி அவர்கள்கூட, கடந்த சட்டமன்ற கூட்டத் தொடர்களில் பேசியிருக்கிறார்கள். ஏனோ தடைப்பட்டுள்ளது. மீண்டும், எங்களுடைய பகுதியின் எதிர்பார்ப்பு,



அரசு கலைக் கல்லூரி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் என்னுடைய கன்னிப் பேச்சில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் முதல் முறையாக இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். என்னுடைய பகுதிக்கு ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டையை தாலுகா தலைநகரமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது நடைபெறும் விவாதத்தில் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிவகாசி தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்த மக்கள் தலைவர் வைகோ அவர்களுக்கும், என் வெற்றிக்காக என்னுடைய தொகுதியில் பிரச்சாரம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக மக்கள் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும், எனக்கு வெற்றியைத் தந்த சிவகாசி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

சிறப்பான விவசாய முறைகள், நல்ல பலன்தரக்கூடிய பயிர்கள், ஏற்றுமதிக்குரிய விளைபொருட்கள், W.T.O. அமைப்பில் விவசாயிகளுக்குப் பயன்படும் விவரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் எளிதாகவும், விரைவாகவும் அறிந்துகொள்வதற்கு உதவுகின்ற வசதிகள் செய்வது பற்றி எந்த ஒரு திட்டமும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. மடகாஸ்கர் தீவில் ஹென்றி டி. லாலானிக் என்ற பாதிரியாரும், மாணவர்களும், உழவர்களுமாகச் சேர்ந்து செய்த ஆய்விற்குப்பிறகு, அவர்கள் அறிமுகப்படுத்திய விவசாய முறைகள் நெல் விவசாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. 2 அல்லது 3 டன் விளைந்த இடத்தில் 6 முதல் 8 டன் விளைகிறது. முன்பு தேவைப்பட்ட தண்ணீரில் 30 முதல் 40 சதவிகிதம்தான் இப்போது அந்தப் பயிருக்குத் தேவைப்படுகிறது. எவ்வித இரசாயன உரமும் அவர்கள் பயன்படுத்தவில்லை. இந்த மாதிரியான பயிர் செய்யும் முறைகளை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த

வேண்டும். நீர்ப்பாசனத்திற்குக் குறைவான நிதியும், வறட்சி நிவாரணங்களுக்கு அதிக நிதியும் ஒதுக்குகின்ற நிலைதான் இன்னும் தொடர்கின்றது.

Traitor Technology, Terminator Technology முறையில் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு வருகின்ற விதைகளைப் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆந்திர மாநிலம் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு Agricultural Technological Mission ஆரம்பித்துள்ளதுபோல் தமிழகத்திலும் விவசாயத் துறையை மேம்படுத்த வழி காண வேண்டும். விவசாயிகளுக்கென ஒரு Trade Organisation ஏற்படுத்த வேண்டும்.

பி.டி. பருத்தியின் மகசூல் பற்றி வேறுபட்ட கருத்துகள் உள்ளதால் அரசு, விவசாயிகளுக்கு அப்பருத்தியின் மகசூல் பற்றி விளக்க வேண்டும்.

Organic Farming என்ற இயற்கை உரமிடுதல் முறையைப் பயன்படுத்த விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆந்திராவில் ஒரு விவசாயி இயற்கை உரங்களையும், சில உத்திகளையும் கையாண்டு மகசூலில் சாதனை படைத்து தற்போது காப்புரிமை கேட்டுள்ளார். இந்த முயற்சிகளை நமது விவசாயிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும். கேரள மாநிலத்தில் பட்ஜெட்டில் Agricultural Debt Relief Commission நிறுவப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது ஒரு Quasi Judicial அமைப்பாகும். இந்த அமைப்பிற்கு, ஒரு மண்டலத்தையோ அல்லது மண்டலத்தில் உள்ள பயிர்களையோ, இயற்கையால் பாதிக்கப்பட்டது என்று அறிவிக்கும் அதிகாரமும், கடன் நிவாரணத்திற்கு சிபாரிசு செய்யும் அதிகாரமும் உள்ளது. தனியாரிடமிருந்து அதிக வட்டியில் பெறப்பட்ட கடன்களை, முழுமையாக இரத்து செய்யும் அதிகாரமும் அந்த அமைப்புக்கு உள்ளது. மேலும், அங்கு Farmers' Commission ஒன்று நிறுவப்படவுள்ளது. விவசாய விளைபொருட்களின் விலைகள் சீராக இருக்க ஆலோசனைகள் வழங்கும். Price Stabilisation Fund என்ற ஒரு நிதியும் அங்கு அமைக்கப்படவுள்ளது. மேலும், கேரள அரசு பயிர்க் கடனை, தவறாமல் திருப்பிக் கட்டுபவர்களுக்கு 4 சதவிகித வட்டியில் கடன் தரவும் பரிசீலிக்கிறது.

முற்பகல் 11-25

தென்னக நதிகளின் இணைப்புதான் எதிர்காலத்தில் நீர்ப்பாசனத்தில் ஏற்படும் பிரச்சினையைப் போக்க முடியும். நிலத்தடி நீர் வறண்டு, காவிரிப் படுகையும்கூட பாழாகும் அபாய நிலை உள்ளது. காவிரிப் பிரச்சினையில்



தமிழகத்திற்கு உரிய நீதி கிடைப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பாசனத்திற்கான தண்ணீர்ப் பிரச்சினையையும், குடிதண்ணீர்ப் பிரச்சினையையும் தீர்க்க தென்னக் நதிகள் இணைப்பு மட்டுமே தீர்வாக அமையும்.

பல்லடத்திலும், வேடசந்தூரிலும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய விவசாயிகள் மாநாட்டில் நதிநீர் இணைப்பினை வற்புறுத்தினோம். மாநாட்டில் கலந்து கொண்ட அன்றைய மத்திய நீர்ப்பாசன அமைச்சர் திரு. பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி நதிநீர் இணைப்பு நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். எங்கள் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் வைகோ. அவர்களின் முயற்சியால் மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் தென்னக நதிகள் இணைப்பிற்கு முன்னுரிமை கொடுக்கும் கோரிக்கை இடம் பெற்றது. இதே கருத்தை வலியுறுத்தி தமிழக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த எங்கள் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் வைகோ. அவர்கள் 42 நாட்கள் 1,200 கிலோ மீட்டர் நடைப் பயணம் மேற்கொண்டு கோடிக்கணக்கான மக்களைச் சந்தித்தார்.

அதேபோன்று வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், உயிர் காக்கும் இரத்த வங்கிகளை மேம்பாடு செய்வதற்கான எந்தக் குறிப்பும் இல்லை. அதிகரித்து வரும் சாலை விபத்துகள், நோய்கள், மகப்பேறு காலத் தேவைகள் ஆகிய நேரங்களில் உயிர் காக்க இரத்தம் தேவைப்படுகிறது. நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் ஆண்டுதோறும் தேவைப்படும் இரத்தம் 70 இலட்சம் யூனிட்டுகள். ஆனால், கிடைப்பதோ 45 இலட்சம் யூனிட்டுகள்தான். எனவே, இதன் முக்கியத்துவம் கருதித்தான் எங்கள் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் வைகோ. அவர்கள் சாதி, சமய, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, மக்கள் நலனை மையப்படுத்தி, மறுமலர்ச்சி இரத்ததானக் கழகங்களை மாவட்டந்தோறும் ஏற்பாடு செய்துள்ளார்கள். இதுவரை 85 ஆயிரம் யூனிட்டுகள் இரத்தம் நோயாளிகளுக்கு மறுமலர்ச்சி இரத்ததானக் கழகங்கள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சாரம். ஆண்டின் தொடக்கத்தில் 10,111 மெகாவாட்டாக மின் உற்பத்தி இருந்தது. கூடுதலாக 749 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டு, 10,760 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது என நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனி நபர் மின்சார நுகர்வு 20 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட, தற்போது 6 மடங்கு உயர்ந்துள்ளது. மின்சாரத் தேவை ஆண்டுக்கு 10 சதவீதம் அதிகமாகி

வருகிறது. அடுத்த ஆண்டுவாக்கில் தமிழகத்தில் 830 மெகாவாட் மின் பற்றாக்குறையும், 2010–ல் 1,500 மெகாவாட் மின் பற்றாக்குறையும் ஏற்படும் நிலை உள்ளது என நிபுணர்கள் கூறுகின்றனர். இதனைச் சரி செய்ய கூடங்குளம் அணு மின் நிலையத்தின்மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கும் அளவும் போதுமானதாக இருக்காது. கூடங்குளம் அணு மின் நிலையம் 2008-ல்தான் உற்பத்தியைத் துவக்கும். தமிழகம், கூடங்குளம் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 60 சதவீதத்தைக் கோரியது. ஆனால், கிடைக்கப் போவதோ 45 சதவீதம்தான். மேலும், கேரள மின்சார வாரியம் தன் வருவாயை நான்கு ஆண்டுகளில் இரு மடங்காக உயர்த்தியுள்ளது. அவ்வாரியம் கடைப்பிடித்த வழிவகைகளை தமிழக மின் வாரியமும் ஆராய வேண்டும்.

சாலை விபத்துகள். சாலை விபத்துகளைத் தடுக்க நிதிநிலை அறிக்கையில் போதுமான திட்டங்கள் இல்லை. அண்மையில் மறைந்த, புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் John Galbraith கூறும், 'கட்டுப்பாடற்ற செயல்பாடு' என்ற ஒன்றிற்கு உதாரணம் நமது சாலைகளையும், வாகனப் போக்குவரத்தையும்தான் கூற வேண்டும். 1776 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஏற்பட்ட அனைத்துப் போர்களிலும் இழந்த உயிர்களைக் காட்டிலும், சாலை விபத்துகளில் இழந்த உயிர்களின் எண்ணிக்கை 200 மடங்கு அதிகம் என்கின்றனர். நாட்டில் ஒவ்வொரு 40 வாகனத்திற்கும் ஒரு வாகனம் விபத்திற்கு உள்ளாகிறது. சரியான சாலைக் கட்டமைப்புகள் இன்றியும், கடுமையான சாலைப் போக்குவரத்து விதிகள் இல்லாத நிலையும், இதே பொருளாதார வளர்ச்சியும் நீடித்தால் நாட்டில் இன்னும் 40 ஆண்டுகளுக்குச் சாலை விபத்து இறப்பு குறையாது என்கின்றனர். விபத்துகளில் 35 சதவீதம் இரு சக்கர வாகனங்களாலும், 10 சதவீதம் விபத்துகள் போலி வாகன உதிரி பாகங்களாலும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் ஒரு மணி நேரத்தில் 6 சாலை விபத்துகள் நிகழ்கின்றன. ஒரு மணி நேரத்திற்கு ஒருவர் சாலை விபத்தில் உயிரிழக்கிறார். விலை மதிப்பற்ற உயிர்களை நாம் சாலை விபத்துகளில் இழந்துகொண்டிருக்கிறோம். எனவே, சாலைப் பாதுகாப்பு முக்கியத்துவம் கருதி, தமிழகத்தில் Road Safety Authority என்னும் ஒரு சாலைப் பாதுகாப்பு ஆணையத்தை நிறுவ வேண்டும். நகர்ப்புறங்களில் parking spaces அதிகமாக்க வேண்டும்.

*முற்பகல் 11–30*

நகராட்சி நிர்வாகம். நகர்ப் பகுதிகளுக்குக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். தமிழகத்தின் மக்கள் தொகையில் 44 சதவிகிதம்



பேர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். நாட்டின் நகர்ப்புற மக்களில் 21 சதவிகிதத்தினர் குடிசையில் வாழ்கின்றனர். 23 சதவிகித நகர்ப்புற குடியிருப்புகள் கழிப்பறை வசதி இல்லாதவையாகவும், 8 சதவிகித குடியிருப்புகள் பாதுகாப்பான குடிநீர் வசதி இல்லாமலும் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. மக்கள் தொகை வளர்ச்சி கிராமப் பகுதிகளில் 17.2 சதவிகிதம் ஆகவும், நகர்ப்புறங்களில் 31.2 சதவிகிதம் ஆகவும் உள்ளது. நகரமயமாக்கல் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு விரிவடைந்து வருவதால் குடிதண்ணீர், சுகாதாரம், பாதாளச் சாக்கடை, கழிவுகளை அகற்றுதல், மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தொகுதிப் பிரச்சினைகள். குட்டி ஜப்பான் என்று பண்டித நேருவால் பெருமையோடு அழைக்கப்பட்ட நகரம் சிவகாசி. சிவகாசி தொகுதியில் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டும். பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில், அச்சுத் தொழில்கள் நிறைந்த நகரம் சிவகாசி. ஆயிரக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களிலிருந்து அன்றாடம் சிவகாசி நகரத்திற்கு பல்வேறு பணிகளுக்காக வந்து சென்றுகொண்டிருக்கின்றனர். ஆகவே, சிவகாசி தொகுதியிலுள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இமாச்சலப் பிரதேச மாநிலம் சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் வெற்றி பெற்றிருப்பதற்கு அந்த மாநிலம் சாலைகள் போடுவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் முதலீடு செய்ததுதான் காரணம்.

மேலும், சிவகாசி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும் அமைத்திட வேண்டும். மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ், ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** நீதிமன்றம், வணிக வரி அலுவலகங்களுக்கும் நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டும். அரசு பஸ் டெப்போவிற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்ட வேண்டும். சிவகாசியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க மானூர் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும். அரசு ஆஸ்பத்திரியை மாவட்டத்

தலைமை ஆஸ்பத்திரியின் தரத்திற்கு ஈடாக உயர்த்த வேண்டும். விஸ்வநத்தத்தில் தனியாக போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டும். மேலும், சிவகாசியில் டிராஃபிக் போலீசுக்கு தனி அலுவலகம் அமைக்க வேண்டும். சிவகாசி தாலுகாவிற்குத் தனியாக நெடுஞ்சாலைத் துறை, உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் தி.மு.க. வழங்கிய முக்கியமான வாக்குறுதிகள் இந்த பட்ஜெட்டில் இடம் பெறவில்லை. அனைவருக்கும் கலர் டி.வி. என்று கூறியது வாக்காளர்களை ஏமாற்றுவதற்கான பித்தலாட்ட நடவடிக்கையாகும். நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் என்று வாக்குறுதி அளித்தது முழுக்க முழுக்க ஒரு மாய்மால ஏமாற்று வேலையாகும். பட்ஜெட்டில் பல அறிவிப்புகள் வெறும் மத்தாப்பு வெளிச்சம். மொத்தத்தில் சமூகத்தின் அடித்தட்டு மக்களை ஏமாற்றுகிற பட்ஜெட் என்று கூறி முடிக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மக்கள் மன்றத்தில் இரண்டாவது முறையாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பினை அளித்த, உலக அரசியல் அரங்கின் மனித நேயம் மிக்க மக்கள் போற்றும் அன்னையே, இந்தியத் துணைக் கண்டத்தின் மாபெரும் அரசியல் சக்தியே, தமிழ் மக்கள் போற்றும் தங்கத் தாரகையே, நீங்கள் இருக்கும் திசை நோக்கி தாள் பணிந்து வணங்குகிறேன். என்னை பல்லடம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியின் உறுப்பினராக இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்த எனது தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், செயல் வீரர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்றத்திற்கு மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்ததற்குப் பின்னரும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்குச் சட்டமன்றத்தில் இருக்கை அளித்தும்கூட, இந்தச் சட்டமன்றத்தினுடைய வளாகத்தைவிட்டு ஒரு கூண்டு அமைக்கப்பட்டு, அதிலே நின்று பேச வைத்திருக்கின்ற வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய



கருத்தைச் சொல்லுகின்றேன். இன்றையதினம் தமிழகத்தில் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று தீவிரவாதம், மதவாதம் தாண்டவம் ஆடுகின்றது.

முற்பகல் 11-35

தமிழகத்தில், குறிப்பாக கோவை நகரம்; 1991-க்குமுன் தமிழகம் சீர்குலைந்தது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர் மதவாதம், தீவிரவாதம் ஒழிக்கப்பட்டு, பாபர் மசூதி இடிக்கப்பட்டபோதுகூட, இந்திய துணைக் கண்டத்திலேயே மற்ற மாநிலங்களில் அசம்பாவிதம் நடைபெற்றபோது, தமிழகம் மட்டும் அமைதிப் பூங்காவாக இருந்த நிலைமை உருவாகியது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ஆளுகிற திறமையின் காரணமாக அன்றையதினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய காவலர்கள் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது, அண்டை மாநிலத்திற்கு பாதுகாப்புக்குச் செல்கின்ற அளவில் தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக விளங்கியது. அதற்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில்தான் 1998 ஆம் ஆண்டு கோவை நகரில் மதவாதம், தீவிரவாதம் தலைவிரித்தாடி, நூற்றுக்கணக்கான பேர் உயிரிழந்து, உடைமை இழந்து, வியாபாரம், தொழில் இழந்து சீர்குலைந்த ஆட்சியாக விளங்கியது என்பதை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குப் பின்னர், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற 2001-லிருந்து 2006 வரை, ஆட்சிப் பொறுப்பில் இருந்த வரை மதவாதம் இல்லை, தீவிரவாதம் இல்லை. வல்லரசு நாடுகளும், வளர்ந்த நாடுகளும், அண்டை மாநிலங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் தீவிரவாதத்தை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த நிலையில், தமிழகத்தில் ஆளுகிற திறமையின் காரணமாக, இருக்கின்ற காவலர்களை வைத்துக்கொண்டு, ஒரு இராணுவம் போல தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையிலே அன்று அமைதிப் பூங்காவாக ஆட்சி நடத்தினார்கள். அதன் விளைவுதான் இதே மாமன்றத்தில் இங்கு பல உறுப்பினர்கள், நான்கு மாநிலங்களுக்குச் சவால் விடுத்துக் கொண்டிருக்கிற வீரப்பனைப் பிடிக்க முடியுமா என்று

சவால் விட்டவர்கள் உண்டு. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூறியது உண்டு. ஆனால், சவாலுக்குச் சவாலாக ஏற்றுக்கொண்டு இந்த நாட்டுக்கும், இந்த உலகத்திற்கும் ஆளுகிற திறமையின் காரணமாக தீவிரவாதத்தை அடக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய தலைவி மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று என்ன நிலைமை? அதே கோவை நகரம் இன்று நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே சீர்குலைந்திருக்கிறது. கடந்த திங்கட்கிழமை அன்று 8 இடங்களிலே குண்டு வைக்கக்கூடிய சூழ்நிலை இருந்த நிலைமையும், அதற்குப் பின்னர் நாளொருமேனியாக, சேலம், அதற்குப் பின்னர் மதுரை, சென்னை என்று தமிழகத்தில் இன்றையதினம் தீவிரவாதம் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிற நிலைமை ஒரு பக்கம் இருக்கிறது. அருமைக்குரிய பேரவைக்கு நான் குறிப்பிடுவது எல்லாம், இன்று அதை விட்டுவிட்டு, ஆட்சியாளர்கள் புத்தன், ஏசு, காந்திபோல இருப்பவர்களாக பழைய அதிகாரிகளை நினைத்துக்கொண்டு, 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு கொடுக்கப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அழைத்து வந்து குற்றம், குறை தேடிக்கொண்டு யார்மீது, எந்தப் பழியைச் சுமத்தலாம், எந்தப் பொய் வழக்கைப் போடலாம் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிற ஆட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற மக்கள், கோவை மாவட்டத்தில் இருக்கின்ற தொழில் செய்பவர்கள், வியாபாரம் செய்பவர்கள் அமைதி சீர்குலைந்து, அமைதி இழந்து, நித்தம் நித்தம் தவித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, இன்று சேலம், மதுரை போன்று தொடர்ந்து வரக்கூடிய இந்நிலைமைக்கு விரைவில் ஒரு முடிவு எடுப்பதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மட்டும்தான் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதற்குப் பின்னர் இன்றையதினம் நீங்கள் நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்ததில், நாங்கள் வரியில்லாத நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று கூறுகிறீர்கள். 5 ஆண்டு காலமாக, நிதிப் பற்றாக்குறை ஒரு பக்கம், 3 ஆண்டு காலமாக கடுமையான் வறட்சி, வெள்ளம், சுனாமியில்—சுனாமியைப் பார்த்ததும் இல்லை, கேட்டதும் இல்லை, தமிழக மக்கள் எதிர்பாராத சுனாமி தாக்குதல்—எட்டாயிரத்து



சில்லறைபேர் கடலோரப் பகுதியிலே உயிரிழந்த நிலைமை. இத்தனையும் தாங்கிக்கொண்டு மத்திய அரசிலே இருக்கின்ற நிதியாவது அதிகமாகக் கிடைக்கும் என்ற நிலை இல்லாத காரணத்தால், நிதியும் ஆண்டு ஒன்றுக்கு நானூற்று சில்லறை கோடி ரூபாய், வளர்ந்த மாநிலம் என்று கூறிக்கொண்டு குறைத்துக் கொடுக்கிற நிலைமை இருந்தும்கூட, தமிழகத்தில் ஆளுகிற திறமையின் காரணமாக, நிர்வாகத் திறமையின் காரணமாக 5 ஆண்டு காலம் ஆட்சி நடத்தியபோது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று முறை நிதிநிலை அறிக்கையை வெளியிடும்போது, வரியே போடாத நிதிநிலை அறிக்கையை வெளியிட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-40*

இத்தகைய நிலையில் நீங்கள் பேசுகின்றீர்கள் இன்று, நாங்கள் வரியில்லாத நிதிநிலை அறிக்கையை அளித்தோம் என்று. தேர்தல் நேரத்தில் அறிக்கை அளித்திருக்கின்றீர்கள். இங்கிருக்கின்ற மக்களுக்கு அரிசியைக் கொடுப்போம், அதேபோன்று கொடுக்க முடியாத நிலத்தைக் கொடுப்போம் என்பது மட்டுமல்ல, டி.வி.யைக் கொடுப்போம் என்று. ஆனால், கேபிள் டி.வி.-க்கு இருக்கின்ற 200 ரூபாய், 250 ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருந்த கேபிள் டி.வி.யினுடைய கட்டணம் 50 ரூபாய் என்று அம்மா அரசு கொண்டு வந்திருந்த திட்டத்தை இரத்து செய்வோம் என்று கூறிக்கொண்டு நீங்கள் இரத்து செய்தீர்கள். அதுமட்டுமல்ல, உங்களுடைய நிதிநிலை அறிக்கை, உள்ளாட்சித் தேர்தலை மனதில் வைத்து, இன்று ஜோடனை செய்யக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையாகத்தான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மதிப்புக் கூட்டு வரியை 1-1-2007-லிருந்து கொண்டு வருவதாக இங்கே நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அதை சாதனை என்றும் ஓர் உறுப்பினர் இங்கே பேசினார். நான் குறிப்பிடுவதெல்லாம், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களால், இதே தமிழகத்தில் இங்கே தொழிலதிபர், வணிகர்களையும், அரசியலில் இருக்கின்ற அனைத்து பிரமுகர்களையும் அழைத்து இந்த VAT-ஐக் கொண்டு வரலாமா என்று கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன முடிவு

எடுத்தார்கள்? இங்கிருக்கின்ற வணிகர்கள், அதேபோன்று அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள் போன்றவர்களையெல்லாம் அழைத்து அவர்களோடு கலந்து அவர்கள் முடிவுக்கேற்ப அந்த மதிப்புக் கூட்டு வரியைக் கொண்டு வருவதற்காகப் பணியாற்றுவோம், அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன்தான் கொண்டு வருவோம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று, 1-1-2007 அன்று மதிப்புக் கூட்டு வரியைக் கொண்டு வருவோம் என்று கூறக்கூடிய இந்த அரசு இங்கு வணிகர்களுக்கு, சிறு வணிகர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறதா என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, தெரிந்து செய்தார்களோ அல்லது தெரியாமல் செய்தார்களோ என்று தெரியவில்லை, 1-1-2007 அன்று மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படுகிறது. அதே தேதியன்று, 1-1-2007 அன்று resale tax எடுக்கப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி வருகின்றபோது, மறுமுனை வரி automatic-ஆகப் போய்விடுகிறது. அது எதற்கு திரும்பி 1-1-2007 resale tax எடுக்கப்படுகிறது என்ற இந்த அறிவிப்பு வந்தது என்று தெரியவில்லை. இது வணிகர்களை ஏமாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஓர் அறிவிப்பு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று தமிழகத்தில் இன்று நிலைமை என்ன? எங்கு பார்த்தாலும் சிக்-குன்-குன்யா நோயினால் சுமார் 40 ஆயிரம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சுமார் 107 பேர் இறந்திருக்கின்றார்கள் என்று இன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால், இங்கு அதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று பார்த்தால், எத்தகைய நடவடிக்கையும் இல்லாத நிலைதான் தமிழகத்தில் இருக்கிறது என்பது மட்டுமல்ல, இன்று இந்த நோய் தமிழகத்தில் இருப்பதைப் பற்றி இந்த அரசு கவனம் செலுத்துகிறதா என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். என்னுடைய தொகுதியில் இரண்டு இடங்களுக்குச் செல்லுகின்றபோது, அங்கிருக்கின்ற மருத்துவர்கள்தான் போதுமான பணியைச் செய்திருக்கின்றார்களே ஒழிய, அதற்கென்று ஒரு அவசர நிலையாக, ஒரு awareness-ஆக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இதில் திட்டமிட்டு, உள்ளாட்சி, வருவாய்த் துறை என்று அத்தனையும் அந்தந்தப் பகுதிகளிலே எங்கே நோய் தாக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் தற்காப்பு நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படுமானால், அங்கிருக்கின்ற மக்களுடைய பீதியைப் போக்குவதற்கு வழி ஏற்படும்



என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுனாமி என்பதே தமிழகம் கேட்டிராத அளவுக்கு வந்தபோது, உடனடியாக நிவாரணப் பணியை, நடவடிக்கையை எடுத்ததை, அண்டை நாட்டைச் சார்ந்தவர்களும், அண்டை மாநிலங்களைச் சார்ந்தவர்களெல்லாம் மக்களைப் பாதுகாக்கக்கூடிய நிகழ்வை, எப்படி முதலமைச்சர் இப்படி திறமையாகச் செய்தார் என்று பாராட்டினார்கள். ஆனால், இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று தவித்துக்கொண்டிருக்கின்ற நிலைமையை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு, இந்த அரசு எத்தகைய நடவடிக்கையை எடுக்கப் போகிறது என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று ஊராட்சி ஒன்றியத்தினுடைய பள்ளிகளில் இருக்கக்கூடிய பள்ளிக் குழந்தைகளுக்குப் போதுமான திறனாய்வுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது மாண்புமிகு அம்மா அரசால் கொண்டு வரப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தின்மூலமாக திறனாய்வுப் போட்டிகள் முடிவுபெற்று பரிசுப் பொருட்கள் கொடுக்கக் கூடிய நிலையில் தேர்தல் வந்துவிட்டது. தேர்தல் வந்ததற்குப் பிறகு அந்த விளையாட்டுப் பொருட்கள் எல்லாம் அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்களிலேயே குவிந்துக் கிடக்கின்றன. இந்த அரசு அதை அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்குமா, கொடுக்காதா என்பது இந்த பட்ஜெட்டில் இல்லை. அது மட்டும் இல்லாமல் கைத்தறித் துறைக்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** நெசவாளருக்காக இலவச மின்சாரம் என்று இந்த ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். இன்று ஐம்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செ.ம. வேலுசாமி, அவர்களுடைய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தின் மூலமாக வாங்கப்பட்ட பரிசுப் பொருட்கள் கொடுக்கப்படுமா என்று

கேட்கிறார். தலைவர் கலைஞர் ஆட்சியில் யார் கொண்டு வந்திருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துகின்ற பழக்கத்தின் அடிப்படையில், அதிலே T.Shirt தவிர மீதமிருக்கிற, ஏற்கெனவே கொடுத்தது போக மீதியிருப்பதையும் கொடுக்க ஆலோசனையை தலைவர் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுப் பொருட்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பாதுகாப்பிலே வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஏறத்தாழ மூன்று மாத காலம் கழித்தும் இதைக் கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்ற ஆணை அரசிடத்திலேயிருந்து இதுவரையிலும் வரவில்லை. ஒரு தவறான தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பரிசுப் பொருட்களைப் பற்றி இங்கே விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவை எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. ஆனால், அந்தப் பரிசுப் பொருட்கள் எல்லாம் எப்படித் தயாரிக்கப்பட்டன என்று கேட்டால், தேர்தல் வரக்கூடிய நேரத்தில், தேர்தலில் எப்படியாவது மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முதலில் உட்காருங்கள். சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அந்தப் பரிசுப் பொருட்கள் எல்லாம் பனியன்களாக இருந்தாலும் சரி, தலையிலே அணியக்கூடிய தொப்பிகளாக இருந்தாலும் அதிலெல்லாம் முன்னாள் முதலமைச்சருடைய படத்தைப் போட்டு தயாரித்த பொருட்களாகும்.



எனவேதான், அவை திட்டமிட்டு பிரச்சாரத்திற்காக அரசியல் நோக்கத்திற்காகத் தயாரிக்கப்பட்ட பரிசுகள். தேர்தல் வந்துவிட்ட காரணத்தால், அவை எல்லாம் முழுமையாகக் கொடுக்கப்பட முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்துவிட்டது. எனவே, அதுகுறித்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். பரிசீலனையில் இருக்கிறது. முதலமைச்சருடைய அறிவுரையை ஏற்று, அந்த வகையிலே பரிசளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சொல்லியாகிவிட்டது. நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதற்குப் பதிலும் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலில். எதற்கு என்றால் நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) No point of order, no point of order, sit down. உட்காருங்கள். வேலுசாமி பேசுங்கள். இல்லையென்றால் மாற்றிக் கூப்பிடப் போகிறேன் உறுப்பினரை. (குறுக்கீடு) உங்கள் கருத்தை நீங்கள் சொன்னீர்கள். அமைச்சரும் அதற்குக் கருத்தைச் சொல்லியாகிவிட்டது. அதற்கு மேலே no point of order. வேலுசாமி பேசுங்கள். (குறுக்கீடு) வேலுசாமி பேசுங்கள். இல்லையென்றால் உறுப்பினரை மாற்றிக் கூப்பிடுவேன். (குறுக்கீடு) No point of order. உட்காருங்கள். நீங்கள் சொன்னீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) பேரவை விதி...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of Order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of Order, உட்காருங்கள். நீங்கள் சொன்னீர்கள், அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். உட்காருங்கள். பேரவை விதி (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) No point of Order. நீங்கள் சொன்னதற்கு அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) You cannot compel me, sit down. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முடியாது, முடியாது, உட்காருங்கள். அனுமதி இல்லை. உட்காருங்கள். அனுமதி இல்லை. உட்காருங்கள் முதலிலே.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சிறுதாவூர் தலித் மக்களின் நிலங்கள் அபகரிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை கமிஷன் அமைத்தல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–50*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் இந்த அறிக்கையை இந்த அவையில் முன்வைக்கின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் சிறுதாவூர் கிராமத்தில் தலித் மக்களுக்கும் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் வழங்கிய 53 ஏக்கர் நிலத்தில் அவர்கள் தொடர்ந்து சாகுபடி செய்து வந்தார்கள். அந்த நிலங்கள் சிலரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குப் பிறகு போலிப் பத்திரப் பதிவுகள் மற்றும் பட்டா மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*சிறுதாவூரில் நிலத்தைப் பறிகொடுத்து, பாதிப்புக்குள்ளாகியுள்ள தலித் மக்கள் மற்றும் நிலமற்ற விவசாயிகள் சில வாரங்களாகவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், விவசாயிகள் சங்கத்துடனும் இணைந்து போராட்டங்களை நடத்திவருகின்றார்கள். இன்று காலை 11–00 மணியளவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் ஊர்வலமாக வந்து இப்போது தலைமைச் செயலகத்திலே என்னைச் சந்தித்து, அவர்கள் பறிகொடுத்த நிலங்களைப் பற்றிய விவரங்களை என்னிடம் தந்து, அவற்றை மீட்டுத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர்களது கோரிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு அந்த மக்களின் நிலங்கள் உண்மையிலேயே அபகரிக்கப்பட்டிருக்கின்றனவா, அவை அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களா, அப்படியானால் அவற்றை ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் யார், இந்த நிலம் சம்பந்தமாக உரிமை மாற்றம் எதுவும் செய்யப்பட்டுள்ளதா, அப்படிச் செய்யப்பட்டிருந்தால்*





*அது செல்லத்தக்கதா, அதிகார துஷ்பிரயோகம் ஏதேனும் நடைபெற்றுள்ளதா என்பன போன்ற விவரங்களையெல்லாம் விசாரித்து அறிந்துகொள்வதற்காக சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் கே.பி. சிவசுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு விசாரணை கமிஷன் அமைப்பது என்றும், இரண்டு மாதங்களுக்குள்ளாக கமிஷனுடைய அறிக்கையைப் பெற்று, மேல் நடவடிக்கை எடுப்பது பற்றிப் பரிசீலனை செய்வது என்றும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

## 1. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் பொங்கலூர் நா. பழனிசாமி. (குறுக்கீடு)*

**திரு. செ.ம. வேலுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.-(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுடைய நேரம் முடிந்தது. உட்காரச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொங்கலூர் பழனிசாமி, பேசுங்கள் நீங்கள்.*

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலிலே எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவருக்கு 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 15 நிமிடங்கள் அவர் பேசியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** *1971 ஆம் ஆண்டு முதல் பலமுறை என்னை இந்த மன்றத்தில் மக்கள் பணியாற்ற வாய்ப்புகள் அளித்த எனது உயிரினும் மேலான தமிழினத்தின் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய கோவை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும்... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில் எல்லோரும். (குறுக்கீடுகள்) அடுத்து உங்கள் turn வரும், அப்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** எனக்காக உழைத்த எங்களது உள்ளம் கவர்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும், என்னோடு ஒத்துழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளை, நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினருக்கு 15 நிமிட நேரம் பேசக் கொடுத்திருக்கிறேன். பேசியிருக்கிறார் அவர். (குறுக்கீடுகள்)

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்."

என்ற தமிழ்மறையாம் வள்ளுவர் பெருந்தகையின் அந்த இலக்கணத்திற்குள் வருகின்ற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்களுக்கு மேல், 15 நிமிடங்கள் உங்கள் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இயக்கங்கள், கிறிஸ்துவ, இஸ்லாமிய இயக்கங்கள், திராவிடர் கழகம் ஆகிய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** நாடு தெரிந்த நல்லோர்களோடு கூட்டணி அமைத்து ஐந்தாவது முறையாக (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். இல்லையென்றால் வெளியேற்ற வேண்டி வரும். நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் அவ்வளவு பேரும்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)*

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்று, இனமான பேராசிரியர் அவர்கள் துணையோடு தயார் செய்த இந்த வரியே இல்லாத நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே ஒரு மகாசாசனம் என்றால் அது மிகையாகாது. நல்ல எண்ணம் கொண்டோர், நடுநிலையாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் அறிஞர்கள், நாட்டு மக்கள் அத்தனை பேரும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்றனர். இந்திய சரித்திரத்தில் தேர்தலில் சொன்ன அத்தனை வாக்குறுதிகளும் இடம் பெற்றிருக்கும் முதல் நிதிநிலை அறிக்கை இது ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இதுபோன்று நாம் பார்த்ததில்லை. தேர்தல் சமயத்தில் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த விவசாயிகள் கடன் ரத்து, வாரம் சத்துணவிலே இரண்டு முட்டை, இளைஞர்களுக்கு மாதம் 150, 200, 300 ரூபாய் என உதவித் தொகை, விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் போன்ற திட்டங்களைச் சொன்னபோது எங்களை எதிர்த்தவர்கள், இது முடியாது, சாத்தியமற்றது கலைஞர் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார், பொய் சொல்கிறார் என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள்.

முற்பகல் 11-55

தேர்தல் அறிக்கை வெளியிட்ட அன்றே, தமிழகமே இன்ப அதிர்ச்சிக்குள்ளானது. எதிர்த்தவர்களுக்கெல்லாம் அது இப்போது நடப்பதைப்போல பேரிடியாக அமைந்தது. 10 நாட்களில் தமிழகமே கலைஞர் பின்னாலே அணி வகுத்து நின்றது. அதற்குப் பின்னர் எந்தெந்தத் திட்டங்கள் எல்லாம் இயலாது என்று சொன்னார்களோ, அதே திட்டங்களைத் தாங்களும் மீண்டும் செய்வதாக தேர்தலிலே அறிவித்தார்கள். பள்ளியிலும், கல்லூரியிலும் காப்பி அடிப்பவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். தேர்தலிலே காப்பி அடித்த எதிர்க்

கட்சியைச் சார்ந்தவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் ஒன்று— T.C. கொடுத்து அனுப்புவார்கள் பள்ளியிலே அல்லது dismiss செய்வார்கள்—இன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்து எதிர்க் கட்சிக்கு T.C. கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, இதிலிருந்து அவர்கள் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் காப்பி அடித்த அவர்களால் ஒன்றே ஒன்றை மட்டும் காப்பி அடிக்க முடியவில்லை. கலைஞர் அவர்கள் என்னையே இந்தத் தமிழகத்திற்குத் தந்துவிட்டேன் என்று சொன்னார்கள். அதை மட்டும்தான் எதிர்க்கட்சித் தலைவர்களால் காப்பி அடிக்கமுடியவில்லை. அப்பேர்ப்பட்ட அருமையான (குறுக்கீடு) தேர்தல் அறிக்கையைத் தமிழகத்திற்குத் தந்து இன்றைக்கு அதிலே... (குறுக்கீடு)

## 4. சிறுதாவூர் தலித் மக்களின் நிலங்கள் அபகரிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை கமிஷன் அமைத்ததற்குப் பாராட்டுரைகள்

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதாவூர் தலித் மக்களுடைய நிலப் பிரச்சினையில் கடந்த கால ஆட்சியாளர்கள், தங்களுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, நிலப் பட்டா உடையவர்களுக்கே தெரியாமல் பெயர் மாற்றம் செய்து, அந்த அப்பாவி ஏழை எளிய தலித் மக்களின் வயிற்றில் அடித்ததோடு, அவர்களை அந்த நிலத்திற்குள்ளேயே நுழைய விடாமல் தடுத்ததைக் கண்டறிந்து, மீண்டும் அவர்களுக்கு அந்த நிலம் கிடைக்கவும், அந்த நிலத்தின் பெயர் மாற்றம் செய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து தண்டிக்கப்படவேண்டும் என்கிற வேண்டுகோளை ஏற்று, நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு நீதி விசாரணையை இங்கே நடத்துவதற்காக உத்தரவிட்டு, உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறியவும், அந்த நிலம் ஏழை மக்களுக்கு மீண்டும் திரும்பக் கிடைக்க நடவடிக்கை எடுக்கும் வகையிலே நீதி விசாரணைக்கு ஆணையிட்டதற்கு, மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துகளை, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், சிறுதாவூரிலே அரிஜனச் சமுதாயத்தைச் சார்ந்த



சில பேருடைய நிலங்கள், உரிமை பரிமாற்றம் செய்யப்பட்டு, உரிமையாளருக்குத் தெரியாமலே பரிமாற்றம் செய்யப்பட்டு, ஆக்கிரமிப்பு செய்தபோது மார்க்சிஸ்ட் கட்சியினரும், விவசாயிகள் சங்கமும் போராட்டம் நடத்தி, அந்த நிலத்தை மீட்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது, இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் வரதராஜன் அவர்கள் ஊர்வலமாக வந்து, முதலமைச்சரைச் சந்தித்து அதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்த உடனே, முதலமைச்சர், ஓய்வு பெற்ற நீதியரசரைக் கொண்டு ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த விசாரணை கமிஷன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிஜன மக்களுக்கு, விவசாய மக்களுக்கு நல்லது நடக்கும் என்ற எண்ணத்தோடு காங்கிரஸ் கட்சி இதை மனமாரப் பாராட்டி, இந்த விசாரணை கமிஷனை வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட சிறுதாவூர் கிராமத்தில், முன்னாள் முதலமைச்சர் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களால், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டா நிலத்தை, அதில் வாழ்ந்து அனுபவித்து வந்த தலித் பெருமக்களினுடைய பட்டா நிலத்தை, எவ்வித அறிவிப்பும் இல்லாமல், திடீரென அந்த நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்தது மட்டுமில்லாமல், சட்ட ரீதியாக அல்லாமல், சட்டத்திற்குப் புறம்பாக நிலத்தை பட்டா மாற்றம் செய்து, அந்த தலித் பெருமக்களின் வயிற்றில் அடித்து, அதுமட்டுமல்லாமல் ஜனநாயக நாட்டில் இருக்கிற பட்டா உரிமையை, யாருக்கும் தெரியாமலே மாற்றம் செய்த, பட்டா மாற்றம் என்ற ஜனநாயகப் படுகொலையைச் செய்த ஆட்சியாளர்களைக் கண்டிக்கிற வகையில் மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) அது வேறு ஒருவர் என்று சொன்னால் எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற போக்கிலே உடனடியாக நடவடிக்கை என்று அறிவித்திருப்பார்கள். ஆனால், ஜனநாயகத்தில் நம்பிக்கையை நிலைநாட்டுகிற முதலமைச்சர் என்ற காரணத்தால் இப்பொழுது ஜனநாயக ரீதியாக பட்டா மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா? என்ன குறைகள் என்பதையெல்லாம் கண்டறியக்கூடிய வகையில் ஜனநாயகத்திற்கு உயிரோட்டம் ஊட்டக்கூடிய வகையில் நல்ல நிலையை அறிவிப்பு செய்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த 110–வது விதியின்கீழ் அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த மகத்தான நடவடிக்கையை

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார வரவேற்று, நன்றிகூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது யாரும் எழுந்திருக்கக் கூடாது. உட்காருங்கள் முதலில்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முதலமைச்சர் அவர்களாலே சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கையில் அமர்ந்து கையைத் தூக்குங்கள். எழுந்து நிற்கிற பழக்கம் எல்லாம் இருக்கக் கூடாது. முதலில் உட்காருங்கள் எல்லோரும். உட்காருங்கள் முதலில். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் முதலில் உட்காருங்கள். முதலில் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் யாரும் விவாதம் பண்ணவில்லை. நன்றிதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். இல்லையென்றால் நடவடிக்கை எடுப்பேன். முதலில் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். அவர்கள் நன்றி சொல்லிக் கொண்டிருக்கும்போது பிரச்சினை பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். முதலில் உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் முதலில். உறுப்பினர்கள் அத்தனைபேரும் உட்காருங்க்ள். அவர்கள் நன்றிதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு பேரும் உட்காருங்கள். இல்லையென்றால் நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட நிலம், பறிக்கப்பட்ட கொடுமைகளுக்கு முடிவுகட்டுகிற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு ஒரு விசாரணை கமிஷனை அமைத்து, சிறுதாவூரிலே தலித் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலத்தைப் பெறுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனதார வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள், இப்படிப்பட்ட நிலங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது யாரும் குறுக்கிடக் கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்படிப்பட்ட நிலங்கள் தமிழகம் முழுமையிலும் சென்ற ஆட்சியாளர்கள்மூலமாக பினாமியாக வாங்கப்பட்ட... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது யாரும் குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள் முதலில் (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உட்காருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபோது யாரும் எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். உங்களுக்கு நேரம் தருகிறேன். அவர் நன்றி தெரிவித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். அதற்கு அப்புறம் பார்க்கலாம். உறுப்பினர் ஜெயக்குமார், உட்காருங்கள் முதலில். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். முதலில் உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம், சீக்கிரம் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** கடந்த 4 ஆண்டு காலமாக வறட்சி அதிகமாகி, விவசாயிகள் எல்லாம் தமிழகத்திலே சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார்கள். ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய தோட்டங்களில் போர் வெல்கள் போட்டு, ஆழ்துளைக் கிணறு மோட்டார் அமைத்து எல்லோரும் கடன்பட்டிருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், ஒட்டுமொத்தமாக விவசாயிகள் கடன் 6,866 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து விவசாயிகள் மத்தியிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இல்லத்திலே பால் வார்த்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயிகள், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்... (குறுக்கீடு)

**திரு. ம. போளூர் வரதன்:** Speaker sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன், உட்காருங்கள் முதலில். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். குறுக்கீடு இருக்கக் கூடாது. உட்காருங்கள் முதலில். நீங்கள் பேசுங்கள்.

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** அ.தி.மு.க.வை சார்ந்தவர்களாக இருந்தாலும் நேரிலே எங்களிடம் சொல்லும்போது உங்களுடைய தலைவருக்கு நன்றி சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கோயில் கட்டி கும்பிடாத குறையாக (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் அவர்களுக்கு எல்லோரும் நன்றி சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலாக இனிமேல் கூட்டுறவுக் கடன்களுக்கு 2 சதவிகித வட்டியை தள்ளிவிட்டு 7 சதவிகிதமாக வட்டி விகிதம் குறைத்திருப்பதாக அறிவித்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்த ஒன்று. கடந்த ஆட்சியைவிட இந்த ஆட்சியிலே விவசாயத்திற்காக 120 கோடி ரூபாய் அதிகமாக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகள் சார்பிலே நான் அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும், குறிப்பாக காய்கனிகளுக்கும், மலர்களுக்கும் நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக உலகத் தரம் வாய்ந்த 3 வணிக முனையங்களை, சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் மிகப் பெரிய பொருட் செலவில் அமைக்க தமிழ்நாடு அரசு முன்வந்திருப்பதற்கு விவசாயிகள் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது பல்லடம் சட்டமன்றத் தொகுதியில், அது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்த தொகுதி என்றாலும்கூட, வெங்காயத்திற்காக குளிர் சாதனக் கிடங்கு அமைப்பதற்காக விவசாயத் துறை அமைச்சர்



அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

இன்றைக்கு டீசல், பெட்ரோல் போன்ற பொருள்கள் கிடைப்பது அரிதாகிக்கொண்டு வருகிறது. விலையும் ஏறிக்கொண்டு வருகிறது. இன்னும் 25 ஆண்டு காலத்திற்குள்ளாக Fossil Diesel என்று சொல்லப்படுகின்ற அந்தப் பொருள்கள் எல்லாம் தீர்ந்துவிடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட இருக்கிறது. ஆகவே, அதற்கு மாற்றுப்பொருள் கண்டாக வேண்டும். வாகனங்களை ஓட்ட வேண்டும். ஆகவே, அதற்காக காட்டாமணக்கு, Jatropha போன்ற விதைகளிலிருந்து டீசல் எடுப்பதற்காக உதவிகள் செய்ய இருப்பதாக அறிகின்றோம்.

இன்னொரு யோசனையையும் இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். அர்ஜென்டினா போன்ற நாடுகளில், கரும்பு விவசாயிகள் நேரடியாக கரும்பிலிருந்து O-Logan என்று சொல்லப்படுகின்ற டீசலைத் தயார் செய்கிறார்கள். அர்ஜென்டினாவிலே 80 சதவிகிதம் டீசல் அந்த ஊரிலே இருக்கின்ற வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதையும் நமது விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்திலே பரிட்சார்த்தமாகச் செய்துபார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த 50 இலட்சம் ஏக்கரையும் 2 ஏக்கர் வீதம் 25 இலட்சம் ஏழைகளுக்குக் கொடுப்பதாகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், அது ஏமாற்றுவேலை என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைத்தான் தலைவர் அவர்கள் சொன்னார்களேயொழிய, புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.

விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏராளமான நன்மைகளை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். விபத்திலே மரணமடைந்தால் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், விவசாயம் செய்கின்றவர்களுடைய குழந்தைகளுக்குப் படிப்புதவி, 60 வயதான விவசாயிகள் ஓய்வு பெற்றால் 400 ரூபாய், ஈமச் சடங்கிற்கு 200 ரூபாய் என்று ஏராளமான உதவிகளை விவசாயிகளுக்கு கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நாட்டிலே இருக்கின்ற மொழிகளில், ஏறத்தாழ இன்னும் 25 ஆண்டுகளிலே நிறைய மொழிகள் நாட்டிலேயிருந்து காணாமல் போய்விடும். உலகத்திலிருந்து அழிந்துவிடும் என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே தமிழ் மொழியையும் ஒன்றாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு தமிழ் கற்காமலேயே பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலும், பட்டம் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்காக அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதல் வகுப்பிலிருந்து தமிழ் ஒரு பாடமாக இருக்கும். இது படிப்படியாக 10 ஆம் வகுப்புவரை விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் அன்னைக்குச் சூட்டிய மணிமகுடமாக எதிர்காலத்தில் தமிழ் வளர்ச்சி அடைவதற்கு இது பேருதவியாக அமையும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்திலே, I.A.S., I.P.S., I.R.S., போன்ற பெரிய பட்டம் பெறுகின்றவர்கள் அதிகமாக வருவதில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் வட மாநிலங்களிலே, பீகார் போன்ற மாநிலங்களிலேயிருந்துதான் அதிகமாக இந்தத் துறைக்கு அதிகாரிகள் வருகிறார்கள். அது ஏனென்று விசாரித்தபொழுது அந்த மாநிலங்களில், குறிப்பாக பீகார் மாநிலத்தில் பள்ளியிலேயிருந்தும், கல்லூரியிலேயிருந்தும், அதை ஒரு syllabus ஆக I.A.S., I.R.S.. I.F.S., போன்ற தேர்வு பாடங்களையெல்லாம் ஒரு syllabus ஆக வைத்து அந்த மாநிலங்களிலே சொல்லித் தருகிறார்கள். அதையும் நமது கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. ஏராளமான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை என்ன நோக்கத்திற்காகவோ கடந்த ஓராண்டிலே மட்டும் B.Ed., பள்ளிகள் 200 கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தளவிலே, இது வேறு நோக்கத்திற்காக, தவறான முறையில் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். B.Ed.,-களுக்குத் தனியாகக் கல்லூரி தேவையில்லை. நல்ல கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து, P.S.G. போன்ற நிறுவனங்கள், அதேபோல, நல்ல நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. எப்படி B.A., B.Sc., B.Com.. போன்ற படிப்புகளைக் கல்லூரிகளிலே நாம் அனுமதிக்கிறோமோ அதேபோல, B.Ed.,-ஐயும் கல்லூரிகளிலே அனுமதித்தால் ஒரு இலட்சம், 2 இலட்சம் செலவு செய்து ஆசிரியர் வேலைக்கு வரக்கூடிய சூழ்நிலை தவிர்க்கப்படும்.



இப்போது ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஏராளமாக முளைத்திருக்கின்றன. அதுவும் சமீபத்திலே கடந்த ஓராண்டிலே மட்டும் எதை எதையோ கொடுத்து அந்த நிறுவனங்களை வாங்கி இன்றைக்கு ஒவ்வொரு ஆசிரியரும் 2 இலட்சம் கொடுத்தால்தான் இடம் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், 1980 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, பள்ளிகளிலேயே ஆசிரியர் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தார்கள். அதன்மூலமாக, இரண்டு ஆண்டுகள் ஏராளமான ஆசிரியர்கள், எந்தவிதமான செலவும் இல்லாமல், ஆசிரியர் படிப்பைக் கற்றார்கள். இன்றைக்குத் தனியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அனுமதித்து, ஏராளமான பணம் வியாபாரம் செய்கிறார்கள். கல்வி கற்றுக் கொடுக்கின்ற அந்த ஆசிரியர்கள் ஆரம்பத்திலேயே இலஞ்சம் கொடுத்து கற்ற காரணத்தினால், அவர்களுடைய உள்ளம் கெட்டு விடுகிறது. எதிர்காலச் சந்ததியினர் அதனால் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பள்ளிகளிலே நல்ல பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அதிலே ஆசிரியர் பயிற்சி நிலையங்களையும், அதேபோல உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அங்கேயே B.Ed. போன்ற வகுப்புகளையும் ஆரம்பிக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-15

அண்ணா பல்கலைக்கழகம் இன்றைக்கு உலகத்திலேயே மிகப் பெரிய பல்கலைக்கழகமாக, 250 கல்லூரிகளை, தொழில்நுட்பக் கல்லூரிகளை அடக்கிய பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே வேலைப்பளு அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசு, கலைஞருடைய அரசு இதேபோன்று கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதாக அறிவித்திருக்கிறது. ஆகவே, அதற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்களுடைய மாவட்டத்தில் குறிப்பாக, வால்பாறையில் நீண்ட நாட்களாகக் கேட்கப்பட்டு வந்த கல்லூரியை கலைஞர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதேபோல மேட்டூரிலும் அனுமதித்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், ஒரு பல் மருத்துவக் கல்லூரியோ, செவிலியர் கல்லூரியோ ஆரம்பிக்க வேண்டும் என்றால், கடந்த 5 ஆண்டுகளிலே பல்வேறு தடைகள் இருந்தன. அதற்கு முன்பு 1991–1996 வரை கூப்பிட்டுக் கூப்பிட்டு, இந்தக் கல்லூரிகளை எல்லாம் தொடங்க வேண்டுமென்று நாங்கள் கொடுத்தோம். இடையிலே என்ன காரணத்தினாலோ அது தடைபட்டது. இப்பொழுது மீண்டும் கலைஞர் அவர்கள் கிராமப் புறங்களிலே பல் மருத்துவக் கல்லூரிகளும், செவிலியர் கல்லூரிகளும், அதேபோல இன்னும் அது சம்பந்தமான கல்லூரிகளையெல்லாம் துவக்குவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய கோவை நகரிலே இருக்கின்ற பொது மருத்துவமனை மிகப் பெரிய மருத்துவமனை. தினந்தோறும் 6 ஆயிரம் பேர்கள், 7 ஆயிரம் பேர்கள் வந்து செல்கின்ற அந்த மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்கியிருப்பது பாராட்டத்தக்கது.

அமெரிக்கா வாழ் இந்தியர் ஒருவர் அந்த மருத்துவமனைக்காக 10 கோடி ரூபாய் நிதியினை அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த 10 கோடி ரூபாயோடு இன்னொரு 15 அல்லது 20 கோடி ரூபாய் சேர்த்து நமது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பொது மருத்துவமனையை சென்னையிலே இருக்கின்ற மருத்துவமனையைப்போல, இரண்டு கட்டடங்கள் இல்லாவிட்டாலும், ஒரு புதிய கட்டடத்தை அமைத்து, எங்களுடைய ஊருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சேலத்திலே தொழில்கள், இன்றைக்கு சேலத்திலே உருட்டாலை. Cold Rolling, Hot Rolling Mill என்ற Stainless Rolling Mill இருக்கின்றது. இந்த ஆண்டு Cold Rolling Mill 1,553 கோடி ரூபாயிலே அனுமதித்திருக்கிறார்கள். இதற்கு என்னுடைய பாராட்டுக்கள், நான் வேண்டுவதெல்லாம் ஒரு குறை பற்றியதாகும். சேலத்திற்கு அருகில் கஞ்சமலை இருக்கிறது. 50 மில்லியன் இரும்புத் தாது அங்கே இருக்கிறது. அந்த இரும்புத் தாதை எடுத்து ஒரு முழு உருக்காலையாக Integrated Steel Plant–ஆக அங்கே உருவாக்க வேண்டும். அதை எதிர்காலத்திலே நமது தலைவர் அவர்கள் செய்வார்கள் என்ற எனது நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





போக்குவரத்துத் துறையிலே பல்வேறு புதிய மாற்றங்களை ஏற்படுத்தி, மினி பஸ்களையும், நூற்றுக்கு மேற்பட்ட, ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளையும் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–20*

அதைவிட மேலாக எங்களுடைய கோவை மாவட்டத்தில் காற்றாலைகள் ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்தினுடைய மொத்த மின் உற்பத்தி 10 ஆயிரம் மெகாவாட் என்றால், காற்றாலைகள் மூலம் மூன்றில் ஒரு பங்கு ஏறத்தாழ 3 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆட்சியில் இந்த 3 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற காற்றாலைகளுக்கு N.O.C. அனுமதி கொடுத்து விட்டு, அதற்கான Sub-stations, அந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான வழிகளை அமைக்காமல், 3 ஆண்டுகளாக அந்த மின்சாரம் வீணாக்கப்படுகிறது. 25, 30 சதவிகித மின்சாரம் வீணாகிறது. இன்றைக்குக் காற்று வந்துகூட கடன் வாங்கி அவர்கள் 18,000 கோடி ரூபாயிலே அந்தக் காற்றாலைகளை அமைத்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் கடன் கட்டாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். நமது மின் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான Sub-stations, அந்த மின்சாரம் செல்கின்ற பாதைகளை எல்லாம் அமைத்து, அதை சீர்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திலே எனது தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் குறித்து நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்திற்கு வருகை தந்து, அங்கு ஆய்வினை மேற்கொண்டார்கள். அப்பொழுது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், நாங்களும் பல்வேறு கோரிக்கைகளை---நான்கு மணி நேரம் சொன்னோம், அவர்களும் அதை பொறுமையாகக் கேட்டு இன்றைக்கு முதல் நடவடிக்கையாக திருப்பூரை மாநகராட்சியாக மாற்றுகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனது உள்ளார்ந்த, நெஞ்சார்ந்த, மனமார்ந்த உளப்பூர்வமான (மேசையைத் தட்டும் ஒலி) நன்றிகளை தளபதி அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதோடுகூட, 70 கோடி ரூபாயிலே வட்டச் சாலைகள், ஆரச் சாலைகள் அமைப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கோவை மாநகரிலே சங்கனூர்பள்ளம், சென்னையிலுள்ள கூவம் போல அது விளங்கி, கோவை மாநகரினைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. வெள்ளக் காலங்களிலே

ஏராளமான சேதத்தை ஏற்படுத்துகிறது. அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக நாங்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம். தலைவர் அவர்கள்கூட மே தினப் பொதுக் கூட்டத்திலே அந்த சங்கனூர்பள்ளத்தில் வாழ்கின்ற மக்கள் 25,000 பேர்களுக்கும் வாழ்வாதார உரிமைகளை ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் இந்த பட்ஜெட்டிலே வழிவகை காண வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பல்வேறு குடிசைகள், கோவை மாநகரப் பகுதியிலே ஏறத்தாழ 25,000 குடிசைகள் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் ஒரு நிரந்தரத் தீர்வை குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கோவையிலே ஏறத்தாழ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உரையை முடியுங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** ஒரேயொரு நிமிடம். கோவையிலே ஏறத்தாழ 25 சதவீதம் மக்கள் மலையாள மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் பெரும் பகுதியினர் ஈழுவன், தீழியா என்ற வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே B.C. status வழங்கப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முன்பு வழங்கப்பட்டது. ஆனால், இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த மக்கள் எல்லாம கல்லூரிக்கும், பள்ளிக்கும் செல்ல வேண்டியிருப்பதால் அந்த B.C. status-ஐ உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். தலைவர் அவர்களும் தேர்தல் சமயத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, ஓணம் பண்டிகை. மலையாளிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், ஓணம் பண்டிகைக்கு local holiday வேண்டுமென்று கேட்கிறார்கள், அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

ஒன்றே ஒன்று. எங்கள் மாவட்டத்திலே நீராறு–ஆனைமலை ஆறு திட்டம் நீண்டகாலமாக கிடப்பிலே கிடக்கிறது. கேரள அரசோடு கலந்து செய்ய வேண்டிய இந்தத் திட்டம், கேரளாவிலே இடமலையாறு என்ற ஒரு திட்டத்தை முடித்தால்தான் இந்த நீராறு–ஆனைமலை ஆறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால், கேரள அரசாங்கம் வேண்டும் என்றே இந்த இடமலையாறு திட்டத்தை நிறைவேற்றாமல்—5 சதவீதத் திட்டத்தை நிறைவேற்றாமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. பரம்பிகுளம்–ஆழியாறு பகுதி ஏறத்தாழ எட்டு, ஒன்பது



*தொகுதிகளுக்கு, இரண்டு மாவட்டங்களுக்கு நீராதாரத்தைக் கொடுக்கின்றது. அந்த பரம்பிகுளம்–ஆழியாறில் சரியான முறையிலே இன்றைக்கு நீர் வழங்கப்படாததால், அந்தப் பகுதி மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவிலே முடிப்பதற்கு நீராறு–ஆனைமலை ஆறு திட்டத்தை விரைவிலே முடிப்பதற்கு இந்த அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, இந்த அற்புதமான நிதிநிலை அறிக்கையை வழங்கிய தலைவர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை, பாராட்டுகளைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன்.*

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே இரண்டாவது முறையாக பணியாற்றக் கூடிய ஒரு நல்வாய்ப்பினை எனக்கு அளித்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி மரியாதைக்குரிய அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அரசியல் வாழ்க்கையிலே எல்லா பெருமைகளையும் அளித்திட்ட என்னுடைய அரசியல் ஆசான் மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

பட்டுக்கோட்டை தொகுதியிலே போட்டியிட்ட எனக்கு, என்னுடைய வெற்றிக்கு வித்திட்ட முத்தமிழ் வித்தகர், மரியாதைக்குரிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பகுதியிலே வந்திருந்து, என்னுடைய வெற்றிக்காக பிரச்சாரம் செய்திட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மரியாதைக்குரிய தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, தஞ்சை மாவட்டத்திலே ஒரு நல்ல வாய்ப்பினை அளித்து என்னை வெற்றிபெறச் செய்த பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன். 'எளியோருக்குச் செய்யும் உதவி இறைவனுக்குச் செய்யக்கூடிய காணிக்கை' என்று சொல்வார்கள். அதை மெய்ப்பிக்கக் கூடிய வகையிலே, ஒரு தலைசிறந்த பட்ஜெட்டை தமிழக மக்களுடைய நெஞ்சமெல்லாம் குளிரக்கூடிய வகையிலே, நமது மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டவாறு, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குக் கொடுத்து, சொன்னதைச் செய்வோம் என்பதை இந்த அரசு நிரூபித்து இருக்கின்றது. கடந்த ஐந்தாண்டுக் காலங்களிலே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இரண்டாண்டுக் காலம் கடுமையான வெள்ளம், மூன்றாண்டுக் காலம் கடுமையான வறட்சி. இந்த வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வயிற்றிலே பாலை வார்ப்பதுபோல, அனைத்துக் கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்து, அந்த விவசாய மக்களுக்கெல்லாம் உதவி செய்ததற்காக, தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த, விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்கின்ற முறையிலே என்னுடைய மனமார்ந்த நன்றியை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று இன்றைக்கு புதிய கடன்களுக்கு முன்பு இருந்ததைவிட 2 சதவீத வட்டியை நீங்கள் தள்ளிக் கொடுத்திருப்பது மிகப் பாராட்டுக்குரியது. அந்த வகையிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரு நல்ல ஆட்சியின் தொடக்கம் எவ்வாறு இருக்க வேண்டுமோ, அவ்வாறு இந்த அரசு நல்லாட்சியைத் தொடங்கி உள்ளது என்பதை இவை காட்டுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே, சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் கொண்டுவந்து, திருமண உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி, கல்விக்கு உதவி, மூப்படைந்தால் ஓய்வூதியம், ஈமச்சடங்கிற்கு உதவி என்று கருவறை முதல் கல்லறை வரை, அனைத்து உதவிகளையும் செய்யக்கூடிய உங்களை நான் மனமாரப் பாராட்டி, வரவேற்கின்றேன்.

இன்றைக்கு ஓய்வூதியம் வழங்குவதைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். இதிலே என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள



விரும்புகின்றேன். கடந்த கால ஆட்சியில்கூட, சமூக நலத் துறை குறித்த மானியக் கோரிக்கையிலே நான் பேசும்போது, இந்த O.A.P. என்று சொல்லக்கூடிய ஓய்வூதியம் கொடுக்கும்போது, ஆண் வாரிசு இருக்கக் கூடியவர்களுக்கு அது கிடையாது என்று சட்டத்திலே இருப்பதாகச் சொல்லி அதைக் கடைப்பிடிக்கின்றார்கள். என்னுடைய மரியாதைக்குரிய, நமது சக சட்டமன்ற உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும்போதுகூட அதைக் குறிப்பிட்டிருந்தார்கள். இன்றைக்குக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது சிதைந்துவிட்டது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பதே கிடையாது. அவரவர்கள், ஆண்கள் எல்லாம் திருமணம் ஆனவுடனே குடும்பத்தைப் பிரித்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். எனவே, கிராமங்களிலே நான் பல இடங்களிலே பார்க்கும்போது, இந்த O.A.P., ஆண் வாரிசு இருக்கிறது என்கிற காரணத்தினாலே, கிடைக்காத பல ஏழையெளியவர்கள் எல்லாம் என்னிடம் வந்து முறையிடும்போது, நாங்கள் எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்துகொண்டு இருக்கின்றோம். எனவே, தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், மரியாதைக்குரிய நமது அமைச்சர் அவர்கள், மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் எல்லாம் இதைப் பரிசீலித்து, ஆண் வாரிசு இருந்தாலும்கூட, அவர்களினுடைய பொருளாதார நிலைமையைக் கருதி, அவர்களுக்கும் இந்த O.A.P. என்று சொல்லக்கூடிய இந்த ஓய்வூதியத்தை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு விவசாயத்தைப் பொறுத்தவரையிலே, எல்லா வகையான விவசாயப் பெருமக்களுக்கும் உதவி செய்து இருக்கின்றீர்கள். ஆனால், தென்னை விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்றவை அதிகமாக தென்னை விளையக்கூடிய பகுதிகள். இன்றைக்கு தேங்காயினுடைய விலை வீழ்ச்சியடைந்து, இரண்டாண்டுகளுக்கு முன்பு 4 ரூபாய் 50 பைசா, மொத்தக் கொள்முதல் விலையிலே விற்ற தேங்காயினுடைய விலை இன்றைக்கு வீழ்ச்சியடைந்து 2 ரூபாய் 10 பைசா, 2 ரூபாய் 20 பைசாவிலே இருக்கின்றது. இன்றைக்கு அரசு NAFED மூலமாக கொப்பரையைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றது. அதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் எங்களுக்கு இல்லாவிட்டாலும்கூட, தமிழக அரசைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கொப்பரைக்கு 35 ரூபாய் 70 பைசா கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள், கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே பலவிதமான கஷ்டங்கள் எங்களுக்கு இருந்தன. ஏற்கெனவே இருக்கும்போது,

பலவிதமான கஷ்டங்கள், இந்த கொப்பரையைச் சென்று கொடுக்கும்போது, அவர்கள் கேட்கக்கூடிய V.A.O. Certificate, Tahsildar Certificate என்றெல்லாம் பலவிதமான குளறுபடிகள் இருந்தன. அன்றைக்கு மரியாதைக்குரிய நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சையிலே ஆய்வுக் கூட்டம் நடத்தியபோது, நான் இதை அவர்களிடம் குறிப்பிட்டேன். உடனடியாக நடவடிக்கை எடுத்து, தற்போது ஒரு circular அனுப்பியிருப்பதாக இப்போது அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அதிலே கொள்முதல் செய்யும்போது V.A.O. மட்டும் கையெழுத்து போட்டால் போதும், மற்றவர்கள் வேண்டாம் என்று சொல்லி, circular அனுப்பியிருப்பதாக என்னிடம் சொன்னார்கள். அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும்கூட, தென்னை விவசாயிகளினுடைய இந்தக் கஷ்டத்தை உணர்ந்து, இந்தக் கொப்பரைக் கொள்முதல் விலையை உயர்த்தி, 45 ரூபாய் ஒரு கிலோவுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தஞ்சை தென்னை விவசாயிகளினுடைய சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டுக்கோட்டை பகுதியிலே தென்னை விவசாய வணிக வளாகம் அமைக்க 1996-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றபொழுது ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது பின்பு கிடப்பில் போடப்பட்டது. கிடப்பில் போடப்பட்ட அந்தத் திட்டத்தை எடுத்து, மீண்டும் அந்தப் பகுதி விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையிலே தென்னை விவசாய வணிக வளாகம் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, நீங்கள் எடுத்திருக்கக் கூடிய அனைத்து நல்ல முயற்சிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்கள், நன்றிகள். இருந்தாலும்கூட, அதில் இருக்கக்கூடிய சில கோரிக்கைகளை மாத்திரம் நான் சொல்ல விரும்புகின்றேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தஞ்சையிலே இருக்கக்கூடிய Medical College மருத்துவக் கல்லூரி 44 வருடம் பாரம்பரியமிக்க ஒரு கல்லூரி. அங்கு இருக்கக்கூடிய துறைகளிலே இன்றைக்கு Master of Chirurgiae என்று சொல்லக்கூடிய மூளை மற்றும் நரம்பியல் படிப்பு அங்கே கிடையாது. எனவே, அந்தப் படிப்பைக் கொண்டுவர வேண்டும் என்று நான் பல முறை வற்புறுத்தியிருக்கின்றேன். மீண்டும் தமிழக அரசிடம் நான் வைக்கக்கூடியது; மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இன்றைக்கு நான் கேட்கக்கூடியது, அந்தப் படிப்பைக் கொண்டுவருவதன்



காரணமாக, அங்கே இருக்கக்கூடிய மாணவர்களும் பயன்பெறுவார்கள். அதேசமயத்தில் அந்த Department அங்கு வரக்கூடிய காரணத்தினால், அங்கு இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு அது மிகப் பயனளிக்கக்கூடிய வகையில் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

பணக்காரர்களுடைய வியாதி என்று கருதப்பட்ட Diabetics என்று சொல்லக்கூடிய நீரிழிவு நோய் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பல இடங்களிலே உழைப்பு குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால்—எல்லோருக்கும்—இந்த Diabetics என்பது எங்கு பார்த்தாலும் இருக்கிறது. எனவே, மருத்துவமனையில் சென்று பார்த்தால், Diabetics முற்றிவிட்டது என்று சொன்னால், காலைத்தான் அதிகமாகப் பாதிக்கின்றது. காலைப் பாதித்து கால்கள், விரல்களை எடுக்கக்கூடிய நிலைமை, காலை வெட்டி எடுக்கக்கூடிய நிலைமை எல்லாம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. சாதாரணமானவர்கள் எல்லாம் தனியார் clinic-க்குச் செல்லும்போது, அவர்களுடைய மருத்துவச் செலவு மிக அதிகமாக இருக்கிறது என்று கூறுகின்றார்கள். எனவே, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே இந்த Diabetic foot care clinic என்று சொல்லக்கூடிய Department-ஐ ஆரம்பித்து சர்க்கரை நோயாளிகளுக்கு உதவக்கூடிய வகையிலே அதை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய பணிவான கோரிக்கையினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்வியைப் பொறுத்தவரையிலே, இன்றைக்குத் தமிழிலே கல்வி கொடுக்கப்படும் என்று சொல்லக்கூடியது மிகவும் வரவேற்கக்கூடியது. அதே சமயத்திலே, எந்தெந்த மாவட்டத்திலே எல்லாம் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி இல்லையோ, அங்கெல்லாம் நாங்கள் அமைக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். முதன்முதலிலே விழுப்புரத்திலே அமைக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதிலே பரிட்சார்த்தமாக ஜப்பானிலும், சீனாவிலும் இருப்பதைப்போல, தாய் மொழியிலேயே M.B.B.S., என்று சொல்லக்கூடிய இளங்கலைப் படிப்புகளைக் கற்றுக் கொடுக்க, அதைத் தமிழிலேயே நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். பரிட்சார்த்தமாக ஒரு கல்லூரியிலே அதை நீங்கள் ஆரம்பித்து வைத்து இன்றைக்குத் தமிழுக்காக, உயிர்மூச்சாக வாழக்கூடிய நமது தமிழக முதல்வர் அவர்களுடைய பெயரையும் நீங்கள் அதற்குச்

கூட்ட வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவைப் பற்றி நான் சில கோரிக்கைகளை மதிப்பிற்குரிய எங்களுடைய அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். பட்டுக்கோட்டையிலே I.T.I., ஒன்று கூட்டுறவு சார்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு இடமும் வாங்கி வைத்திருக்கின்றீர்கள். ஆனால், கட்டடங்கள் இல்லாமல், ஒரு வாடகைக் கட்டடத்திலே மாதம் 18 ஆயிரம் ரூபாய் கொடுத்து இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அதைக் கட்டுவதற்கு நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று ஒரு சிறிய கோரிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். விரைவிலே கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜூலை 15, மரியாதைக்குரிய எங்களுடைய போற்றுதலுக்குரிய பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவத் துறையிலே இன்னொரு கோரிக்கையை விட்டுவிட்டேன். இன்றைக்கு Union Dispensary ஒன்று இருக்கிறது. ஊராக மருந்தகம் என்று சொல்லக்கூடிய ஒரு Union Dispensary இருக்கிறது. அந்த Union Dispensary-க்குப் போய்ப் பார்த்தீர்கள் என்றால், வருடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய்க்கு, 40 ஆயிரம் ரூபாய்க்கு மருந்து கொடுக்கிறார்கள். பாதி Dispensary-யிலே அதற்கு மருத்துவர்களே கிடையாது. இன்றைக்கு தஞ்சை, பட்டுக்கோட்டை தொகுதியிலே எடுத்துக்கொண்டால் காசாங்காடு, வாண்டாக்கோட்டை, தம்பிக்கோட்டை, வடகாடு என்ற மூன்று இடங்களிலே இருக்கின்றன. இரண்டு இடங்களிலே மருத்துவர்களே இல்லையென்று சொல்கின்றார்கள். எனவே, நமது மரியாதைக்குரிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த Dispensary-யை உங்கள் control-வில் எடுத்துக்கொள்வதற்குச் சட்டம் இடம் கொடுத்தால், நீங்கள் எடுத்து அதை நடத்தி, அதற்கு மருத்துவர்களைக் கொடுத்து, நல்ல முறையிலே இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை பகுதியிலே கடந்த பிப்ரவரி மாதம் வரையிலே இரண்டாயிரம் ரேஷன் கார்டுகளுக்குப் புதிய



விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை இன்னும் pending-லே இருந்துகொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். தயவுசெய்து மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து புதிய விண்ணப்பங்களுக்கு புதிய கார்டுகள் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பட்டுக்கோட்டை மக்களுடைய நீண்ட கால கோரிக்கைகளில் ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு, என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்ள விரும்புகின்றேன். மரியாதைக்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வந்திருக்கின்றேன். பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையிலே சாலை வசதிகள் மிகக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே நெருக்கடிகள் ஏற்படுகின்றன. போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டு, விபத்துகள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, பட்டுக்கோட்டை பகுதியிலே 8 கோடி ரூபாய் இருந்தால் போதும் என்று சொல்கிறார்கள் - ஒரு bye-pass சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் கொடுத்திருக்கின்றேன். நிச்சயமாக அவர்கள் அதைப் பரிசீலித்து முடிவு செய்து நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. செய்து கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பட்டுக்கோட்டை மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அங்கே Accident Ward, Trauma Ward கிடையாது. பக்கத்திலே இருக்கக்கூடிய E.C.R. என்று சொல்லக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலை வேலை இன்றைக்கு மிகத் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சாலை இன்னும் ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடத்திலே வந்துவிடும். அந்தச் சாலை வந்துவிட்டால், மிக அதிகமான போக்குவரத்து, சென்னைக்குச் செல்லக்கூடிய போக்குவரத்து எல்லாம் அந்த வழியாகத் திருப்பிவிடப்படும். எந்த விபத்து நடந்தாலும், தற்போதுகூட நாங்கள் தஞ்சைக்குத்தான் செல்லவேண்டியிருக்கின்றது. எனவே, பட்டுக்கோட்டை மருத்துவமனையிலே நீங்கள் accident ward அமைத்துக் கொடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு உதவ வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த பட்ஜெட்டைப்பற்றிப் பேச நல்வாய்ப்பினை அளித்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், ஐயா சுதர்சனம்

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே, குறைகள் சொல்ல எதுவுமில்லை, பாராட்ட வார்த்தைகள் இல்லையென்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.*

***திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த, உலகத் தமிழர்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற தமிழினப் போராளி, சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்திய தேசத்தின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்துகொண்டு, புகையிலை எதிர்ப்பிற்கு பல்வேறு சட்டங்களை இயற்றி, உலக நாடுகளையெல்லாம் கவர்ந்து, சமீபத்திலே அமெரிக்காவிலே நடைபெற்ற விழாவில், மிக உயர்ந்த விருதான Luther L. TERRY என்கிற விருதைப் பெற்று தமிழகத்திற்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிற, எங்களுடைய மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகிற வாய்ப்பினைத் தந்த, எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிற எங்கள் கட்சியினுடைய தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

“கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி”

என்கிற குறள் நெறிக்கேற்ப, இந்தியாவிலுள்ள அனைத்து மாநில முதல்வர்களும் வியந்து, திரும்பிப் பார்க்கின்ற வகையில், நிதிநிலை அறிக்கையை இவ்வையகம் போற்றும் அளவிற்குத் தந்த நமது தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மக்களின் நெஞ்சமெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாகக் கொள்ளை கொண்ட இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன். இந்த அரசு பலதரப்பு மக்களின் பாராட்டுதல்களைத் தேடிக்கொண்டது மட்டுமல்லாமல், பாட்டாளி மக்கள் கட்சியின் வரைவு நிதிநிலை அறிக்கையினையொத்த பல அம்சங்களைக் கொண்டதாகவும், பயன்



அடையாத பிரிவினரே இல்லையென்று எங்கள் அய்யா அவர்களால் பாராட்டப்பெற்ற இந்த நிதிநிலை அறிக்கையினை நானும் பாராட்டி, வரவேற்று மகிழ்கிறேன்.

முக்கியமாக நான் உறுப்பினராகப் பதவியேற்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்திலே பேசுகிறபோது, மிக மிகப் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்துத் தாருங்கள் என்கிற ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு முதலாவது அறிவிப்பாக விழுப்புரம் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியை அறிவித்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தக் கோரிக்கையினை ஏற்கெனவே வைத்த எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், என்னுடைய விழுப்புரம் மாவட்ட மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியை, பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் முதுகெலும்பான நமது விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் திட்டத்தைப்போட்டு, இந்தத் தள்ளுபடியால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்யும் வகையிலும், விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிர்க் கடன்கள் வழங்குவதற்கு வழி செய்யும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேசமயத்தில் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன், நடப்புக் குறுவைச் சாகுபடி காலத்திலிருந்து கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு சென்ற ஆண்டு வரை இருந்துவந்த ஒன்பது விழுக்காடு வட்டி என்று இருந்தது ஏழு விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு விழுக்காடு வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற இந்த இனிப்பான செய்தியைச் சொல்லி, எங்களைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்த இந்த அரசை மனதாரப் பாராட்டி, வரவேற்கிறேன்.

விவசாயிகளுக்கு காலம் காலமாக இருக்கிற ஒரு பிரச்சினையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு குண்டூசி தயாரிக்கிற முதலாளி

அதற்கான விலையை நிர்ணயிக்கிறான். ஆனால், விவசாயி உற்பத்திச் செய்கிற பொருளுக்கு இந்த நாட்டில் அவன் விலையை நிர்ணயிக்கிற ஒரு நிலை இல்லை. எனவே, அந்த நிலை இந்த அரசால் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற இந்த விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரிக்கிற ஒரு சட்டத்தை, இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் சமூகத்தினருக்கானச் சலுகைகள், ஏழை நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம், அதோடு சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கு அளித்து, மானத்தைக் காக்கின்ற நெசவாளர் நெஞ்சங்களில் பால் வார்த்த இந்த அரசைப் பாராட்டி வரவேற்கிறேன்.

*பிற்பகல் 12–40*

புதிய மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதன்மூலம், வணிகர்களின் வாட்டத்தைப் போக்கிய இந்த அரசை நான் பாராட்டி வரவேற்பதிலே பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

படித்த வேலையற்ற இளைஞர்களின் துயர் துடைக்கின்ற வகையில், மாதந்தோறும் உதவித் தொகை வழங்கி, இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய உறுப்பினர்களெல்லாம் இங்கே பேசியதைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் தமிழ்தான் எங்கும் இல்லை என்கிற ஒரு நிலையில், நம் தமிழ் மொழி முதல் வகுப்பிலிருந்து ஒரு பாடமாகத் தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்ற அதேவேளையில், குறிப்பாகக் கல்வித் துறையில் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரையில் அனைத்துப் பாடங்களையும் தமிழில் படிக்கும் நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏனென்றால், தமிழ் வழியில் படித்தவர்கள்தான் இந்த நாட்டிலே பெரிய மேதைகளாக வந்திருக்கிறார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் மறந்து போகிறார்கள். இன்றைக்கு ஆங்கில வழி மோகத்தில் புற்றீசல் போன்று உருவாக்கப்படுகிற ஆங்கில வழிக் கல்வி நிறுவனங்கள் தமிழகத்திலே கட்டுப்படுத்தப்படுகிற ஒரு நிலையை உடனே உண்டாக்கவேண்டும்.



தமிழ் வழியிலே படித்து, மேதைகளாக இருக்கின்ற, நம்முடைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் போன்றவர்கள், மாண்புமிகு நம்முடைய பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் திரு. வி.சி. குழந்தைசாமி, திரு. அனந்தகிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் தமிழ் வழியில் படித்தவர்கள் என்பதை இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வியை அளிக்க ஏதுவாக, பலவகைப் பாடத் திட்டங்கள் ஒழிக்கப்பட்டு, தமிழகத்திற்குள் ஒரே வகையான பாடத் திட்டம் இருக்கும் வகையில், பொதுப் பள்ளிக் கல்வி முறையைக் கொண்டுவர இந்த அரசு முனைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வணிக நோக்கோடு இன்றைக்குப் பெருகியிருக்கிற இந்த ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் ஏழையெளிய மக்கள் எல்லாம் கல்வி பெறமுடியாத ஒரு நிலை ஏற்படும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே, டெல்லி மாநிலத்திலே இருக்கிற அனைத்துத் தனியார் பள்ளிக் கூடங்களிலும், 20 சதவிகித இட ஒதுக்கீடு ஏழையெளிய மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதைப் போன்று, தமிழகத்திலேயும் உருவாகிற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாணவன், ஆரம்பப் படிப்பிலேயிருந்து, 12 ஆம் வகுப்பு படிக்கிற ஒரு மாணவன், அரசுப் பள்ளியிலே படித்தால், ஆங்கிலமும் ஒரு பாடமாகப் படிப்பவன், ஆங்கிலத்திலே சரளமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும், படிப்பதற்குமான ஒரு வாய்ப்பினை இந்த அரசு தமிழகத்திலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற மாநகராட்சி, நகராட்சிக் கல்வி நிலையங்களிலே ஆங்கில வழிக் கல்வி என்றிருக்கிறது. அதையெல்லாம் மாற்றி முழுமையாகத் தமிழ்ப்படுத்துகிற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற அரசில், +2 பாடத் திட்டத்தில், கிராமப்புற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படித்து முன்னேறக்கூடாது என்பதற்காக,

ஆசிரியர்களுக்கே புரியாத பாடத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அதனால், இந்த ஆண்டு cut off மதிப்பெண்கள் எல்லாம் குறைந்து போனதே இதற்கு உதாரணம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். குலக்கல்வி முறையை மேலும் கொண்டு வருவதற்கான சூழ்ச்சி சென்ற ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது என்பதை நாம் நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே 230 தனியார் பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 230 தனியார் பொறியியல் கல்லூரிகளிலே நன்கொடை வாங்காத கல்லூரியே இல்லை என்கின்ற நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. எனவேதான், ஏழையெளிய மக்கள் எல்லாம், இலட்சக்கணக்கான ரூபாயைச் செலுத்தி, பொறியியல் படிப்புகளிலே சேருவதற்கான வாய்ப்பு தமிழகத்திலே இல்லை. எனவேதான், இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிற செய்தியை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற 67 அரசுக் கல்லூரிகளிலே, இந்தப் பொறியியல் பாடங்களில் ஒன்றிரண்டு பிரிவுகளை உருவாக்கி, ஏழையெளிய மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பொதுமக்கள் பணத்திலே, பெற்றோர்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கிற நிகர்நிலைப் பல்கலைக்கழகக் கட்டடங்களையெல்லாம் இழுத்து மூடவேண்டும். அப்படி இழுத்து மூடியதற்குப் பின்னால், அந்தக் கட்டடங்களை அரசாங்கம் குத்தகையாக நூறு ஆண்டுகளுக்கு எடுத்து, தேவைப்பட்டால் அவர்களுக்கு மாத வாடகை கொடுத்து, அதையெல்லாம் அரசு கல்வி நிலையங்களாக மாற்றவேண்டுமென்ற எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களின் கோரிக்கையை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை மீறி நடத்துகிற கல்வி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை என்று இருக்கிற சிறை தண்டனையையும் அந்தக் கல்வி நிலையத்தை நடத்துபவர்கள்மீது எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-15

அடுத்து, இன்றைக்கு இந்தியாவெங்கும் பேசப்படுகிற ஒரு செய்தி, தனியார்த் துறையிலும் இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீடு, இந்தியப் பாராளுமன்றத்திலும் பேசப்படுகிற ஒரு செய்தி. தமிழகத்திலே, சமூக நீதிக்கு வித்திடுகிற, சமூக நீதியைக் காக்கிற ஒரு முதல் மாநிலமாக இருக்கிற தமிழகத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்தில் இருக்கிற, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு காத்திருப்போர் பட்டியலில் இருக்கிற 55 இலட்சம் இளைஞர்களுடைய எதிர்கால வாழ்க்கையைக் கருத்திலே கொண்டு, இங்கே அதிகமாக வேலைவாய்ப்பு உள்ள தனியார் நிறுவனங்களிலேயும் இட ஒதுக்கீட்டினை உண்டாக்கி, அதற்கு ஒரு சட்டத்தை இந்தச் சட்டப் பேரவையிலே நிறைவேற்றி, வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழாய்ந்த தமிழ்மகன் ஆளுகிற நாடு தமிழ்நாடு. அப்படிப்பட்ட தமிழகத்தில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லி வந்தோம். ஆனால், ஆட்சிமொழியாகத் தமிழ் இல்லை, பயிற்று மொழியாகவும் தமிழ் இல்லை. 1956 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஆட்சிமொழிச் சட்டம், முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு முழுமையான சட்டத்தை உருவாக்கி கிராம நிர்வாக அலுவலகம் முதல் கோட்டை வரை தமிழ்மொழியிலேயே நடத்தப்பட வேண்டும். அப்படித் தமிழில் நடத்தாதவர்களுக்குத் தண்டனை வழங்குகிற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணிக நிறுவனங்களிலே விளம்பரங்கள் தமிழில் இருக்க வேண்டுமென்கிற போராட்டத்தை நாங்கள் கடந்தகால ஆட்சியிலே நடத்தியிருக்கிறோம். அந்த நிலையில், விளம்பரப் பெயர்ப் பலகைகளிலே தமிழ் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை. எனவே இந்த அரசு, தமிழாய்ந்த தமிழ்மகன் ஆளுகின்ற இந்த அரசு, தமிழ்நாட்டில் இருக்கின்ற விளம்பரப் பெயர்ப் பலகைகளிலெல்லாம் தமிழுக்கு முன்னுரிமை அளிக்கிற ஒரு நிலையைக் கட்டாயமாக உண்டாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2006 ஜூலை 26

*பெரியார், அண்ணா, கலைஞர் அவர்கள் வழியில், தமிழ்நாட்டிலே தமிழ்முறைத் திருமணங்கள் ஏராளமாக நடத்தப்படுகின்றன. எங்களுடைய நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா அவர்களும், இந்தத் தமிழ்முறைத் திருமணத்தை, சிறப்பாக நடத்தி வருகிறார்கள். திருமணங்களிலே தமிழ் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், ஒரு திருமணத்திலே, நம்முடைய முதல்வர் அவர்கள் கலந்து கொண்ட அந்தத் திருமணத்திலே, எங்களுடைய நிறுவனத் தலைவர் அய்யா அவர்கள், தமிழ்முறையில் திருமணம் நடத்துகிறவர்களுக்கு பத்தாயிரம் ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** *அடுத்து, ஊடகங்கள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், வானொலிகள், திரைப்படங்கள் போன்றவற்றில்,* தமிழனுடைய பண்பாட்டைச் சீரழிக்கிற நிலை இருக்கிறது. இவையெல்லாம் மாற்றப்பட வேண்டும். தமிழ் இசைப் பள்ளிகளை, தமிழ் இசைக் கல்லூரிகளை மாவட்டந்தோறும் தொடங்கிட வேண்டும். தமிழ் இசைப் பள்ளிகளை உருவாக்கி, அதிலே பயிற்சிபெற்ற ஆசிரியர்களை அந்தத் தமிழ் இசைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில், தமிழ்நாட்டில் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை அளித்து, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஏற்றத்திற்கு வித்திட்ட இந்த அரசைப் பாராட்டி வரவேற்கிறேன்.

நான் சார்ந்திருக்கிற விழுப்புரம் மாவட்டம், மிக மிகப் பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே தொழிற்சாலைகள் இல்லை. எனவே, தொழிற்கூடங்களை அமைப்பதற்கான ஒரு தொழிற்பேட்டையை உண்டாக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மிக மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கிற என்னுடைய மேல்மலையனூர் தொகுதியிலே இருக்கிற மருத்துவமனைகள் எல்லாம் பழுதுபட்டு, மிகவும் சீரழிந்து இருக்கின்றன. குறிப்பாக, அனந்தபுரம் பேரூராட்சியில் இருக்கிற மருத்துவமனை, வளத்தி, அவலூர்பேட்டை, சத்தியமங்கலம் போன்ற மருத்துவமனைகளையெல்லாம் தரம் உயர்த்தி, 24 மணி நேர மருத்துவமனையாக அவற்றை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2006 ஜூலை 26] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

*மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியில், ஒரு அரசு கலைக் கல்லூரியையும், ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தையும் கொண்டுவர வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்து, செஞ்சி–திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலை, அடிக்கடி விபத்துக்கள் நடக்கிற ஒரு சாலையாக இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு அவசர சிகிச்சை நிலையத்தை உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேல்மலையனூர் என்கிற ஊரில் என்னுடைய தொகுதியில், அங்காளபரமேஸ்வரி கோவிலுக்கு வருகிற இலட்சக்கணக்கான பக்தர்களுக்குச் சிகிச்சை அளிக்கிறவிதத்தில், அங்கேயும் ஒரு அவசர சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இவற்றை என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையாக நான் முன்வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது கலந்து கொண்டு பேசுகிற வாய்ப்பினை அளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தை உரித்தாக்கி, நன்றி சொல்லி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*(பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.*

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வேட்பாளராக அறிவித்து வெற்றிபெறச் செய்த நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 9 தொகுதிகளின் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்திட்ட நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல்செய்து, இங்கே அமர்ந்திருக்கின்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய குறையைப் போக்குகின்ற வகையில் [illegible] நிதிநிலை அறிக்கையை தாக்கல்செய்த நம்முடைய [illegible]

D
V2V, 21/06
P06. S.1
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்
227380
சென்னை-600 008
நூலகம்

பேராசிரியர் அவர்களுக்கும், உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து வெற்றிபெறச் செய்த உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒரு நல்ல ஆட்சியை, தேர்தல் அறிக்கையிலே சொன்னதையெல்லாம் நிறைவேற்றுகின்ற வகையிலே ஒரு ஒப்பற்ற ஆட்சியை உருவாக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த தமிழக வாக்காளர் பெருமக்களுக்கும் இந்தநேரத்திலே நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் சொன்னார்கள், இது வரி இல்லாத பட்ஜெட் என்று. வரியில்லாத பட்ஜெட் என்பது உண்மைதான். அதேநேரத்திலே வரிகளைக் குறைத்த பட்ஜெட், வரிகளை நீக்கிய பட்ஜெட்டாகவும் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்திருக்கின்றார்கள். பருப்பு, பயறுவகைகள், சமையல் எண்ணெய் மீதான வரி விலக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அதற்காக மனம் தளராமல், வரி விலக்கப்பட்டிருக்கிறது, தேயிலை மீதான வரி குறைக்கப்பட்டிருக்கிறது கூடுதல் வரி மற்றும் மேல் வரி விலக்கப்பட்டிருக்கிறது. அதைவிட முக்கியமாக நெசவாளர்களுக்கு மிகவும் முக்கியமான சிட்டா நூலுக்கான அந்த வரிக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இதனாலே 56 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் அரசு அதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கழிவுத்தாள், எரிசாம்பல், சாம்பிராணி, உரிமம் பெற்ற தமிழ் மென்பொருள் போன்ற பொருள்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, வரிகளைக் குறைத்து, வரிகளை விலக்கிய ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கை இது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் நேரத்திலே தலைவர் அவர்கள் சொன்னதை நிறைவேற்றுகின்ற வகையிலே மே மாதம் 13 ஆம் தேதி பதவியேற்ற உடனேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையிலே அவர் முத்தான மூன்று உத்தரவுகளைப் போட்டார்கள். அதிலே, முதல் கையெழுத்து ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம். அந்தத் திட்டத்தின்மூலம், இன்றைக்கு கோடிக்கணக்கான மக்கள் பலனடைந்திருக்கின்றார்கள். கையெழுத்து போடுவதென்பது எல்லோராலும் போடமுடியும். இதற்கு முன்பு



ஆட்சியிலேயிருந்தவர்களும் போட்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் போட்ட கையெழுத்து, அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோதிலே போட்ட கையெழுத்தால் 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் அன்றைக்கு நடுரோட்டிலே நிறுத்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு 10,000 சாலைப் பணியாளர்களின் குடும்பங்கள் நடுத்தெருவிலே நிற்கவைக்கப்பட்டன. அதையெல்லாம்விட, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, போட்ட கையெழுத்து, 1¼ இலட்சம்பேர் ஒரே நாளில் dismiss செய்யப்பட்ட அந்தக் கையெழுத்தையும் அவர்கள் போட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து போடுகின்ற ஒவ்வொரு கையெழுத்தும், கோடிக்கணக்கான மக்களை, இலட்சக்கணக்கான மக்களை வாழவைக்கின்ற கையெழுத்தாக இருக்கிறதென்பதை நான் இந்தநேரத்திலே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாகப் போட்ட கையெழுத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கான அந்தக் கடன் தள்ளுபடி. ஏதோ இன்றைக்கு மட்டும் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவிக்கவில்லை. அவர் 1971-1976-லே ஆட்சிப் பொறுப்பிலே இரண்டாவது முறையாக இருந்தபொழுதே, தமிழ்நாட்டிலே பலபேர், விவசாயிகளெல்லாம் குத்தகை நிலத்தில்தான் அன்றைக்குப் பயிர்வைத்தார்கள். ஆனால், 1974-1975-லே அன்றைக்கு விளை பொருள்களுக்கான விலை கிடைக்காதபொழுதுதான், அவர்கள் குத்தகைக்குப் பயிர் வைத்த அந்த நிலங்களையெல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக்கிய நிலைமை 1971-1976-லே ஏற்பட்டது. ஆகவே, அப்பொழுதே விவசாயிகளைக் காப்பாற்றிய முதல்வர்தான் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989-லே மீண்டும் ஆட்சிக்கு வந்தபோதுதான் இந்த இலவச மின்சாரத்தைக் கொண்டுவந்தார்கள். இதை யாரும் மறுக்கமுடியாது, இன்றைக்கு பேசலாம். அது மட்டுமல்ல; 1990-லே அவர்கள் இலவச மின்சாரம் கொண்டுவந்தபோது 12 இலட்சம் விவசாயிகள் பலனடைந்திருக்கின்றார்கள். இன்றைக்கு 14 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் பலனடைந்தாலும்கூட, இதிலே நேரடியாகப் பலன் அடைந்தவன் என்கின்ற முறையிலே, இதில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், முந்தைய ஆட்சியினர் இலவச மின்சாரத்தை நிறுத்தியது உண்மை. நிறுத்தியது உண்மை மட்டுமல்ல. அதற்கானப்பணத்தை நான் கட்டியிருக்கிறேன். ஏனென்று சொன்னால்-

*பிற்பகல் 12–55*

**திரு. இரா. விசுவநாதன்:** Point of Order.

**திரு. க. சுந்தர்:** அதாவது விவசாயிகளுக்கு — கிராமத்திலே ஒன்று சொல்வார்கள். கொக்கு தலையிலே வெண்ணெயை வைத்துப் பிடிப்பது என்று சொல்வார்கள். ஆக, அந்தவகையிலே, (குறுக்கீடுகள்) நீங்கள் உண்மையிலேயே பணத்தை விவசாயிகளுக்கு அனுப்புவதாக இருந்தால், நீங்கள் நேரடியாக அந்த மின்கட்டணத்தைச் செலுத்துகின்ற அந்த மின்சார வாரிய அலுவலகத்திற்கே அனுப்பியிருக்க வேண்டும்..

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**திரு. க. சுந்தர்:** எனக்கும் அந்த மணியார்டரை அனுப்பி யிருக்கிறீர்கள். செத்துப்போன என் தாத்தாவிற்கு ஒரு மணியார்டர். செத்துப்போன என் அப்பாவிற்கு மூன்று மணியார்டர்கள், நான்கு மணியார்டர்கள் வந்தன. (குறுக்கீடுகள்) ஆக, நான் 2,500 ரூபாய் பணம் கட்டியிருக்கிறேன். நான்கு மின் இணைப்புகளுக்கு நான் பணத்தை மின்சார வாரிய அலுவலகத்திலே கட்டியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆக, அந்த மின்சாரம் இலவசமாகக் கட்டணம் கட்டிப் பெறப்பட்டதா என்பதை இந்த நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** Point of Order.

**திரு. க. சுந்தர்:** ஆக, இலவச மின்சாரத்தை வழங்கியவர் கலைஞர்தான். நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, நீங்கள் பயந்துகொண்டு திருப்பிச் செலுத்தியிருக்கிறீர்கள். அதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படி விவசாயிகளை வாழ வைக்கின்ற ஒரு ஆட்சி, 1990 ஆம் ஆண்டிலே, வழங்கினார்கள், தொடர்ந்து இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இப்போது இந்தப் புதிய சலுகையின்மூலம், இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் சுய உதவித் திட்டத்தின்மூலம்..

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...



**திரு. க. சுந்தர்:** 2,40,000 விவசாயிகள் இன்றைக்குப் பலன் அடைந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது, நான்தான், இந்தப் பிரச்சினையை முதன்முதலாக கிளப்பினேன். என்னுடைய பகுதியிலே—இப்போது மணியார்டர் அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, முன்னாள் முதலமைச்சர், இன்றைய சட்டமன்ற உறுப்பினர் (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் அமைச்சராக இருந்தீர்கள். நான்தான் கேள்வி கேட்டேன். பதில் வந்தது. அதுதான் சொல்கிறேன். Record-களிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் யாரும் எழுந்திருக்கக் கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** நான் கேள்வி கேட்கிறபொழுது,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே..

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மணியார்டர் அனுப்புவதாகச் சொல்கிறீர்களே, திருவண்ணாமலை மாவட்டப் பகுதியிலே கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் இறவைப் பாசன இணைப்பு வைத்திருக்கிற விவசாயிகள் இருக்கிறார்கள். அதிலே பாதி பேருக்குப் பணம் வந்ததாகச் சொல்கிறார்கள். பாதி பேருக்குப் பணம் வரவில்லை. வந்த பணமும் திரும்பிக் கொண்டிருக்கிறது. எனவே, அவரவரும் சொந்தப் பணத்தை வைத்து கொண்டு கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். முதலமைச்சர் சொன்னார், இல்லை நாங்கள் பணம் அனுப்புகிறோம் என்று சொன்னார். நான் கேட்டேன், கலைஞர் அவர்கள் இலவச மின்சாரம் கொடுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக அதை நீக்கியிருக்கிறீர்களேயொழிய வேறு ஒன்றும் அல்ல. காரணம், இங்கே

கோட்டையிலே உட்கார்ந்துகொண்டு, ஒரு வரியிலே செக்கைப் போட்டு அண்ணா சாலைக்கு அனுப்புவதை விட்டுவிட்டு இதற்காக கிட்டத்தட்ட மணியார்டர் செலவே 5 கோடி ரூபாய் ஆகிறதே, அது என்ன நியாயமா என்றுகூட நான் கேட்டேன் அப்போது முதலமைச்சர் அவர்களிடத்திலே.

அதோடு மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள் சொன்னதைப்போல, எங்களுடைய பகுதியிலேயே அந்தக் காலங்களிலே பணம் கட்டியிருப்பதற்கு இன்றைக்கும் இரசீது இருக்கிறது. அதை நாளைய தினம்கூட இந்த மாமன்றத்திலே கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எனவே, அப்போது பணம் கட்டப்பட்டிருக்கிறது. யார் பெயரில் பணம் கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால், காலையிலே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அதைப்போல இறந்தவர்கள்மீது எல்லாம் அன்றைக்கு மணியார்டர் போனது. அந்த சர்வீசுக்கு யார் பணம் கட்டுவது? அந்தப் பணம் எல்லாம் திரும்பி வந்துவிட்டது. எனவே, அதற்கு பணம் கட்டவேண்டிய சூழ்நிலை இருந்தது ஒரு பக்கம். இன்னொன்று பல பேருக்கு பணமே வரவில்லை. இறந்தவர்கள்மீது பணம் போனால் அந்த பம்புசெட்டுக்கு, அந்த சர்வீசுக்கு யார் பணம் கட்டுவது? சுந்தர் கட்டியிருப்பார். இன்னும் சொல்லப்போனால், இதே மாமன்றத்திலே நான் சொன்னேன். என்னுடைய தாத்தா தம்புசாமி இறந்துவிட்டார். அவருக்கு மணியார்டர் வந்திருக்கிறது. அந்த சர்வீசுக்கு யார் பணம் கட்டுவது? நான் கட்டுவதா, மாண்புமிகு முதலமைச்சராக இருந்த அவர் கட்டுவதா என்று நான் இதே மாமன்றத்தில் கேட்டிருக்கிறேன். ஆக, அந்த ஆட்சியிலே கலைஞர் அவர்கள் இலவச மின்சாரம் கொடுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக அது இரத்து செய்யப்பட்டதேயொழிய இலவச மின்சாரம் அந்த ஆட்சியிலே கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–3–1993 அன்று (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறபோதுதான் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அமைத்து, மேலும் விரைவுப்படுத்தப்பட்ட மின்சார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கும்போதுதான்,



பயனீட்டாளர்கள் அத்தனைப் பேருக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டுமென்ற ஒரு ஆணையை ஏற்று அதை அமல்படுத்தலாம் என்று அந்த ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மணியார்டரிலே குழப்பம் இருக்கிறது என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். மின்சார மானியம் வரும்போது அதைப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) கருத்தைச் சொல்லிவிட்டதால் record-ஆகிவிட்டது அல்லவா? விடுங்கள். (குறுக்கீடு) கருத்தைச் சொன்னதற்குப் பிறகும் திருப்பிச் சொல்வது சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சுந்தர்.

பிற்பகல் 1-00

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே பாதிக்கப்பட்டவன். (குறுக்கீடு) 4 பம்பு செட்டுகளுக்கு ரூ.625... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். ஒரே வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்கின்ற கருத்தை ஒரே வரியில் சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள். மற்ற உறுப்பினர்கள் எல்லாம் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்குமுறை ஆணையம் கொண்டு வந்ததை அந்த அரசு அன்றைக்கு ஏற்றுக்கொண்டது. ஆகவே, அப்போதும் அவர்கள் உலக வங்கியினுடைய வலியுறுத்துதலின் காரணமாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அன்றைக்கும் அவர்கள் முயற்சி எடுத்தார்கள். அன்றைக்கும் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்தது மட்டுமல்ல, மீட்டர் பொருத்தி அவர்களிடம் அந்த மீட்டர் கட்டணத்தைப் பெறலாம் என்று அந்த அரசு அன்றைக்கு ஒழுங்குமுறை ஆணையத்தின் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். ஆகவே, அண்ணா தி.மு.க. ஆட்சியிலே மட்டுமல்ல, தி.மு.க. ஆட்சியிலும் நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். மீட்டர் பொருத்துவதற்கு கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று சொன்னார்கள். அவர் இங்கே குறிப்பிட்டதைப் போல ஆணையம் வற்புறுத்திய நேரத்தில் நாங்கள் சொன்னோம், 'மீட்டரைக் கொண்டுபோய் பொருத்தினால் உடனே இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படும் என்று விவசாயிகள் புரட்சி செய்வார்கள். அதனாலே மீட்டர் பொருத்த முடியாது என்று சொன்னோம்.' நீங்கள் பொருத்துகிறீர்களோ, இல்லையோ, 2001 டிசம்பர் மாதத்திற்குள் அந்த மீட்டரைப் பொருத்துவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் முடிந்தால் முயற்சி செய்கிறோம் என்று சொன்னது உண்மை. ஆனால், தி.மு.க. ஆட்சியிலே இருக்கின்ற வரையிலே ஒரு விவசாயிக்குக்கூட மீட்டர் பொருத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி. (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் உலக வங்கி அறிவுறுத்தியது, மின்சார வாரியத்தினுடைய ஒழுங்குமுறை ஆணையம் வற்புறுத்தியது என்று காரணத்தைச் சொன்னார். ஆனால், இதே காரணத்தைச் சொல்கின்ற கடந்த கால அரசு, நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு எப்படி இலவச மின்சாரத்தை கொண்டு வந்தது? (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இலவச மின்சாரம் கொடுப்பதற்கு மனது இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இலவச மின்சாரத் திட்டத்திற்கு எதிரானவர்கள் அ.இ.அ.தி.மு.க.வினர். அந்தக் காரணத்தினாலே தொடர்ந்து அதை இரத்துச் செய்தார்கள். இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் சொல்லுங்கள். கருத்தை மட்டும் சொல்லுங்கள். மற்றவர்களை எல்லாம் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் சொல்லுங்கள். குறுக்கீடு யாரும் இருக்கக்கூடாது. ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள். கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இலவச மின்சாரம் இரத்து என்று சொல்கின்ற வாதம், அடிப்படையிலேயே தவறு என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே பிரச்சினை கடந்த ஆட்சிக் காலத்திலே சட்டமன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டு, பயனாளிகள்-விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தினால் ஒரு மாற்று ஏற்பாட்டை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செய்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இலவச மின்சாரமே கூடாது என்று மத்திய அரசு கொள்கை ரீதியாக வலியுறுத்தி வந்தது. அதுமட்டுமல்ல, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒழுங்குமுறை ஆணையமும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். ஒரே வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** விரிவான subject கொஞ்சம் விரிவான subject தி.மு.க. ஏற்றுக்கொண்ட, தி.மு.க.வின் ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட அந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் அதை வலியுறுத்தியது. அதுமட்டுமல்ல, மீட்டர் பொருத்துவதற்கும் அந்த ஒழுங்குமுறை ஆணையம் வலியுறுத்தியதை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கும் நன்றி. கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மின்சார வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக உலக வங்கியிலிருந்து நிதி பெறவேண்டும் என்பதற்காக அப்போது உலக வங்கியிடமிருந்து பணம் கேட்கின்றபோது, அவர்கள் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்ய வேண்டும், அப்போதுதான் உங்களுக்குப் பணம் வழங்கப்படும் என்று ஒரு condition போட்டார்கள். அதற்காக, விவசாயிகளும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், உலக வங்கியினுடைய condition-ஐயும் ஏற்றுக்கொள்வது போல, ஆனால், அதே சமயத்தில் violate செய்வதாகவும் ஏற்றுக்கொண்டு, அதற்காக ஒரு நடைமுறையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். நீங்கள் அந்த மானியத்தில் பேசும்போது இப்படி விளக்கமாகப் பேசலாம். இப்போது கருத்தை மட்டும் சொல்லுங்கள். சொல்லியதையே திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. அவர் சொன்னதிலே சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான் நானும் சொல்லப்போகிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான் நானும் சொல்கிறேன். உலக வங்கி வற்புறுத்தியது உண்மை. அதைப்போல ஒழுங்குமுறை ஆணையமும் வற்புறுத்தியது உண்மை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. (குறுக்கீடுகள்) சொல்ல வருகிறேனே, அதற்குள்ளே நீங்கள் — 2004–க்குப் பிறகு அதிமுக ஆட்சியிலே எப்படி இலவச மின்சாரம் வழங்கப்பட்டது என்றால், அதே ஆணையம் ஒரு விதிமுறையைச் சொன்னது. "நாங்கள் அரசாங்கத்தை இலவசமாக மின்சாரம் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை; அதனால் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதாக இருந்தால் நீங்கள் இலவச மின்சாரம் கொடுங்கள்" என்று ஆணையம் சொன்னது. அப்பொழுது முன்னாள் முதலமைச்சர் அதை ஏற்றுக்கொண்டு இலவச மின்சாரம் அளித்தார். அதைப்போல்தான் இப்பொழுது உள்ள முதலமைச்சரும் அந்த ஆணையம் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பை நீங்கள் கொடுத்தால்தான் இலவச மின்சாரம் கொடுக்க முடியும் என்று வற்புறுத்தியது, அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு 1,200 கோடி ரூபாய் அதனால் ஏற்படுகின்ற இழப்பை அரசாங்கமே கொடுக்கும் என்று சொல்லித்தான் இலவச மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவான விளக்க உரை வந்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. க. சுந்தர், பேசுங்கள்.



**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியாளர்களுக்கு விவசாயிகள்மீது உண்மையான அக்கறை இருந்திருக்குமேயானால், அந்தப் பணத்தை நேரடியாக மின்சார வாரியத்திற்குச் செலுத்தி இருந்தால், எந்தப் பிரச்சினையும் இல்லை. எந்த விவசாயியும் பாதிக்கப்பட்டு இருக்கமாட்டார்கள். நான் பணம் செலுத்தித்தான் மின்சாரத்தை அந்த 6 மாதத்திற்குப் பெற்றிருக்கிறேன். இதை என்னால் நிரூபிக்க முடியும். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தர். அமைச்சர் விளக்க உரை கொடுத்தாகிவிட்டது. அடுத்த subject-க்குப் போங்கள்.

**திரு. க. சுந்தர்:** ஆகவே, விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற அரசாக இன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதுமட்டுமல்லாமல், சுய நிதி திட்டத்தின்கீழ் பணம் கட்டி மின் இணைப்பு பெற்ற 2 இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகளுக்கும் இந்த ஆண்டு முதல் இலவச மின்சாரம் வழங்கியதை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1990-லே இலவச மின்சாரம் தந்தார்கள். 1996-லே உழவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகையிலே உழவர் சந்தைகள் கொண்டுவந்தார்கள். இன்றைக்கு 2006-லே விவசாயிகள் வாங்கிய கடன், கடன் வாங்கி அந்தக் கஷ்டத்தை அனுபவித்தால்தான் தெரிந்திருக்கும். அதெல்லாம் அவர்களுக்கு முந்தைய ஆட்சியாளர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்று சொன்னால், இந்தக் கடன் தள்ளுபடியிலே எனக்கு 3 இலட்சம் ரூபாய் தள்ளுபடி இந்த ஒரு கையெழுத்தால் மட்டும். அதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் பாதிப்பு; இந்த ஆட்சியிலே ஏற்பட்ட நன்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. க. சுந்தர்:** நாங்களும் கடன் வாங்கினோம். எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால் (குறுக்கீடு) எங்களுக்கு 40 ஏக்கர் நிலம் இருக்கிறது. விவசாயத்திலே வாங்கிய கடன்—கடன்தான், விவசாயத்திற்காகத் தொடர்ந்து வாங்குகிறோம். இன்றைக்கு நேற்று வாங்கவில்லை. நாங்கள் 50 வருடங்களாக கடன் வாங்குகிறோம். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே கடன் பெற்று விவசாயம்

செய்து வருகிறோம். ஆக, அதிலே ஏற்பட்ட நன்மைதானே தவிர, அது எல்லோருக்கும் ஏற்பட்ட பலன் நமக்கும் கிடைத்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே தள்ளுபடி என்று சொன்னபோது விவசாயிகள் குறைந்த அளவிலேதான் பலன் பெற்றார்கள். ஆனால், இங்கே ஆளுநர் உரையின்மீது பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நில வள வங்கியிலே வாங்கிய கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையையும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு தள்ளுபடி செய்ததுதான் மிகப்பெரிய விஷயம். அப்பொழுதுதான் அறுவடை இயந்திரம், டிராக்டர், டிரில்லர் வாங்கிய பல விவசாயிகள் இலட்சக்கணக்கிலே பலன் அடைந்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து என்னுடைய தொகுதியிலே பல குடும்பங்கள் திருப்பதிக்கே சென்று கடன் ஒழிந்தது என்று கொண்டாடி இருக்கிறார்கள். இன்னும்கூட சொல்லப் போனால், பூஜை அறையில் கடவுள் படத்தோடு, கலைஞர் படத்தையும் வைத்து இன்றைக்கு பூஜை செய்கின்ற விவசாயிகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் கண்டிருக்கிறேன் எனது தொகுதியிலே. அந்த அளவிற்கு இந்தக் கடன் தள்ளுபடி திட்டம் மிகப் புரட்சிகரமான ஒரு திட்டம். இலட்சக்கணக்கான மக்களை இன்றைக்குக் காப்பாற்றி இருக்கின்ற திட்டம். அதிலும், நில வள வங்கியிலே நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கிய விவசாயிகள் எல்லாம் தங்களுக்கு நிலம் சொந்தமாகி அந்த மகிழ்ச்சியிலே இருக்கிறார்கள். ஆக, இந்தத் திட்டமும், அந்த இரண்டாவது கையெழுத்தும் இலட்சக்கணக்கான மக்களை இன்றைக்குக் காப்பாற்றி இருக்கிறது. அந்த மூன்றாவது கையெழுத்தினால், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மிகப் பெரிய ஒரு தேசியவாதி என்பதை நிரூபித்திருக்கிறார்கள். 1997–லே சுதந்திரதினப் பொன்விழா கொண்டாட்டத்திலே அன்றைக்கு முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், அந்தப் பொன்விழா கொண்டாட்டத்தை எப்படிச் சிறப்பாகக் கொண்டாடி, தான் தேசிய நீரோட்டத்திலே கலந்தவர் என்பதை நிரூபித்தாரோ, அதைப்போலவே இன்றைக்கு நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்தநாள்—

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சுந்தர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.



**திரு. க. சுந்தர்:** இன்னும் வரவேயில்லையே? பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்தநாள் விழா சனிக்கிழமை வந்தது; ஜூலை 15, சனிக்கிழமை, அன்று அரசு விடுமுறை. ஆனால், ஓர் அரசு உத்தரவைப் போட்டு, பல்லாயிரக்கணக்கான பள்ளிகளிலே, குழந்தைகள் மையங்களிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்தநாள் விழாவை, வாரத்திற்கு இரண்டுமுறை முட்டை வழங்குகின்ற அந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தது. இன்றைக்கு நடுநிலையாளர்கள் மத்தியிலே இந்த அரசுக்கு மிகப் பெரிய ஒரு நல்ல பெயரை ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இன்னும் பல திட்டங்கள், நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே. நம்முடைய அரசு 1967–லே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, அன்றைக்குச் சொன்னார்கள், இந்த அரசே பெரியாருக்குக் காணிக்கை என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, அதைத் தொடர்ந்து நிரூபிக்கின்ற வகையிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், 1989–லே பெரியாருடைய கனவை நிறைவேற்றுகின்ற வகையிலே, பெண்களுக்குச் சொத்திலே சமப் பங்கு அளிக்கின்ற சட்டத்தை நிறைவேற்றினார்கள். 1996–லே அனைத்துச் சாதியினரும் ஒருங்கே வசிக்கின்ற பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கினார்கள். இப்போது, 2006–லே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தைப் போட்டதன்மூலம், தந்தையின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய தனயன் என்ற அந்தப் பட்டத்தை இன்றைக்குப் பெற்ற ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு, தொடர்ந்து பெரியாருக்குத் தொண்டாற்றுகின்ற வகையிலே அமைந்திருக்கிற அரசு என்பதை நிரூபிக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, திராவிட இயக்க ஆய்வு மையம் நிறுவும் கலைஞர் அவர்கள் இன்னும் பல நிகழ்ச்சிகள்மூலம்தான் ஒரு தேசியவாதி என்பதை நிரூபிக்கின்ற வகையிலே பகத்சிங் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறார்கள். வேலூர் சிப்பாய் புரட்சியின் 200–வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி, மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவாக திருப்பெரும்புதூரில் 'ராஜீவ் காந்தி விமானவியல் உயர்கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி', ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டம்; இன்னும் அம்பேத்கருக்கு பெருமை சேர்க்கின்ற வகையிலே, இன்றைக்கு பல

தலைவர்களை, தேசியத் தலைவர்களை மதிக்கின்ற ஒப்பற்ற தலைவர்தான் நம்முடைய முதல்வர் அவர்கள். ஆனால், அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களை எப்படியெல்லாம் இழிவுபடுத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, 1996–2001-லே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இங்கே பல கோரிக்கைகளை நான் இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பினேன். எல்லா கோரிக்கைகளையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள், ஒரேயொரு கோரிக்கையைத் தவிர. ஆனால், நிறைவேற்றிய கோரிக்கைகளிலே, அதாவது 1999-லே நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், அன்றைக்கு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது துணை மின் நிலையம் ஒன்றை வழங்கினார்கள். கடந்த 5 ஆண்டு காலம் அந்தத் திட்டம் கிடப்பிலே இருந்து, அதற்குப்பிறகு அவரே வந்து இப்போது இந்த ஆட்சியிலே திறந்து வைத்த ஒரு நிலைமையும் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, எப்படி நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) 10 பாலங்கள் இங்கே கொடுத்து ஒரு பாலம் கட்டி முடிக்காமல், இன்னும் அவர்கள் ஆட்சியிலே முடிக்காமல் இருக்கிறதோ, அதைப்போலவே என்னுடைய தொகுதியிலேயும் திருமுக்கூடல் பாலம் ஓர் உயர்மட்டப் பாலம், அதுவும் கட்டி முடிக்கப்படாமல் கடந்த 5 ஆண்டு காலத்திலே, அதாவது 2000–லே அடிக்கல் நாட்டப்பட்ட, அந்த உயர்மட்ட மேம்பாலம் இன்றைக்கு வரைக்கும் அந்த வேலை முடிக்கப்படாமல் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எங்களுடைய மாவட்ட அமைச்சரான மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டு இன்றைக்கு அந்தப் பணிகளையெல்லாம் முடுக்கிவிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். No question of Point of order. (குறுக்கீடுகள்) என்ன இது? அவர் என்ன சொல்லியிருக்கிறார்? அப்போது கொடுக்கப்பட்ட பணிகளை இப்போதுதான் தொடங்கி இருக்கிறார்கள் என்றார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No question of Point of order. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, முதலில் உட்காருங்கள்.



**திரு. க. சுந்தர்:** இன்றைக்கு அந்த வேலைகள் மிக வேகமாக நடக்கின்றன. ஆக, இப்படி பல திட்டங்கள், 1996–2001-லே கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரசு, ஒரேயொரு கோரிக்கையை மட்டும்தான் நிறைவேற்றாமல் போய்விட்டது. அது, நான் 1989–90-லேயே இந்தச் சட்டமன்றத்திலே வைத்த கோரிக்கை. (குறுக்கீடுகள்) தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம், உத்திரமேரூர் ஒன்றியம். 73 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒன்றியம். (குறுக்கீடுகள்) எனவே, அந்த ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற அந்த ஒரேயொரு கோரிக்கைதான் 1996–2001-லே இருந்து நிலுவையிலே இருக்கிற ஒரு கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. சுந்தர்:** எனவே, அந்த ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். உத்திரமேரூரிலே போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டும். அரசு கலைக் கல்லூரியை அமைக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

கலைஞர் ஆட்சியிலே கூட்டுறவு; இந்தக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பது கூட்டுறவுத் தத்துவத்தை உயிர்ப்பிக்கின்ற வகையிலே இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே பல ஆலைகள்; 1996–2001-லே கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் இயங்க முடியாமல் இருந்தபோது, முதல்வர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு அந்த ஆலைகளை எல்லாம், கூட்டுறவு நூற்பாலைகளை எல்லாம் இயக்கினார்கள். மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்கப்பட்டது.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. சுந்தர்:** கடந்த ஆட்சிக் காலத்திலே கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட அந்த வையாவூர் கூட்டுறவு நூற்பாலையும், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் முந்தைய ஆட்சியாளர்கள் காலத்திலே மூடப்பட்டன. எனவே, அந்த ஆலைகளையெல்லாம் மீண்டும் கலைஞர் அவர்கள் திறக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) தமிழைச் செம்மொழியாக்கிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், சூரியநாராயண சாஸ்திரி அவர்களுக்கு அஞ்சல் தலை வெளியிட்டதைப் போன்று, நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு, அதாவது அவர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதி அன்று அந்த உலகத் தமிழ் மாநாடு நடக்கும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை பொது விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாரதிதாசன்,

"எல்லார்க்கும் நல்லின்பம்

எல்லார்க்கும் செல்வங்கள்

எட்டும் விளைந்ததென்று

கொட்டுமுரசே – வாழ்வில்

கட்டுத் தொலைந்ததென்று

கொட்டுமுரசே!

இல்லாமை என்னும்பிணி

இல்லாமல் கல்விநலம்

எல்லார்க்கும் என்றுசொல்லி

கொட்டுமுரசே – வாழ்வில்

பொல்லாங்கு தீர்ந்ததென்று

கொட்டுமுரசே!



சான்றாண்மை இவ்வுலகில்

தோன்றத் துளிர்த்ததமிழ்

மூன்றும் செழித்ததென்று

கொட்டுமுரசே – வாழ்வில்

ஊன்றிய புகழ்சொல்லிக்

கொட்டுமுரசே!

ஈன்று புறந்தருதல்

தாயின்கடன்! உழைத்தல்

எல்லார்க்கும் கடனென்று

கொட்டுமுரசே! – வாழ்வில்

தேன்மழை பெய்ததென்று

கொட்டுமுரசே."

என்று பாடினார். துன்பங்களெல்லாம் மறைந்து, இன்று இல்லாமையெல்லாம் ஒழிந்து, தேன்மழை பெய்தது. நல்லாட்சி கலைஞர் தலைமையில் இன்று மலர்ந்தது என்று கொட்டுமுரசே என்கின்ற நிலை இன்று (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பி இருப்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எனக்கு முன்னாலே இங்கே பேசிய (குறுக்கீடு) ஜால்ரா போடுகின்றவர்களெல்லாம் வந்து இங்கே ஜால்ரா அடித்தாலும்கூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி ஆளுங்கட்சி வரிசையைப் பார்த்து, நக்கல் செய்கின்றார்கள், நையாண்டி செய்கின்றார்கள் என்று செய்யாததையெல்லாம் செய்ததாக இங்கே பதிவு செய்கின்றார்கள். இப்போது அவர்கள் செய்துகொண்டு இருக்கின்றார்களே, அதற்கு என்ன அர்த்தம் என்று அவரே விளக்கம் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். உங்கள் உறுப்பினர்களையெல்லாம் கொஞ்சம் கட்டுப்பாட்டோடு இருக்கச் சொல்லுங்கள். அளவுக்கு மீறி நடக்கக் கூடாது. அதேமாதிரி, ஆளும் கட்சியில் இருக்கின்றவர்களும், உறுப்பினர்கள் யாரையும் தனிப்பட்ட முறையில் பேசக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய துணைத் தலைவர் சொன்னாலும், எப்பொழுதும் திரு. ஜெயக்குமார் மீறி எழுந்து நின்று கொண்டேயிருக்கின்றார். அவர்கள் இரண்டு பேருக்கும் ஏதாவது பிரச்சினையா என்று தெரியவில்லை. இதேமாதிரிதான் அடிக்கடி எப்பொழுது பார்த்தாலும் இவர் சொன்னால் அவர் எழுந்து நிற்கின்றார். தலைமைக்குக் கட்டுப்படாத கூட்டம் நிறைய இருக்கிறது. அதையும் கொஞ்சம் கட்டுப்படுத்தச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். விவாதம் நீண்டுகொண்டே போகும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இன்று எவ்வளவுதான் முயற்சி செய்து, என்னதான் செய்தாலும், நிதிநிலை அறிக்கையில் இருக்கக்கூடிய விஷயங்களை அவர்களால் மறைத்துவிட முடியாது. ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும், ஆதவன் மறைவதில்லை. தேர்தல் அறிக்கையிலே எங்கள் கூட்டணி சார்பாக தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்று பல திட்டங்களைச் சொன்னபோது, அது சாத்தியமே இல்லை என்று சொன்னவர்கள், இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இந்த அவையிலே பதவி வகித்துக் கொண்டிருக்கின்றவர்கள், பிறகு அது சாத்தியம் என்று கலைஞர் அவர்களால் இங்கே இந்த ஒருசில நாட்களிலேயே நிரூபித்துவிட்ட பிறகு, இன்று அவர்கள் மிகவும் மனம் வெதும்பி, என்ன செய்யலாம் என்று திட்டமிட்டுக்கொண்டிருந்த நிலையை இங்கே பார்க்க முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-20

இன்னும் சொல்லப் போனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு பேசுகிறபோது முன்னாள் முதல்வருடைய பாதுகாப்பைப் பற்றியும், இன்னாள் முதல்வருடைய பாதுகாப்பு பற்றியும் சொல்கிறபோது சொன்னார்கள். முன்னாள் முதல்வருக்கு ஏதாவது ஒன்று நிகழ்ந்தால் இன்றைய முதல்வர்தான் அதற்குப் பொறுப்பு என்று சொன்னார்கள். உண்மைதான். ஏனென்று சொன்னால், இன்று முன்னாள் முதல்வருடைய உயிரைக் காப்பாற்றக்கூடிய வல்லமை, ஆற்றல் இன்றைய முதல்வருக்கு மட்டுமேதான் இருக்கிறது என்பதை உணர்த்தி நிற்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இங்கே சொல்கிறபோது சொன்னார்கள். குடும்பத்திற்குள்ளே ஏதாவது பிரச்சினை என்று சொன்னால் என்ன செய்வது என்று. அந்தக் குடும்பத்திற்குள்ளே ஏதாவது பிரச்சினை இருந்தாலும்கூட உளவாளிகளைக் கொண்டு, (குறுக்கீடு) சிறைப்பட வைத்து...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர்களை அமைதியாக உட்காரச் சொல்லுங்கள். அமைதியாக உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தடுக்க முடியும் என்கிற வல்லமையைப் படைத்தவர்தான் இன்றைய முதல்வர் என்பதை நாம் நிச்சயமாக உணர முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்களை அமைதியாக உட்காரச் சொல்லுங்கள். பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக உட்காரச் சொல்லுங்கள். உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். மாண்புமிகு திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே காலையிலே கலசப்பாக்கம் சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, கடந்த கால ஆட்சியிலே தேனும், பாலும் ஓடியது, ஏதோ நாடும் எல்லாம் சொர்க்கமாக மாற்றப்பட்டது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியானால் இப்போது அவர் வைத்த வாதம்

அவருடைய தொகுதியிலே பல கிராமங்கள் கண் மூடிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னாரே அதனுடைய பொருள் என்ன? கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே எல்லா கிராமங்களும் இருளிலே மூழ்கடிக்கப்பட்டது என்று நீங்களே ஒப்புக்கொள்கிறீர்களா என்பதை நீங்கள் இந்த மன்றத்திலே சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, எனக்கு முன்னாலே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய தலைவர்களைப் பற்றி புகழ்வது இந்த அவையிலே மரபு என்று சொன்னார்கள். அது மரபே அல்ல. உங்கள் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு தவறான அணுகுமுறை. (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்குமுன் இந்த மாமன்றம் எத்தனையோ பேர் வாதங்களை கேட்டறிந்த மன்றம். இதிலே புகழுக்கென்று ஏதோ ஒருசில வார்த்தைகள் சொல்லலாம், நன்றி சொல்லலாம். ஆனால், பேசுகிற நேரத்திலே நீங்கள் முக்கால் பாகம் முதல்வரையும், மற்றவர்களையும் புகழ்ந்து பேசி இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்கி இருக்கிறீர்கள். இனியும் நீங்கள் வீணாக்க வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன். ஒரு நல்ல மரபை உருவாக்குங்கள். (கூச்சல்-குழப்பம்) ஆகவே, நல்ல மரபை நீங்கள் உருவாக்க வேண்டும். இப்படி எல்லாம் கூச்சல் குழப்பம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குள்ளே போவதற்கு முன்னால் சில கோரிக்கைகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் subject-க்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் பேசிக் கொண்டிருப்பது எல்லாம் subject தான். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் நீங்கள் ஒரு தீர்ப்பை வழங்குகிறீர்கள். அந்தத் தீர்ப்பு எதிர்க்கட்சிக்குச் சாதகமாக வழங்கப்படுகிறது, ஆளுங்கட்சிக்கு எதிராக வழங்கப்படுகிறது, அல்லது ஆளுங்கட்சிக்குச் சாதகமாக வழங்கப்படுகிறது என்ற கருத்துகள் இங்கே பரிமாறப்படுகிறது. ஆனால், நீங்கள் நடுநிலையாகச் சொல்லும்போது அதை ஏற்றுக்கொண்டவர்கள், திரும்பவும் ஒரு தீர்ப்பை வழங்குகிறபோது திரும்பவும் ஆர்ப்பாட்டம் செய்தால், அது என்ன என்றே புரிந்துகொள்ள முடியவில்லை. அ.இ.அ.தி.மு.க. சார்பில் அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டால் என்ன சொல்கிறார்கள் அவர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சிகளும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்குள்ளே போவதற்கு முன்னாலே சில கோரிக்கைகளை நான் முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கோரிக்கையை வைத்துவிட்டு விவாதத்திற்குப் போகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூருக்கு வருகை தந்து முதல் சுதந்திரப் போர் என்று இந்திய வரலாற்றில் வர்ணிக்கப்படுகின்ற சிப்பாய் புரட்சி 1806 ஆம் ஆண்டு நடைபெற்றதற்கான 200-வது நிறைவு விழா. ஆண்டு விழாவிலே கலந்து கொள்வதற்காக வந்து வேலூருக்கு வந்து அவர்கள் மிகச் சிறப்பாக அந்த விழாவை நடத்தினார்கள். அதற்காக தமிழக

அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் நினைவாக ஒரு சின்னத்தை உருவாக்குவேன். அதற்காக ஒரு நினைவுச் சின்னம் உருவாக்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து விட்டு வந்தார்கள்.

*பிற்பகல் 1-25*

உண்மையிலேயே நூற்றுக்கணக்கான இந்திய சிப்பாய்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, முதன்முதலில் வெள்ளையனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த அந்தப் புண்ணிய பூமியில் ஒரு நினைவு மண்டபத்தை அந்த வீரர்களுக்கு உடனடியாக எழுப்புவதற்கும், வேலூரில் நான்கு ரோடுகள் தொடங்குகிற இடத்திலே நான்கு முகப்புகளிலும் ஒரு நினைவு வளைவை உருவாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த 200-வது ஆண்டை நினைவுகூரும் வகையில், இது நீண்ட நாள் கோரிக்கை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 1991-லிருந்து நான் தொடர்ந்து கோரி வருகிற கோரிக்கை. எங்களுடைய வேலூர் நகராட்சியை தயவுசெய்து, நீங்கள் மாநகராட்சியாக அந்த 200-வது ஆண்டு விழாவை நினைவுகூரும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதை ஒரு மாநகராட்சியாக உடனடியாக நீங்கள் மாற்றி அதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். திருப்பூரோடு சேர்ந்து இந்த வேலூரும் மணம் பெற வேண்டும். அதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாலாறு பிரச்சினை. மூன்று நாட்களுக்கு முன்னால் ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டிக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அந்த அணை கட்டுவதற்கான G.O. ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்? எவ்வளவு நேரமாகும்? (குறுக்கீடு) இல்லை, எவ்வளவு நேரமாகும் என்று சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 30 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள்?



**திரு. சி. ஞானசேகரன்:** 30 நிமிடங்கள், 30 நிமிடங்கள் வேண்டும். இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 நிமிடங்களா? சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே இப்போது அவர்கள் 250 கோடி ரூபாயில (குறுக்கீடு) நான் பேசிக்கொண்டிருக்கும்போது இப்படிப்பொரு இடையூறு ஏற்பட்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பாண்டுரங்கன், இந்த மாதிரி குறுக்கீடு இருக்கக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். இது மரபற்ற செயல். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** நான் பேசியிருக்கிறேன். I am not yielding. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** When I am not yielding, why he is interfering?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையில் குறுக்கீடு இருக்கக் கூடாது. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை பிறப்பிக்கப்பட்டு 250 கோடி ரூபாயில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எச்சரிக்கை செய்கிறேன் திரு. பாண்டுரங்கன். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலில்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்று 160 அடி உயரத்திற்குப் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான பணிகளை ஆந்திர அரசு தொடங்கியிருக்கிறது. பாலாறு என்பது எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கும், அதன் பக்கத்தில் இருக்கக்கூடிய திருவண்ணாமலை, அதேபோல திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு ஜீவநதியாக எங்களையெல்லாம் காப்பாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஆறுதான் பாலாறு. இந்தப் பாலாற்றில் கடந்த சில ஆண்டுகளாகப் பார்ப்போமென்று சொன்னால், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட மழை இல்லாமல் வறண்டு போய்

எங்களுடைய மாவட்டம் குடிநீருக்கே திண்டாடக்கூடிய அளவிற்கு ஒரு கடுமையான சூழல் ஏற்பட்டது. இப்போது அணையைக் கட்டிவிட்டார்கள் என்று சொன்னால், நிச்சயமாக எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் எங்களுக்குக் குடிநீருக்கே பெரிய ஒரு போராட்டம் ஏற்படக்கூடிய ஒரு சூழல் ஏற்படும். நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கு தொடுக்கப்பட்டது. அது எந்த நிலையில் இருக்கிறது? மீண்டும் இருக்கக்கூடிய, அப்போதெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தபோது ஆந்திர அரசு அணை கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கவில்லை. எந்தவிதமான பணியையும் அவர்கள் தொடங்கவில்லை. ஆனால், இப்போது அவர்கள் குறுக்கே அணை கட்டுவதற்கான அரசாணை பிறப்பித்து, அதற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுத்துவிட்டிருக்கிற காரணத்தினாலே, தமிழக அரசு உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே அதற்கு ஒரு தடையாணை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எங்களுடைய மாவட்டத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னால் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்காக ஆந்திரத்தினுடைய தலைமைச் செயலாளர் அவர்களும் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் எல்லாம் இங்கே வந்து பேசியிருக்கிறார்கள். அப்போது ஏதாவது பேசப்பட்டதா? அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியாவது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆந்திர மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளர் கிருஷ்ணா குடிநீரை எப்போது பகிர்ந்துகொள்ளலாம் என்பதைப் பற்றிப் பேசுவதற்காக வந்திருந்தார்கள். இது பற்றிப் பேச்சு நடக்கவில்லை. இது பற்றி அவர்கள் G.O.-கூட போடவில்லை என்றுதான் அவர்களும் விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நிதி ஒதுக்கியதாக பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகளெல்லாம் தவறான செய்திகள் என்றுகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், நானும் பொதுப் பணித் துறையினுடைய சார்பிலே விரைவிலே அங்கே செல்ல இருக்கிறோம். இது குறித்தும், நேரிலே பேசுவதற்கு அடுத்த மாதம் 5 ஆம் தேதி செல்லவிருக்கிறோம். இதுகுறித்தும், அந்த அணைக்கட்டு பற்றிய விவகாரங்கள் குறித்தும் பேசுவதாக இருக்கிறோம்.





பிற்பகல் 1-30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அதேபோல உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளரையும், பொதுப் பணித் துறைச் செயலாளரையும், நீங்களே ஆந்திராவிற்குச் சென்றாவது அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா, கட்டுமானப் பணிகள் அங்கே தொடங்கப்பட்டிருக்கிறதா என்பதை நீங்கள் தயவுசெய்து உடனடியாக ஆய்வு ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் நாளையும் தொடர்ந்து உரையாற்றலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-07-2006) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*4. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

*5. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதும் இல்லை–

*****

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227380
சென்னை-600 008
நூலகம்